# குறிக்கோள் பற்றிய விளக்கம்
# (தவ்ஸீஹே மராம்)

உருது மூலம்

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)**
**வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி**

தமிழாக்கம்

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு (வடமண்டலம்)
**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

Copyrights Reserved

**Kurikol Patriya Vilakkam**

Tamil version of

**'Tauzeeh-e-Maraam' (Urdu)**

By Hadhrath Mirza Ghulam Ahmad
(Imaam Mahdi and The Promised Massiah)

Translated By
**Moulavi O.M. Muzzammil Ahmad H.A.**

**First Edition 2013**

**ISBN : 978 81 7912 283 9**

Published by :

**Tamilnadu Book Publishing Committee (North Zone)**
**AHMADIYYA MUSLIM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamilnadu.
**Website: www.alislam.org\tamil**
**E-mail: amjchennai@yahoo.in**

For:
**NAZAARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya, Qadian

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

**தவ்ஸீஹே மராம் (குறிக்கோள் பற்றிய விளக்கம்)** என்ற இந்த நூலை வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் மஸீஹுமாகத் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 1891-ம் ஆண்டில் இயற்றினார்கள். மேலும் இதனை 'ஃபத்ஹே இஸ்லாம்' (இஸ்லாத்தின் வெற்றி) என்ற தமது நூலின் இரண்டாம் பகுதியாகக் குறிப்பிட்டார்கள். மேலும் இதில் அவர்கள் மஸீஹ் என்ற தமது வாதத்திற்கு எதிராக கிளம்பவிருக்கும் ஆட்சேபணைகளுக்கு தெளிவான பதிலை வழங்கியுள்ளார்கள். மேலும் தமது வாதத்தை விளக்கமாகவும், சான்றுகளுடனும் புரிய வைத்துள்ளார்கள். மேலும் இஸ்லாமிய அறிஞர்களிடம் பின்வறுமாறு கூறினார்கள்:

"மஸீஹுக்கு ஒப்பானவர் தொடர்பாக இந்த எளியவன் எழுதியிருக்கும் இந்தக் கருத்து ஒட்டு மொத்தமாக ஃபத்ஹே இஸ்லாம், தவ்ஸீஹே மராம், இஸாலே அவ்ஹாம், ஆகிய மூன்று நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே இந்த மூன்று நூல்களையும் கவனமாகப் பார்க்காத வரை எவ்வித எதிரான கருத்தையும் வெளிப்படுத்துவதற்கு அவசரப்படாமல் இருப்பது பொருத்தமானதாகும்."

'இஸ்லாத்தின் வெற்றி' என்ற நூல் தமிழில் வெளிவந்துவிட்டது. தவ்ஸீஹே மராம் என்ற நூலின் தமிழாக்கம் 'நபி வழி' மாத இதழில்தொடராக வெளிவந்தது. தற்போது அது நூல் வடிவில் உங்கள் கைகளில் தவழ்கின்றது. தமிழ் கூறும் நல்லியல்பு கொண்டவர்களுக்கு இந்நூல் பயனுள்ளதாக அமைவதற்கு அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

-வெளியீட்டாளர்கள்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஈசா வருவார் என்பது அவருக்கு ஒப்பான ஒருவர் வருவார் என்பதாகும் | 7 |
| 2. | வானத்திலிருந்து இறங்குதல் என்பதற்கு ஈசா (அலை) அவர்கள் கொடுத்த விளக்கம் | 9 |
| 3. | இயேசுவின் தீர்ப்பின்படி, அவரது இரண்டாவது வருகையைப் புரிந்து கொள்வது எளிது | 11 |
| 4. | ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதற்கான 3 சான்றுகள் (அடிக்குறிப்பு) | 13 |
| 5. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இல்லாத ஒரு சிறப்புத்தன்மை ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களுக்கு இருப்பதாக நம்புவது அவமரியாதையாகும் | 14 |
| 6. | ஹதீஸின்படி இப்னு மர்யம் முஸ்லிம்களிலிருந்து தோன்றும் ஒருவர் ஆவார் | 15 |
| 7. | சிலுவையை முறித்தல், பன்றியைக் கொல்லுதல், ஜிஸ்யாவை நீக்குதல் என்பதன் கருத்து | 17 |
| 8. | இரண்டாவது மஸீஹின் நிலை பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியவை | 19 |
| 9. | ஹதீஸில் இரண்டு வகையான மஸீஹ் பற்றிய குறிப்பு | 19 |
| 10. | நுபுவ்வத்தின் வாசல் எல்லா வகையிலும் அடைக்கப்பட்டு விடவில்லை | 22 |
| 11. | ஷரீஅத்தின் வஹியைக் கொண்டுள்ள முழுமையான நுபுவ்வத் முடிந்து விட்டது | 23 |
| 12. | ஈஸா (அலை) அவர்களிடமும், எளியவனிடமும் ஒப்புமையுடையவையாக இருக்கும் சிறப்புத்தன்மைகளும், ஆன்மீக ஆற்றல்களும் | 23 |
| 13. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்தைப் புரிந்து கொள்ளத் தேவையான நெருக்கம், அன்பு ஆகியவற்றின் 3 படித்தரங்கள் | 26 |
| 14. | 3-ஆவது பதவி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும்தான் கிடைத்தது | 28 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 15. | பைபிளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகையை உருவகமாக இறைவனின் வருகையாகக் கூறப்பட்டுள்ளது | 30 |
| 16. | பைபிள் பழைய ஏற்பாட்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உருவகமாக இறைவன் என்றே கூறப்பட்டுள்ளது | 31 |
| 17. | வானவர்களின் பணிகள் பற்றிய உண்மை நிலை | 33 |
| 18. | மறு பிறவிக் கொள்கை பற்றிய மறுப்பு | 35 |
| 19. | வானவர்களின் நிலை பற்றிய விளக்கங்கள் | 36 |
| 20. | வஹியை இறக்குவதற்கு வானவர்கள் ஊடகமாக பயன்படுவது மரியாதைக் குறைவானதன்று | 38 |
| 21. | பௌதீக அமைப்பில் வானவர்கள் இருப்பது குறைபாடு இல்லை என்றால், ஆன்மீக அமைப்பில் இருப்பது எப்படி குறையாக இருக்க முடியும்? | 40 |
| 22. | இது பற்றி இந்துக்கள் கூறும் ஆட்சேபணைக்கு பதில் | 40 |
| 23. | வானவர்கள் மனிதர்களை விட உயந்தவர்களா? | 43 |
| 24. | திருக்குர்ஆன் எடுத்துரைக்கும் இறைவனின் சிறப்புப் பண்புகள் | 44 |
| 25. | முழுமையான மனிதனின் ஆன்மா சூரியன், சந்திரனின் சிறப்புத்தன்மைகளைக் கொண்டுள்ளது | 47 |
| 26. | சூரியனைப் போன்றே மனிதனுக்கும் பல நியமனங்கள் உள்ளன | 48 |
| 27. | முழுமையான மனிதனுக்கு இருண்ட இரவுடனும் ஓர் ஒப்புமை உள்ளது | 48 |
| 28. | முழுமையான மனித ஆன்மாவுக்கு வானத்துடனும் ஓர் ஒப்புமை உள்ளது | 49 |
| 29. | முழுமையான மனிதனுக்கு பூமியுடனும் ஓர் ஒப்புமை உள்ளது | 50 |
| 30. | சூரா அஷ்-ஷம்ஸில் சத்தியம் செய்து கூறப்பட்ட அனைத்து பொருள்களின் ஒட்டு மொத்த தொகுப்புதான் மனித ஆன்மா | 51 |
| 31. | இறைவன், தான் படைத்த பொருள்களின் மீது சத்தியம் செய்ய வேண்டிய தேவை என்ன என்பதற்கான பதில் | 51 |
| 32. | சத்தியம் செய்து கூறுவது சாட்சிக்குப் பகரமாக விளங்குகிறது | 53 |
| 33. | முழுமையான ஆன்மா காணும் ஆன்மீகக் காட்சி எனும் ஒளியானது சூரியனின் ஒளி, வெப்பத்தை விட பல மடங்கு அதிகமானது | 53 |
| 34. | மனித ஆன்மாவின் சிறப்புத் தன்மைகளைக் கண்டு கொள்வதற்கான வழிமுறைகள் | 55 |
| 35. | மனித ஆன்மாவை அல்லாஹ் ஒட்டகத்துடன் ஒப்பிட்டுக் கூறியதன் தத்துவம் | 58 |
| 36. | மனித ஆன்மாவின் மீது வானவரின் தாக்கம் இரு வகையில் ஏற்படுகிறது | 61 |
| 37. | காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மீது இறங்கிய வஹியின் தனித்தன்மை | 63 |
| 38. | இறைவனுடன் எல்லா படைப்பினங் களுக்கும் இருக்கும் தொடர்பு உயிருக்கு உடலுடன் இருக்கும் தொடர்பைப் போன்றது | 64 |
| 39. | வஹி தொடர்பாக ஜிப்ராயீலுக்கு இருக்கும் 3 பணிகள் | 71 |

# குறிக்கோள் பற்றிய விளக்கம்

ஹஸ்ரத் மஸீஹிப்னு மர்யம் அதே பௌதீக உடலுடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றார்; பின்னர் அவர் ஒரு காலத்தில் வானத்திலிருந்து இறங்கி வருவார் என்று ஓரளவு கருத்து வேறுபாட்டுடன் முஸ்லிம்களும், கிறித்தவர்களும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்த எண்ணம் தவறு என்பதை நான் இந்த நூலிலேயே எழுதியிருக்கின்றேன். மேலும் இறங்குதல் என்பதன் பொருள், உண்மையில் மர்யமின் மகன் ஈஸா (அலை) இறங்குவார் என்பதன்று; மாறாக, உவமையாக ஈஸாவுக்கு ஒப்பான ஒருவர் வருவதைப் பற்றி செய்தி கூறப்பட்டிருக்கிறது என்றும் அது இறை தகவலின் படியும், இறையறிவிப்பின் படியும் இந்த எளியவன்தான் என்றும், நான் குறிப்பிட்டிருக்கிறேன். தெளிவான இறையறிவிப்பின் மூலம் நான் நிலைப்படுத்தப்பட்டுள்ள எனது இந்த கருத்து வெளியான பிறகு பல எழுதுகோல்கள் எதிராகக் கிளம்பும் என்றும், வியப்பினாலும் மறுப்பினாலும் நிரம்பிய கூச்சல் பொதுமக்களிடம் உருவாகும் என்றும் எனக்கு உறுதியாகத் தெரியும்.

மேலும் நான் விஷயத்தை நீட்டுவதை தவிர்க்க வேண்டும் என்றும் ஆட்சேபணைகள் எழும் போது அவற்றை நீக்குவதற்காக ஆட்சேபணை செய்பவர்களின் சிந்தனைகளின் நிலைமைகளுக் கேற்ப தெளிவான காரணங்களையும், சான்றுகளையும் எடுத்துரைக் கலாம் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது இதில் இந்த குறை இருப்பதாக எனக்கு தெரிகின்றது. அதாவது, நான் எழுதத் தவறிய நிலையில், பொது மக்கள் மட்டுமல்லாது முஸ்லிம்களில்

சிறப்பானவர்களும் – அவர்களில் சிலர் மவ்லவிகளும் ஆவர் – தமது வீழ்ச்சியின் நிலையில் வீழ்ந்து கிடப்பதனால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைமதியின் காரணமாகவும், ஒரு பழமையான நம்பிக்கையின் தாக்கத்திற்குள்ளான காரணத்தினாலும் தேவையில்லாமல் எனது விஷயத்தை மறுப்பதற்கு வாதிகளாக நின்றுவிடக் கூடாதே என்றும், தமது வாதத்தினை பரிந்துரைத்தவாறு அந்த வாதத்தின் உண்மையே நிரூபணமாக வேண்டும் என விரும்புவர். எனவே வாதியாக மாறி எதிர்த்து நிற்பது அவர்களுக்கு பெரும் வெட்கத்திற்குக் காரணமாகிவிடும். அதிலிருந்து வெளியேறுவதும், தம்மால் பரப்பப்பட்ட கருத்திலிருந்து திரும்புவதும் அவர்களுக்கு கடினமாகிவிடும்-ஏன்- சாத்திய மற்றதாகிவிடும்.

ஏனெனில் ஒரு மவ்லவி தன் கருத்தை பொது மக்களிடம் வெளிப்படுத்தி விடும் போது – அதனை தனது தீர்க்கமான முடிவாகக் குறிப்பிட்டுவிடும் போது பிறகு அந்தக் கருத்திலிருந்து திரும்புவது அவருக்கு மரணத்தை விட மோசமானதாகத் தெரிகிறது. எனவே நான் அல்லாஹ்வுக்காக அம்மக்களின் மீது கருணையை வெளிப்படுத்தியவாறு, அவர்கள் எதிர்ப்பில் வந்து நின்று அடம், பிடிவாதம் எனும் சோதனையில் சிக்கி விடுவதற்கு முன் ஓர் அறிவுடையவருக்கு, நீதியை பேணுபவருக்கு, உண்மையைத் தேடுபவருக்கு திருப்தி அளிப்பதற்குப் போதுமானதாக இருக்கும் அளவுக்கு நானே அவர்களுக்கு தெளிவாகவும், தக்க சான்றுகளுடனும் புரிய வைத்து விட வேண்டும் என விரும்பினேன். பின்னர் மீண்டும் எழுதவேண்டிய தேவை ஏற்படும் என்றால், அது மிகவும் பாமரர்களாகவும், குறைமதியுடையவர்களாவும் இருக்கின்றவர் களுக்காகத்தான் தேவை ஏற்படும். அவர்களுக்கு வானத்தின் வேதங்களின் உவமைகள், மரபுத்தொடர்கள், நுட்பமான ஞானங்கள், விளக்கங்கள், ஆகியவற்றைப் பற்றி கொஞ்சமும் தெரியாது. இன்னும் சொல்லப்போனால் தொடக்கூட முடியாது என்ற மக்களைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.✸

✸முழுமையான வசனம் : லா யமஸ்ஸுஹூ இல்லல் முதஹ்ஹரூன் என்பதாகும். பொருள்: தூய்மையாக்கப்படுவர்களைத் தவிர வேறெவரும் அதனைத் தொடமாட்டார்கள். (56:80) (அதாவது அதன் மகத்துவததையும் உண்மையையும் உணர முடியாது) – மொழிபெயர்ப்பாளர்.





இப்போது நாம் முதலில் தெளிவு படுத்துவதற்காக ஒன்றை எழுதுகின்றோம். பைபிள் மற்றும் நமது நபிமொழிகள், இன்னபிற நூல்கள் மூலமாக இதே **பௌதீக உடலுடன் வானத்திற்கு சென்றதாகக் கருதப்படுகின்ற இரண்டு நபிமார்களில் ஒருவர் யோவான்** ஆவார். அவர் பெயர் எலியா, இல்யாஸ் என்பதுமாகும். **இரண்டாமவர் மர்யமின் மகன் மஸீஹ்.** அவரை ஈசா என்றும், இயேசு என்றும் கூறுகின்றனர். இவ்விரு நபிமார்களைக் குறித்தும் பைபிள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றின் சில வசனங்கள், அவ்விருவரும் வானத்தின் பக்கம் உயர்த்தப் பட்டார்கள் என்றும், பிறகு ஒரு காலத்தில் பூமியில் இறங்கி வருவார்கள் என்றும், நீங்கள் அவர்களை வானத்திலிருந்து வருவதைக் காண்பீர்கள் என்றும் குறிப்பிடுகின்றன.✸

**பைபிளில் கூறப்பட்டுள்ள ஓரளவுக்கு இதே மாதிரியான சொற்கள் நபிமொழிகளிலும் காணப்படுகின்றன.** ஆனால் பைபிளில் யோவான், எலியா என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கின்ற ஹஸ்ரத் இல்யாஸ் வானத்திலிருந்து இறங்குதல் என்பது ஸகரிய்யாவின் மகன் யஹ்யா தோன்றியதால் நிறைவேறிவிட்டது என இஞ்சீலில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், 'நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், வருகிற எலியா இவர்தான்' என ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மிகத்தெளிவான வார்த்தைகளில் கூறுகிறார்கள். (பைபிள் புதிய ஏற்பாடு மத்தேயு 11:14 காண்க)

எனவே ஒரு நபியின் தீர்ப்பின் மூலமாக வானத்திற்கு

✸ **பழையஏற்பாடு** : எலியா சுழல் காற்றிலே பரலோகத்துக்கு ஏறிப்போனான் (II இராஜாக்கள் 2:11)

இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். (மல்கியா 4:5)

**புதிய ஏற்பாடு** : நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிற எலியா இவன் தான். (மத்தேயு 11:14)

எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். '..... அவர் யோவான்ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள். (மத்தேயு 17 :12,13)
– மொழிபெயர்ப்பாளர்.

ஏறிப்போன, பிறகு மீண்டும் ஒரு காலத்தில் இறங்குகின்ற ஒருவரை அதாவது யோவானைப் பற்றிய வழக்கிற்கு தீர்ப்பு கிடைத்து விட்டது. மேலும் மறுபுறம் 'இறங்குதல்' பற்றிய உண்மை மற்றும் நிலைமை தெரிந்து விட்டது.

இதன்படி, வானத்திலிருந்து இறங்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட யோவான் ஹஸ்ரத் மஸீஹின் காலத்தில் எவ்வாறு இறங்கினார் என்றால், ஸகரிய்யாவின் வீட்டில் அதே இயல்பான, தன்மையைக் கொண்ட மகனாகப் பிறந்தார். அவர் பெயர் யஹ்யா என்பதே இஞ்சீலின் அடிப்படையில் அனைத்து கிறித்தவர்களின் ஒன்றுபட்ட கொள்கையாக இருக்க வேண்டும். ஆனால் யூதர்கள் (எலியாவாகிய) அவர் இறங்குவார் என இப்போது வரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். யூதர்களின் கூற்றுப்படி, (எலியாவாகிய) அவர் உண்மையிலேயே வானத்திலிருந்து இறங்குவார்; முதலில் பைத்துல் முகத்திஸின் மினாராக்களின் மீது இறங்குவார். பிறகு யூதர்கள் அவரை அங்கிருந்து ஏதாவதோர் ஏணி மூலமாக கீழே இறக்குவார்கள் என்பதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் யோவான் இறங்கியது தொடர்பாகக் கூறிய விளக்கம் யூதர்களுக்கு முன்னால் எடுத்துக் கூறப்பட்டால் உடனே அவர்கள் கோபத்தால் நிரம்பி ஹஸ்ரத் மஸீஹ் (அலை) மற்றும் அவ்வாறே ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்களைப் பற்றி தவறான வார்த்தைகளைக் கூறுவது மட்டுமல்லாது அந்த நபியின் கூற்றை மார்க்கத்திற்குப் புறம்பான ஒரு சிந்தனையாகக் கருதுகின்றனர். **எப்படியிருந்த போதிலும், வானத்திலிருந்து இறங்குதல் என்ற சொல் என்ன விளக்கத்தைக் கொண்டிருக்கிறதோ அதன் உண்மை நிலை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து தெளிவாகி விட்டது.** மேலும் அவர்களின் கூற்றிலிருந்தே யோவான் வானத்திலிருந்து இறங்கினார் என்ற

✱ அடிக்குறிப்பு:- இந்த ஆடைகள் கம்பளியாக இருக்குமா? அல்லது பட்டாக இருக்குமா? உதாரணமாக, சூடியா (வரிகளைக் கொண்ட ஒரு வகை பட்டுத் துணி), குல்பதன் (வரிகளைக் கொண்ட இன்னொரு வகை பட்டுத்துணி), அத்லஸ் (ஒரு பக்கம் பளபளப்பான ஒருவகை பட்டுத் துணி), கம்க்வாப் (ஜரிகை பூ வேலை செய்த பட்டுத் துணி), ஸர்பஃப்த் (வெள்ளி அல்லது தங்க ஜரிகை நூலால் நெய்யப் பட்ட பட்டுத் துணி),





சண்டைக் கும் ஒரு தீர்வு கிடைத்துவிட்டது. மேலும் அவர் இறங்கினார் என்றால் எவ்வாறு இறங்கினார் என்ற விஷயமும் தெளிவாகி விட்டது.

ஆனால் மஸீஹ் இறங்குவதைப் பற்றி, அவர் மிக அழகிய, மன்னருக்கான ஆடைகளை, விலைமதிப்புள்ள ஆடைகளை அணிந்தவாறு வானவர்களுடன் வானத்திலிருந்து இறங்குவார் என இன்று வரை மிகவும் ஆரவாரத்துடன் கூறப்படுகின்றது.✱

ஆனால் அவர் எங்கு இறங்குவார் என்பதில் இந்த இரு சமுதாயங்களுக்கிடையே ஒன்றுபட்ட கருத்து இல்லை. புனித மக்காவில் இறங்குவாரா? அல்லது இலண்டனிலுள்ள ஏதாவதொரு தேவாலயத்தில் இறங்குவாரா அல்லது மாஸ்கோவின் ஏதாவது ராஜ தேவாலயத்தில் இறங்குவாரா ? பழைய கற்பனைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது கிறித்தவர்களுக்கு மறைவான தாக்குதலாக அமையாதிருந்தால், முஸ்லிம் களை விட வெகு சீக்கிரம் அவர்கள் புரிந்து கொள்ள முடியும். அதாவது மஸீஹ் இறங்குதல் என்பது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் தெளிவான சொற்களில் கூறியிருக்கும் அந்த விளக்கத்தின் படியே இருக்க வேண்டும்.

ஏனெனில் ஒரே விதமான இரு விஷயங்கள் இரு முரண்பட்ட பொருள்களில் அமைவது சாத்தியமில்லை. **யோவான் வானத்திலிருந்து இறங்குதல் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் கொடுத்த விளக்கம் உண்மையிலேயே சரியானது என்றால், அதே முதல் வழக்கின் வடிவத்திலேயே இருக்கின்ற 'மஸீஹ் இறங்குவார்' என்ற வழக்கிலும் அதே விளக்கத்தையே பயன்படுத்தக் கூடாதா என்ன**

ஸரீ (தங்க ஜரிகையால் சித்திர தையல் வேலை செய்யப்பட்ட துணி), லாஹீ (முரடான பட்டு நூலால் செய்யப்பட்ட துணி) ஆகியவற்றால் இருக்குமா? அல்லது சாதாரணமாக நெய்யப்பட்ட துணிகளான நெய்ன் சுக் (அருமையான பருத்தித் துணி), ஈங்கு, சிகன் (குங்குமப்பூ நிறத்தால் சாயம் பூசப்பட்ட மிக நேர்த்தியான பருத்தி நூலால் சித்திர வேலை செய்யப்பட்ட துணி), குல்ஷன் (பூ வேலைகள் செய்யப்பட்ட பருத்தித் துணி), மெல்லிய பருத்தி நூலால் ஆன துணி, ஜாலி(பூக்களால் சித்திர வேலை செய்யப்பட்ட இன்னொரு வகை பருத்தி நூலால் ஆன துணி), காசா (அருமையான மெல்லிய பருத்தித் துணி) டோர்யா (அழகிய வரிகளைக் கொண்ட பருத்தி துணி), சார்க்கானா (நெசவில் சதுர ஓட்டைகளைக் கொண்ட துணி) ஆகியவற்றால் இருக்குமா? மேலும் அதை வானத்தில் யார் நெய்தார்? யார் தைத்திருப்பார் ? இதுவரை முஸ்லிம்களில் அல்லது கிறித்தவர்களில் எவரும் அது பற்றிக் குறிப்பிடவில்லை - நூலாசிரியர்)

**என்பதை கருத்துள்ளவர்கள் சிந்திக்கத் தக்கதாகும்.** மறந்துள்ள ஓர் இரகசியத்தின் உண்மையை ஒரு நபி விளக்கித் தந்துவிட்ட நிலையில், இயற்கைச் சட்டமும் அதையே நாடும் போது - அதையே ஏற்றுக் கொள்ளும் போது, பிறகு இந்த தெளிவான, நேரான வழியை விட்டுவிட்டு ஒரு சிக்கலான, ஆட்சேபணைக்குரிய வழியை தன் சார்பாக புனைந்து உருவாக்குவது எவ்வாறு ஒப்புக் கொள்ளத்தக்கதாக இருக்க முடியும்? அறிவாற்றலும், நியாய உணர்வும் கொண்ட மக்களின் மன சாட்சிக்கு மஸீஹின் கூற்றின் மூலமாகவும் முழுக்க முழுக்க உதவி கிடைத்திருக்கும்போது அது வேறொரு திசையின் பக்கம் திரும்ப முடியுமா? மூன்று ஆண்டுகளுக்குள் மஸீஹ் வானத்திலிருந்து இறங்கி வருவார் என்ற தமது இந்த முன்னறிவிப்பையும் கிறித்தவ மக்கள் ஆங்கில பத்திரிகைகளின் மூலமாக இன்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டுள்ளனர்.

(இந்த நூல் 1891-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இதன்படி, 1881-ஆம் ஆண்டிலேயே இயேசு இறங்குவார் என கிறித்தவர்கள் பத்திரிகைகளில் எழுதியுள்ளனர்-மொழிபெயர்ப்பாளர்).

இப்போது இறைவன் அந்த இறங்கக் கூடியவரின் அடையாளத்தைக் கொடுத்திருக்கும் போது கிறித்தவர்கள் தமது முன்னறிப்பைத் தாமே பொய்ப்படுத்துபவர்களாக ஆகிவிடாதிருக்கும் பொருட்டு முதன் முதலில் அவர்களே இதை ஏற்றுக்கொள்வது அவர்கள் மீது கடமையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் உயர்த்தப்பட்ட பிறகு சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார் என்றும் கிறித்தவர்கள் நம்புகின்றனர்.** ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) உயர்த்தப்பட்டதற்குப் பிறகு சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார் என்றும் கிறித்தவர்கள் நம்புகின்றனர். லூக்காவின் இஞ்சீலில் ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களே ஒரு திருடனுக்கு ஆறுதல் அளித்தவாறு, இன்றைக்கு நீ என்னுடனே கூட சுவர்க்கத்தில் நுழைவாய் என்று மெய்யாகவே சொல்லுகிறேன் என்கிறார். (லூக்கா அதிகாரம் 23 வசனம் 43 காண்க). மேலும் **ஒருவர் சுவர்க்கத்தில் நுழைந்த பிறகு,** அவர் எவ்வளவு குறைந்த தகுதியைக் கொண்ட மனிதராக இருந்தாலும் **அவர் அதிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்** என்பது கிறித்தவர்களின் ஒட்டுமொத்தமான கொள்கையாகும்.





**முஸ்லிம்களின் கொள்கையும் இதுதான்.** வமாஹும் மின்ஹா பிமுக்ரஜீன் என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். அதாவது சுவர்க்கத்தில் நுழைக்கப்படுகின்றவர்கள் பிறகு அதிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள். ***(திருக்குர்ஆன் 15:49).*** மேலும் திருக்குர்ஆனில், ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் சுவர்க்கத்தில் நுழைந்தது பற்றி வெளிப்படையாக எங்கேயும் வரவில்லை யென்றாலும் அவர்கள் மரணமடைந்து விட்டது பற்றி மூன்று இடங்களில் குறிப்பு உள்ளது.* மேலும் தூய அடியார்கள் மரணிப்பதும் சுவர்க்கத்தில் நுழைவதும் ஒன்று தான். ஏனெனில், கீலத்குலில் ஜன்னத் (நீர் சுவர்க்கத்தில் நுழைவீராக என்று கூறப்பட்டது 36:27) மற்றும் வத்குலீ ஜன்னதீ (மேலும் நீ என் தோட்டதில் நுழைந்து விடுக 89:31) ஆகிய வசனங்களின் படி அவர்கள் தாமதமின்றி சுவர்க்கத்தில் நுழைக்கப்படுகின்றனர். **மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) போன்ற இறை நெருக்கத்தைப் பெற்ற ஓர் அடியார் சுவர்க்கத்தில் நுழைக்கப்பட்டு பின்னர் அதிலிருந்து வெளியேற்றப்படுவது சாத்தியமா? என்பதை கவனமாகப் பரிசீலித்துப் பார்ப்பது முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகிய இருவருக்கும் தற்போது கடமையாகும்.** சுவர்க்கத்தில் நுழைந்தவர்கள் பின்னர் அதிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று எல்லா பரிசுத்த வேதங்களிலும் தொடராகவும், தெளிவாகவும் காணப்படுகின்ற இறைவனின் வாக்குறுதிக்கு இது முரண்பட்ட தில்லையா? இத்தகைய கண்ணியமான, உறுதிமிக்க வாக்குறுதி முறிந்து விடுவது இறைவனின் எல்லா வாக்குறுதிகளின் மீதும் ஒரு கடினமான

---

* அடிக்குறிப்பு:

1. நீ எனக்கு மரணத்தை தந்த பின் நீயே அவர்களை கண்காணித்தவனாக இருந்தாய் ***( 5:118)***

2. அவருடைய மரணத்திற்கு முன் அவரிடம் நம்பிக்கை கொள்ளாத ஒரு (கோத்திரத்த) வரும் வேதத்தையுடையவருள் இருக்கமாட்டார். ***(திருக்குர்ஆன் 4:160)***

(அதாவது வேதத்தையுடையவர்களின் எல்லா கோத்திரத்தினரும் தன் தூதுச் செய்தியை எட்டவைத்து எல்லா கோத்திரத்திலும் சிலராவது அவர்மீது நம்பிக்கை கொள்ளாத வரை ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களுக்கு மரணம் ஏற்படாது.)

3. ஈசாவே! நான் உமக்கு மரணத்தைத் தருவேன். உமக்கு எனது சந்நிதியில் உயர்வு தருவேன். ***(திருக்குர்ஆன் 3:56)***

களங்கத்தை ஏற்படுத்தி விடாதா என்ன? எனவே அவ்வாறு நம்பிக்கை கொள்வதால் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் மீது நீங்கள் தகாத, துன்பமான நிலையை உருவாக்கி விடுவீர்கள் என்பது மட்டுமல்லாது அத்தகைய வீணான விஷயங்களினால் இறைவனின் மகத்துவதிற்கு, களங்கமும் மிகப் பெரிய மரியாதைக் குறைவும் ஏற்படும்.

ஓர் அற்பமான கொள்கையினால்-அதிலிருந்து ஈடேற்றம் பெறுவதற்கு உவமை என்ற வழி இருக்கும் நிலையில் - அந்த அற்பமான கொள்கையினால் மாபெரும் மார்க்க உண்மைகள் உங்கள் கைகளைவிட்டு சென்று விடுகின்றன என்ற விஷயத்தை இங்கு நீங்கள் மிக கவனமாகவும், ஆழமான பார்வையுடனும் பார்க்க வேண்டும். மேலும் உண்மையில் இது எத்தகைய அபத்தமான கொள்கை என்றால், இதில் ஆயிரக்கணக்கான தவறுகளும் கடுமையான குழப்பங்களுடன் பெரும் திரளாகப் பின்னிக் கிடக்கின்றன. மேலும் இதனால் எதிரிகளுக்கு நகைப்பதற்கும், கிண்டலடிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்து விடுகின்றது.

இதே அற்புதத்தைத் தான் மக்கத்து மறுப்பாளர்களும் நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களிடம் கேட்டனர் என்பதை இதற்கு முன்னரும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது,நீங்கள் எங்களின் கண்களுக்கு முன்னால் வானத்திற்கு ஏறிச்செல்லுங்கள். மேலும் கண் முன்னாலேயே இறங்கி வாருங்கள் எனக் கேட்டனர்.

**குல் சுப்ஹான ரப்பீ** (என் இறைவன் தூயவன் எனக் கூறுவீராக) என்பதே அவர்களுக்கு கிடைத்த பதிலாகும். ***(திருக்குர்ஆன் 17:94 காண்க)***

அதாவது, சோதனைக் களமான இவ்வுலகில் அத்தகைய பகிரங்கமான, வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்களைக் காட்டுவதை விட்டும், மறைவானதன் மீது ஈமான் கொள்ளுதல் என்ற ஞானத்தை வீணாக்குவதை விட்டும் இறைவனின் ஞானம் மிக்க கண்ணியம் தூய்மையானதாகும்.

**எந்த விஷயம் நபிமார்களில் மிகச் சிறந்தவரான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஆகுமானதாக இருக்க வில்லையோ,**





**அல்லாஹ்வின் நடைமுறைக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டதோ அது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு எவ்வாறு ஆகுமானதாக இருக்க முடியும்?** நாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு சிறப்புத்தன்மையை தகுதியற்றதாகக் கருதுவதும், பின்னர் அதே சிறப்புத்தன்மையை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி சாத்தியமானதாக நம்புவதும் மிகப் பெரிய அவமரியாதையாகும். ஓர் உண்மையான முஸ்லிமிடமிருந்து அப்படிப்பட்ட அவமரியாதை ஏற்பட முடியுமா? ஒருபோதும் முடியாது. சில காலமாக முஸ்லிம்களிடம் பரவிக்கிடக்கின்ற **(ஈசா வானத்திற்கு ஏறிச் சென்றுள்ளார் என்ற)** மேற்கண்ட சிந்தனை பற்றிய எந்தவோர் அடையாளமும் நமது மார்க்க நூல்களில் காணப்படவில்லை! இன்னும் சொல்லப் போனால் இது நபிமொழிகளை தவறாகப் புரிந்ததனால் ஏற்பட்ட ஒரு தவறான முடிவு ஆகும். இந்தத் தவறான எண்ணத்துடன் பொருத்தமற்ற பல அடிக்குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. அடிப்படையற்ற, இட்டுக் கட்டப்பட்டவைகளால் அதற்கு பொலிவூட்டப்பட்டிருக்கின்றது. மேலும் உண்மையான குறிக்கோளின் பக்கம் வழிகாட்டக் கூடிய எல்லா விஷயங்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மிகத் தெளிவானதும் தீர்க்கமானதுமான நபிமொழியை இமாம் முஹம்மது இஸ்மாயீல் புகாரி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் தமது சஹீஹான நபிமொழித் தொகுப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் ரிவாயத்தினால் எடுத்தெழுதி யிருக்கிறார்கள்:

இப்னு மர்யம் உங்களிடம் தோன்றும் போது உங்களின் நிலை எவ்வாறு இருக்கும் ? அவர் உங்களிலிருந்தே தோன்றி உங்களுக்கே ஓர் இமாமாக இருப்பார்.✸

இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இப்னு மர்யம் (மர்யமின் மகன்) என்பதால், உண்மையிலேயே இப்னு மர்யம் (மர்யமின் மகன்) இறங்கி வருவார் என்று கருதாதீர்கள்; மாறாக **இந்தப் பெயர் உருவகமாகக் கூறப்படுள்ளது.** மற்றபடி உண்மையில் அவர் (முஸ்லிமாகிய) உங்களிலிருந்து - உங்களுடைய சமுதாயத்திலிருந்தே

✸ அடிக்குறிப்பு: புகாரி. கிதாபுல் அன்பியா. பாபு நுஸூலி ஈசப்னி மர்யம் ஹதீஸ் எண் : 3449

உங்களுடைய ஓர் இமாமாக இருப்பார். அவர் இப்னு மர்யத்தின் இயல்பில் படைக்கப்படுவார்' என்பதை தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

இந்த இடத்தில் பழைய சிந்தனைகளைக் கொண்ட மக்கள், ஹஸ்ரத் மஸீஹ் (அலைஹிஸ் ஸலாம்) வானத்திலிருந்து இறங்கும் போது அவர் தமது நபித்துவப் பதவியை இழந்து விட்டு வருவார். அவருக்கு இஞ்சீலுடன் எந்தத் தொடர்பும் இருக்காது. முஹம்மதிய்ய உம்மத்தில் நுழைந்தவாறு திருக்குர்ஆனின்படி செயல்படுவார் ! ஐவேளை தொழுகைகளைத் தொழுவார்!! முஸ்லிம் என அழைக்கப்படுவார்!!! என்று இந்த நபிமொழிக்குப் பொருள் கொடுக்கின்றனர். ஆனால் அவருக்கு இந்த வீழ்ச்சிக்கான நிலை ஏன்? மற்றும் எக்காரணத்தினால் ஏற்படும் என்பதை எடுத்துக் கூறவில்லை. எப்படியிருந்த போதிலும், இப்னு மர்யம் அந்த நாளில் ஒரு முஸ்லிமாகத் தோன்றுவார். அவர் தம்மை முஹம்மதிய்ய உம்மத்தைச் சேர்ந்தவராக வெளிப்படுத்துவார் என்ற அளவுக்கு நமது முஸ்லிம் சகோதரர்கள் தாமே ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

மேலும் அவருக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த தமது நுபுவ்வத்தின் பெயரைக் கூட கூறமாட்டார் என்றும் நம்புகின்றனர். இதுதான் உருவகத்தை வெளிப்படையான உண்மைப் பொருளில் புரிந்து கொண்டதனால் நமது சகோதரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கலாகும்.

அதன் காரணமாக ஒரு நபிக்கு தனது நபிப் பதவியை இழக்க நேர்ந்தது என அவர்கள் நம்ப வேண்டியதாயிற்று.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய சொற்களில் காணப்படுகின்ற தெளிவான, நேரிய பொருளையும் யஹ்யா நபியைப் பற்றி ஹஸ்ரத் (ஈசா) மஸீஹ் (அலை) அவர்கள் முன்னரே கூறிய விளக்கத்தையும் இவர்கள் ஏற்றுக்கொண்டால் இந்த எல்லா செயற்கையான சிக்கல்களிலிருந்தும் இவர்கள் விடுதலை பெற்று விடுவார்கள். மஸீஹின் ஆன்மாவை சுவர்க்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டிய தேவையும் ஏற்படாது; அந்தத் தூய நபி நபிப்பதவியை இழந்தார் என்று நம்ப வேண்டியதும் ஏற்படாது; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தில் வஞ்சப் புகழ்ச்சி செய்ய





வேண்டியதும் ஏற்படாது; திருக்குர்ஆனின் கட்டளைகள் மறுக்கப்பட்டன என நம்ப வேண்டியதும் ஏற்படாது.

ஒருவேளை நமது சகோதரர்களுக்கு கடைசியில் இப்படியொரு சாக்குப்போக்கு இருக்கலாம். அதாவது சில சஹீஹான ஹதீஸுகளில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளங்களாகக் கூறப்பட்டிருக்கும் சில சொற்களுக்கு நாம் எவ்வாறு இணக்கமான பொருளைத் தர முடியும்? உதாரணமாக, மஸீஹ் வரும் போது சிலுவையை முறிப்பார். ஜிஸ்யா வரியை நீக்குவார். பன்றியைக் கொல்வார். யூதர்களின், கிறித்தவர்களின் தீய பண்புகள் முஸ்லிம் களிடம் பரவியிருக்கும்போது தோன்றுவார் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றதே ! என்று கேட்டால் நான் கூறுகிறேன்: **சிலுவையை முறிப்பார் என்பதன் கருத்து,** வெளிப்படையான முறையில் அல்ல; மாறாக ஆன்மீகமான முறையில் சிலுவை மதத்தை முறியடித்தல் மற்றும் அதன் அபத்தத்தை நிரூபித்துக் காட்டுதல் என்பதாகும்.

**ஜிஸ்யாவை நீக்குவார் என்பதன் கருத்தும் வெளிப்படையனதே.** அந்த நாட்களில் உள்ளங்கள் தாமாகவே உண்மை மற்றும் வாய்மையின் பக்கம் ஈர்க்கப் படும்; எந்தவொரு போருக்கான தேவையும் இருக்காது. மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாம் மார்க்கத்தில் இணைந்து கொண்டிருக்கும் வகையில் தாமாகவே ஒரு காற்று வீசும். பிறகு இஸ்லாம் மார்க்கத்தில் இணைவதற்கான வாசல் திறந்துவிடும்போது உலகமெல்லாம் இந்த மார்க்கத்தை ஒப்புக் கொள்ளும்போது பிறகு யாரிடமிருந்து ஜிஸ்யா வாங்குவது ? ஆனால் இவையெல்லாம் ஒரேயடியாக நடந்து விடாது. ஆயினும் இப்போதிருந்தே அதற்கான அடித்தளம் போடப்பட்டுவிடும்.

மேலும் **பன்றிகள் என்பதன் கருத்து,** பன்றிகளின் பழக்கவழக்கங்கள் இருக்கின்ற மக்கள் என்பதாகும். அப்படிப்பட்டவர்கள் அந்த நாளில் சான்றுகள், ஆதாரங்களினால் முறியடிக்கப்படுவார்கள். மேலும் மிகத் தெளிவான சான்றுகள் என்னும் வாள் அவர்களைக் கொன்று விடும். அவ்வாறல்லாமல், ஒரு தூய நபி காடுகளில் சென்று பன்றிகளை வேட்டையாடித் திரிவார் என்று பொருள் அல்ல.

எனது அன்பிற்குரிய சமுதாயமே! இவையெல்லாம் உவமைகளாகும். எவர்களுக்கு இறைவன் புறமிருந்து புரியும் தன்மை வழங்கப்பட்டுள்ளதோ அவர்கள் இவற்றை சுலபமாக மட்டுமல்லாமல் ஒருவகை ஆர்வத்துடன் புரிந்து கொள்வார்கள். இத்தகைய அழகிய, கருத்துச் செறிவுள்ள உவமைச் சொற்களுக்கு நேரடிப் பொருள் கொடுப்பது என்பது அழகிய அன்பிற்குரிய ஒருவரை ஒரு பயங்கரமான பூதமாகப் படம் பிடித்துக் காட்டுவது போன்றதாகும். கருத்துச் செறிவின் அனைத்து அடிப்படையும் நுட்பமான உவமைகளின் மீது இருக்கிறது. இதன் காரணமாகத்தான் கூற்றுகளிலேயே மிக அதிக கருத்துச் செறிவுள்ள கூற்றாகிய அல்லாஹ்வின் கூற்று எந்த அளவுக்கு உவமைகளை பயன்படுத்தியிருக்கின்றதோ அந்த அளவுக்கு நுட்பமான வழி முறைவேறு எவரது கூற்றிலும் இல்லை.

இப்போது இந்த தூய்மையான உவமைகளை எல்லா இடத்திலும், எல்லா தருணத்திலும் நேரடியான பொருளைக் கொடுத்துக் கொண்டேசெல்வது என்பது இந்த அற்புதமான கூற்றின் அமைப்பை மண்ணோடு மண்ணாக்குவதாகும். எனவே இந்த வழிமுறையினால் இறைவனின் கருத்துச் செறிவால் நிரம்பிய கூற்றின் உண்மையான குறிக்கோள் சின்னாபின்னமாகி விடுகின்றது. இன்னும் சொல்லப்போனால், அத்துடன் இந்தக் கூற்றின் உயர் தரமான கருத்துச் செறிவு நாசமாக்கப்படுகின்றது. எந்த விளக்கத்தில் கூறுபவரின் உயர்தரமான கருத்துச் செறிவும், அவருடைய ஆன்மீக, உயரிய எண்ணங்களும் கவனத்தில் கொள்ளப்படுமோ அவைதான் அழகிய, ஆர்வமிக்க விளக்கத்தின் வழி முறைகளாகும். அவ்வாறல்லாமல் மிகவும் கீழ்த்தரமான, அவலட்சணமான, வஞ்சப் புகழ்ச்சியாகவும் இருக்கின்ற, வழிமுறைக்கு மாற்றமானவையாக இருக்கின்ற விளக்கங்களை தம் சார்பாக உருவாக்கிக் கொள்வதென்பது, தூய்மையானதாகவும், நுட்பமான, நுண்ணிய கருத்துகளைக் கொண்டதாகவும் இருக்கின்ற இறைவனின் பரிசுத்தமான சொற்களை அநாகரிகமான சொற்களுக்குட்பட்டவையாகக் கருதுவதாகும்.

இறைவனின் சொற்களில் அதிக அளவில் இருக்கின்ற, இருக்க வேண்டிய இத்தகைய மிகவும் நுட்பமான இரகசியங்களுக்கு எதிராக அவலட்சணமான, பண்பாடற்ற, வெறுக்கத்தக்க பொருள்கள் ஏன் விரும்பப்படுகின்றன என்பது எமக்குப் புரியவில்லை. இறைவனின்





ஞானமிக்க கம்பீரத்திற்கு ஏற்றதாகவும், அவனுடைய உயர்தகுதியான சொல்லுக்குப் பொருத்தமாகவும் இருக்கின்ற அந்த நுட்பமான பொருள்களுக்கு ஏன் மதிப்பளிக்கப்படுவதில்லை? நமது ஆலிம்கள் (அறிஞர்கள்) இந்த இறை தத்துவத்தின் அருகில் வர விரும்பாத அளவுக்கு அவர்களின் மூளை தேவையில்லாத இந்த கிளர்ச்சியால் ஏன் நிரம்பிக் காணப்படுகின்றது? எவர்கள் இந்த ஆய்வுகளில் தமது இரத்தத்தையும், வியர்வையையும் ஒன்றாக்கி விட்டார்களோ அவர்கள் நமது இந்தக் கூற்றினை மறுக்கமாட்டார்கள்; இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கு இன்பம் கிட்டும். மேலும் அவர்களுக்கு ஒரு புதிய உண்மை கிடைக்கும். அதை அவர்கள் மிக விளக்கமாக சமுதாயத்திடம் எடுத்துரைத்துக் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் பொது மக்களுக்கு ஓர் ஆன்மீக பயனை அடையச் செய்வார்கள். ஆனால் எவர்கள் மேலோட்டமான பார்வை வரையிலேயே தமது சிந்தனையையும், மூளையையும் முடித்துக் கொண்டார்களோ அவர்கள் தேவையில்லாத ஆட்சேபணையை அதிகரிக்கச் செய்வதும், பொருத்தமற்ற கொந்தளிப்பை, குழப்பத்தை உருவாக்குவதும் அல்லாமல் இஸ்லாத்திற்கு எந்த பயனையும் அவர்களால் தர இயலாது.

தற்போது நாம் இன்னொன்றையும் கூற விரும்புகின்றோம். நமது வழிகாட்டியும், தலைவரும், எஜமானருமாகிய காத்தமுல் முர்ஸலீன் (ஸல்) அவர்கள் முதல் மஸீஹுக்கும் இரண்டாம் மஸீஹுக்கும் இடையில் வித்தியாசத்தை நிலை நாட்டுவதற்காக, இரண்டாம் மஸீஹ் ஒரு முஸ்லிமாக இருப்பார்; திருக்குர்ஆனின் ஷரீஅத்திற்கேற்ப செயல்படுவார்; முஸ்லிம்களைப் போன்று தொழுகை, நோன்பு ஆகிய திருக்குர்ஆனின் கட்டளைகளைப் பேணி நடப்பார்; முஸ்லிம்களிடத்தில் பிறப்பார்; முஸ்லிம்களின் இமாமாக இருப்பார்; எந்தவொரு வேறுபட்ட மார்க்கத்தையும் கொண்டு வரமாட்டார். எந்தவொரு வேறுபட்ட நுபுவ்வத்திற்கான வாதத்தையும் செய்ய மாட்டார் என்பதை மட்டும் கூறவில்லை; மாறாக, முதல் மஸீஹ் இரண்டாவது மஸீஹ் ஆகியோரின் உருவத்திலும் தெளிவான வித்தியாசம் இருக்கும் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இதன் படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிஃராஜ் இரவில் தென்பட்ட **முதல் மஸீஹின் தோற்றம்**

என்னவென்றால், நடுத்தர உயரம் கொண்டவர், சிவந்த நிறத்தவர், சுருண்ட முடிகளை உடையவர், அகன்ற மார்பைக் கொண்டவர் ஆவார்.✱ *(சஹீஹ் புகாரி பக்கம் 489 காண்க)*

ஆனால் அதே நூலில் **இரண்டாவது மஸீஹின் தோற்றமாக** தோற்றமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர் கோதுமை நிறம் கொண்டவராக இருப்பார்; அவரது முடிகள் சுருண்டதாக இல்லை; காதுகள் வரை தொங்கிக் கொண்டிருக்கின்றன என்று கூறுகின்றார்கள்.✱✱

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதல் மஸீஹ் மற்றும் இரண்டாம் மஸீஹ் ஆகியோருக்கு இடையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு விதமான வேறுபட்ட அடையாளங்கள், **முதல் மஸீஹ் என்பவர் வேறு; இரண்டாம் மஸீஹ் என்பவர் வேறு** என்பதை போதுமான அளவுக்கு உறுதிப்படுத்த வில்லையா என்று இப்போது நாம் சிந்திக்கின்றோம். இவ்விருவரையும் இப்னு மர்யம் (மர்யமின் மகன்) என்ற பெயரால் அழைப்பது ஒரு நுட்பமான உவமையாகும். அது இயல்பான ஒப்புமை மற்றும் ஆன்மீக சிறப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

உட்புறமான சிறப்புத்தன்மையை ஒப்புமையாகக் கொண்டிருப்பதன் காரணத்தால் இரு நல்லவர்கள் ஒரே பெயருக்கு உரியவர் ஆக முடியும் என்பது வெளிப்படையானதாகும். அவ்வாறே இரண்டு தீயவர்களும் ஒரே தீய பண்பில் சரிசமமான பங்கு கொண்டிருப்பதன் காரணத்தால் ஒருவர் இன்னொருவருக்கு பிரதிநிதி என அழைக்கப்பட முடியும். முஸ்லிம்கள் தமது குழந்தைகளுக்கு அஹ்மது, மூஸா, ஈசா, சுலைமான், தாவூது ஆகிய பெயர்களை வைக்கின்றனர் என்றால் உண்மையில் அவர்களுக்கும் இதே நல்ல

✱ சஹீஹ் புகாரி கிதாபுல் அன்பியா. பாபு கவ்லில்லாஹி தஆலா வஸ்குர் ஃபில் கிதாபி மர்யம்... ஹதீஸ் எண்: 3437 & 3438 தாருஸ் ஸலாம் ரியாது வெளியீடு 1997. (மொழிபெயர்ப்பாளர்)

✱✱ சஹீஹ் புகாரி ஹதீஸ் எண்: 3440. குறிப்பு : நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புகாரியின் பக்க எண் பெருமளவில் வெளியிடப்பட்ட இந்திய வெளியீட்டின் பக்க எண் ஆகும். (மொழிபெயர்ப்பாளர்)





குறிக்கோளில்தான் வைக்கின்றனர். அதன் மூலமாக நல்ல சகுனமாக இந்தக் குழந்தையும் அந்தப் பெரியவர்களின் வடிவமாகவே ஆகிவிடும் அளவுக்கு அவர்களின் ஆன்மீக வடிவத்தையும், சிறப்புத் தன்மையையும் முழுமையாகவும், நிறைவாகவும் தம்மிடம் உருவாக்கிக் கொள்ளட்டும் என்பதற் காகத்தான்.

மஸீஹின் உவமையாகத் தோன்றியவரும் நபியாக இருக்க வேண்டுமே! ஏனெனில் மஸீஹ் நபியாக இருந்தாரே என்று இந்த இடத்தில் ஆட்சேபணை எழுப்பப்படு மென்றால் அதற்கான முதல் பதில், வரக் கூடிய மஸீஹுக்கு நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்கான நிபந்தனையை வைக்கவில்லை. மாறாக, அவர் ஒரு முஸ்லிமாக இருப்பார் என்றும், பொதுவான முஸ்லிம்களைப் போன்று திருக்குர்ஆனின் ஷரீஅத்தை பின்பற்றக் கூடியவராக இருப்பார் என்றும், தான் ஒரு முஸ்லிமும், முஸ்லிம்களின் இமாமும் ஆவேன் என்பதை தவிர வேறு எதையும் அவர் வெளிப்படுத்த மாட்டார் என்றுமே தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், இந்த எளியவன் இறைவன் புறமிருந்து இந்த உம்மத்திற்கு முஹத்தஸ் (ஷரீஅத் அல்லாத வெளிப்பாடுகளை இறைவனிடமிருந்து பெறுபவர்) ஆக வந்துள்ளேன். **மேலும் முஹத்தஸ் என்பவரும் ஒரு பொருளில் நபி ஆகவே இருக்கின்றார்.** அவருக்கு முழுமையான நுபுவ்வத் இல்லையென்றாலும், அவர் ஒரு பகுதியின் அடிப்படையில் ஒரு நபியாகவே இருக்கின்றார். ஏனெனில் அவர் இறைவனுடன் உரையாடுகின்ற சிறப்பைக் கொண்டிருக் கின்றார். மேலும் அவருக்கு மறைவான விஷயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ரஸூல்மார்கள், நபிமார்களின் வஹியைப் போன்று அவரது வஹியும் ஷய்த்தானின் குறுக்கீட்டிலிருந்து பரிசுத்தமாக்கப்படுகின்றது. மேலும் ஷரீஅத்தின் அடிப்படை ஞானம் அவருக்கு திறந்து கொடுக்கப்படுகின்றது. **மேலும் அவர் நபிமார்களைப் போன்று அப்படியே இறைவனால் நியமிக்கப்பட்டு வருகின்றார்.** நபிமார்களைப் போன்று அவரும் தன்னை மிக பகிரங்கமாக வெளிப்படுத்துவது அவர் மீது கடமையாகின்றது. **மேலும் அவரை மறுக்கின்றவர் ஓரளவுக்கு தண்டனைக்கு உரியவராகின்றார். மேலும் நுபுவ்வத் என்பதன்**

**பொருள், மேலே குறிப்பிட்ட விஷயங்கள் அவரிடம் காணப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை.**

மேலும் நுபுவ்வத்தின் வாசல் அடைக்கப்பட்டுள்ளதே நபிமார்களுக்கு இறங்கும் வஹி (இறையறிவிப்பு) மீது முத்திரை இடப்பட்டு விட்டதே என்ற சாக்கு எடுத்து வைக்கப்படுமென்றால், நான் கூறுகிறேன் : நுபுவ்வத்தின் வாசல் எல்லா வகையிலும் அடைக்கப்பட்டு விடவில்லை. எல்லா வகையிலும் வஹி மீது முத்திரை இடப்படவில்லை. மாறாக கருணை காட்டப்பட்ட இந்த உம்மத்திற்காக வஹி, நுபுவ்வத் ஆகியவற்றின் வாசல், ஒரு பகுதி அளவில் எப்போதும் திறந்திருக்கின்றது. ஆனால் எப்பொழுதும் தொடராக இருக்கின்ற இந்த நுபுவ்வத் முழுமையான நுபுவ்வத் அல்ல; மாறாக, நான் தற்போது விளக்கிக் கூறியிருப்பது போன்று, அது, ஒரு பகுதி நுபுவ்வத் ஆகும் என்பதை மனதார நினைவிற் கொள்ள வேண்டும். அதுவே வேறு சொற்களில் முஹத்தஸிய்யத் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றது. அது நிறைவான நுபுவ்வத்தின் மேன்மைகளை ஒருங்கே கொண்ட முழுமையான மனிதரைப் பின்பற்றுவதன் மூலமாக கிடைக்கின்றது. அதாவது புகழப்பட்ட பண்புகளைக் கொண்ட ஹஸ்ரத் ஸய்யித்னா மவ்லானா முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (அவர்களைப் பின்பற்றுவதனால்).

அறிந்து கொள்வீராக . அல்லாஹ் உமக்கு நேர்வழி காட்டுவானாக. நிச்சயமாக நபி, முஹத்தஸ் (இறைவனிடமிருந்து மறைவான செய்திகளை வஹி மூலம் பெறுபவர்) ஆக இருக்கின்றார். முஹத்தஸ் நபியாக இருக்கின்றார். நுபுவ்வத்தின் வகைகளில் ஒரு வகையைப் பெறுவதைப் பொருத்தவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், **'லம் யப்க மினன் நுபுவ்வத்தி இல்லல் முபஷ்ஷிராத்'** எனக் கூறினார்கள். இப்போது நுபுவ்வத்தில் நற்செய்தி வகை மட்டுமே எஞ்சியுள்ளது. அதாவது நுபுவ்வத்தின் வகைகளிலேயே ஒரு வகை எஞ்சியுள்ளது. அது உண்மையான ஆன்மீகக் கனவுகள், சரியான கஷ்ஃபுகள் மற்றும் குறிப்பிட்ட இறைநேசர்களுக்கு இறங்குகின்ற வஹி, ஒரு வேதனையுள்ள சமுதாயத்தின் உள்ளங்களின் மீது தோற்றத்தை





வெளிப்படுத்தும் ஒளி ஆகியவையாகும். எனவே அகப்பார்வை கொண்ட ஆய்வு செய்பவரே! உமக்கு புரியும் திறன் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் !! இதிலிருந்து நுபுவ்வத்தின் வாசல் முற்றிலுமாக அடைபட்டு விட்டது என்று கருதப்பட முடியுமா? அவ்வாறன்று. மாறாக, ஷரீஅத்தின் வஹியை தன்னகத்தே கொண்டுள்ள முழுமையான நுபுவ்வத் முடிந்து விட்டது; ஆனால் முபஷ்ஷிராத் (நற்செய்திகளைக் கொண்டுள்ள) நுபுவ்வத் மறுமை வரை எஞ்சியுள்ளது; அது ஒருபோதும் முடிவுறாது என்பதை இந்த நபிமொழி குறிப்பிடுகின்றது.

மேலும் நல்ல ஆன்மீகக் கனவு நுபுவ்வத்தின் - அதாவது முழுமையான நுபுவ்வத்தின் நாற்பத்தி ஆறில் ஒரு பங்கு என்பதை ஹதீஸ் நூல்களில் படித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே நல்ல ஆன்மீகக் கனவுக்கு (நுபுவ்வத்தின்) இந்த அந்தஸ்திலிருந்து பங்கு வழங்கப்பட்டிருக்கும் போது (இறை வெளிப்பாடுகளைப் பெறக்கூடிய வர்களாகிய) முஹத்தஸுகளின் உள்ளங்களின் மீது இறைவனிடமிருந்து வஹியாக இறக்கப்படும் அந்த சொற்கள் எவ்வாறு நுபுவ்வத்தின் அந்தஸ்திலிருந்து விலகியிருக்க முடியும் ? எனவே அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிவானாக. நமது வாதத்தின் சுருக்கம் என்னவென்றால், பகுதி நுபுவ்வத்தின் வாசல் எப்பொழுதும் திறந்திருக்கின்றது. (பகுதி நுபுவ்வத்தின்) இந்த வகைப்பாட்டில் நற்செய்திகள், எச்சரிக்கைகள், மறைவான விஷயங்கள், திருக்குர்ஆனின் நுட்பங்கள் இறைவனிடமிருந்துள்ள ஞானங்கள் ஆகியவற்றைத் தவிர வேறு எதுவுமில்லை. மற்றபடி, **வஹியின் எல்லா மேன்மைகளையும் ஒருங்கே கொண்ட நிறைவான, முழுமையான நுபுவ்வத்தைப் பொருத்தவரை,** முஹம்மது உங்களில் எந்த ஆணுக்கும் தந்தையில்லை; ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களின் முத்திரையாகவும் இருக்கின்றார் என்ற (33:41) வசனம் இறங்கிய நாளிலிருந்தே **அந்த நுபுவ்வத் முடிந்து விட்டதாக நம்பிக்கை கொள்கின்றோம்.**

எந்த சிறப்புத் தன்மையில், ஆன்மீக ஆற்றலில் இந்த எளியவனும் மர்யமின் மகன் மஸீஹும் ஒப்புமை உடையவர்களாக இருக்கின்றோம்? அந்த ஒப்புமை என்ன? என்ற கேள்வி எழுமாயின்,

அதற்குரிய பதில், அது எங்கள் இருவரின் ஆன்மீக ஆற்றலில் ஒரு குறிப்பிட்ட முறையில் வைக்கப்பட்டுள்ள ஓர் ஒட்டு மொத்தமான சிறப்புத்தன்மையாகும். அதன் ஒரு பக்கம் கீழேயும், இன்னொரு பக்கம் மேலேயும் செல்கின்றது.

**கீழே செல்கிறது என்பதன் கருத்து,** அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காக இருக்கும் உயர்தரமான உருக்கமும் கவலையுமாகும். அது அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவருக்கும் அதற்காக ஆயத்தமாக இருக்கும் சீடர்களுக்கும் மத்தியில் ஒரு உறுதியான தொடர்பையும், உறவையும் வழங்கி, அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவரின் தூய உள்ளத்தில் காணப்படும் ஒளிமிக்க ஆற்றலை எல்லா பசுமையான கிளைகளிலும் பரப்புகின்றது.

**மேலே செல்கின்றது என்பதன் கருத்து,** அந்த உயர்தரமான அன்பு, உறுதியான ஈமானுடன் கலந்திருக்கின்றது. அது முதலில் இறை நாட்டத்தினால் அடியாரின் உள்ளத்தில் உருவாகி, ஆற்றல் மிக்க இறைவனின் நேசத்தை தன்பக்கம் ஈர்க்கின்றது. பின்னர் உண்மையில் ஆண், பெண் என்ற நிலையில் இருக்கும் அவ்விரு நேசங்களும் ஒன்றிணைவதால் படைப்பாளனுக்கும், படைப்பினங்களுக்கு மிடையே ஓர் உறுதியான உறவும், ஒரு வலுவான தொடர்பும் உருவாகி இறை நேசம் எனும் பிரகாசிக்கும் நெருப்பினால், படைப்பினத்தின் நேசத்தை எரிகின்ற விறகுக் கட்டையைப் போன்று பற்றிக் கொள்கின்றது. அதனால் ஒரு மூன்றாம் பொருள் உருவாகின்றது. அதற்குத்தான் **ரூஹுல் குத்ஸ்** (பரிசுத்த ஆவி) என்று பெயர். (திருக்குர்ஆன் 16:103 காண்க).

எனவே இறைவன் தனது சிறப்பான நாட்டத்தினால் அதனிடம் இவ்வகையான நேசத்தை உருவாக்கிவிடும் நேரத்திலிருந்தே மனிதனின் இந்த படித்தரத்தைக் கொண்ட ஆன்மீக பிறப்பு உருவாகுவதாகக் கருதப்படுகின்றது. இத்தகைய அந்தஸ்தையும், தகுதியையும் கொண்ட நேசத்தின்போது, இறை நேசத்தினால் நிரம்பிய ஆன்மா, இறை நாட்டத்தினால் தற்போது நேசத்தால் நிரம்பிவிட்ட மனித ஆன்மாவிற்கு ஒரு புதிய பிறப்பை வழங்குகின்றது என உவமையாகக் கூறுவது பொருத்தமானதேயாகும். இதன் காரணமாகத்தான், நேசத்தால் நிரம்பி காணப்படும் இந்த ஆவிக்கு நேசத்தை ஊதுகின்ற இறைவனின் ஆவியுடன் உருவகமாக மகனைப்





போன்ற ஒரு தொடர்பு இருக்கின்றது. இவ்விரண்டும் இணைவதால் மனிதனின் உள்ளத்தில் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆவி) உருவாகிறது. எனவே அது அவ்விரண்டிற்கும் மகனைப் போன்றாகும் எனக் கூறலாம். மேலும் இந்த அந்தஸ்தைக் கொண்ட நேசத்திற்கு அவசியமான தூய திரித்துவம் என்பது இதுதான். இதனைத்தான் அசுத்தமான இயல்பைக் கொண்டவர்கள் ஷிர்க்கான முறையில் கருதி விட்டனர். மேலும் தானே அழிந்து போய்விடுவதற்கும், ஒன்றுமில்லாமற் போய்விடுவதற்கும் சாத்தியக்கூறாக இருக்கும் ஒன்றை, சுயமே என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனுக்கு இணையாக்கி விட்டனர்.

ஆனால் இந்தத் தகுதி இந்த எளியவனுக்கும் (ஈஸா) மஸீஹிக்கும் இருக்கிறது என ஒப்புக்கொண்டால், பிறகு நம் தலைவரும், எஜமானரும் இறை தூதர்களில் சிறந்தவரும், நபிமார்களில் முத்திரையுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு என்ன அந்தஸ்து எஞ்சியிருகிறது என்ற கேள்வி இங்கு எழுப்பப்படுமாயின் தெரிந்து கொள்ளுங்கள்: அது ஒரு மிக உயர்ந்த அந்தஸ்தும் , மிக மேலான தகுதியுமாகும். அது எல்லா பண்புகளையும் முழுமையான முறையில் ஒருங்கே கொண்டிருப்பவருடன் முடிவடைந்து விட்டது. அதன் நிலைமையை கண்டு கொள்வது கூட பிறரால் முடியாது. அப்படியிருக்கும் போது அ (ந்த அந்தஸ்) து பிறருக்கு கிடைக்க முடியும் என்பது எப்படி சாத்தியம்?

(தொடர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாரசீக மொழியில் கவிதை வடித்துள்ளார்கள். அதன் பொருள்:)

அஹ்மது (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தை கண்ணியமிக்க இறைவனைத் தவிர வேறு யார் அறிவார்? அவர் தன்னை விட்டே தனித்து விட்டார். ஏனெனில் அதற்கு மத்தியில் ‘மீம்’ என்ற எழுத்து வந்து விட்டது.

(அதாவது இறைவனின் பண்புப் பெயராகிய அஹது என்பதற்கும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பண்புப் பெயராகிய அஹ்மது என்பதற்கும் இடையில் ‘மீம்’ என்ற ஒரு எழுத்துதான் உள்ளது.)

இந்த வகையில் அவர் உள்ளத்தைக் கவர்ந்த இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்டார். மேலும் அவர்

முழுமையாக ஐக்கியப்பட்டுப் போனதன் காரணத்தினால் மேன்மேலும் கருணை காட்டும் இறைவனின் பண்புகளை அவரது உடல் முழுக்க முழுக்க மேற்கொண்டது.

அந்த தூய முகத்திலிருந்து உண்மையான அன்பிற்குரியவனின் நறுமணம் வீசத் தொடங்கியது. மேலும் அவரது உண்மையான பண்புகள், தொன்மையான இறைவனின் தோற்றமாக விளங்குகின்றது.

அந்த அஹ்மது (ஸல்) அவர்களின் உள்ளத்தைத் தவிர எந்த மகத்தான அர்ஷையும் நான் காணவில்லை. இவ்வாறு கூறுவதால் எவராவது என்னைப் பற்றி மார்க்கமிழந்தவர், வழிகேடர் என்று கூறினாலும் பரவாயில்லை.

இறைவனின் அருளால் நான் காலத்தின் சிந்தனைகளுக்கு நேர்மாற்றமாக இறை அருள்கள் என்ற நீரூற்றின் மீது கொண்ட ஆர்வத்தினால் நூற்றுக்கணக்கான துன்பங்களையும் விலை கொடுத்து வாங்க ஆயத்தமாக இருகின்றேன்.

இறைவனின் அருட்கொடைகள் மற்றும் பேரருளால் அந்த கலீம் (ஸல்) அவர்களின் மீது கொண்ட பேரன்பினால் ஃபிர்அவ்னிய இயல்பு கொண்ட மக்களுக்கு நான் எதிரியாவேன்.

வழியில் செல்பவர் எவரையாவது நான் கண்டால் எனக்கு தென்பட்டுள்ள அன்னார் (ஸல்) அவர்களின் சிறப்பான அந்தஸ்தையும், தகுதியையும் நான் எடுத்துரைப்பேன்.

**முஹம்மது (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் வழியில் எனது தலையும், உயிரும் அர்ப்பணமாகட்டுமாக.** இதுவே எனது அவாவும், துஆவும், எனது மனதின் உறுதியான எண்ணமும் ஆகும்.

இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தைப் புரிந்து கொள்வதற்கு இவ்வாறு எழுதுவது அவசியமானதாகும். **நெருக்கம், அன்பு ஆகியவற்றின் தகுதிகள் தமது ஆன்மீகப் படித்தரங்களைப் பொருத்தவரை மூன்று வகைப்படும்.**

1.எல்லாவற்றையும் விட மிகக் குறைந்த படித்தரம் - அதுவும் உண்மையில் மிகப் பெரிய படித்தரமேயாகும் - அது, இறை நேசம் என்ற நெருப்பு மனிதனுடைய உள்ளம் எனும் தகட்டை சூடுபடுத்தலாம்.





அதன் மூலமாக நெருப்பின் சில வேலைகளும் நடக்கும் அளவுக்கு கூட சூடுபடுத்தலாம்.

2. ஆனால் தாக்கத்தைப் பெற்றுக் கொண்ட அதனிடத்தில் நெருப்பின் பிரகாசம் உருவாகாமல் இருக்கும் குறைபாடு எஞ்சியுள்ளது. இந்த படித்தரத்தைக் கொண்ட அன்பில் இறையன்பு என்ற தீச்சுடர் படும் போது, அந்த தீச்சுடரினால் ஆன்மாவில் எந்த அளவுக்கு வெப்பம் உருவாகின்றதோ அ(ந்த வெப்பத்)தினை அமைதி, நிம்மதி என்றும், இன்னும் சில நேரத்தில் வானவர் மலக் என்ற சொல்லினாலும் வருணித்துக் கூறப்படுகின்றது.

அன்பின் இரண்டாம் படித்தரத்தை நாம் மேலே விளக்கியுள்ளோம். அதில் இரண்டு அன்புகளும் இணைவதால் இறையன்பு என்ற நெருப்பு மனிதனின் உள்ளம் என்னும் தகட்டை எந்த அளவுக்கு சூடுபடுத்துகிற தென்றால், அதில் நெருப்பு என்ற வடிவத்தில் ஓர் ஒளி உருவாகி விடுகிறது. ஆனால் அந்த ஒளியில் எந்த விதமான தீச்சுடரோ அல்லது கொளுந்துவிட்டு எரிதலோ இருப்பதில்லை. வெறும் ஓர் ஒளி இருக்கிறது. அது ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆவி) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

3. அன்பின் மூன்றாவது படித்தரத்தில், இறையன்பு எனும் மிகவும் எரிகின்ற ஒரு தீச்சுடர் மனித அன்பு எனும் ஆயத்தமான திரியின் மீது பட்டு அதனை எரியச் செய்கின்றது. மேலும் அதன் எல்லா நரம்புகளிலும் மிகைத்து நின்று அதனை தனது நிறைவான, முழுமையான தோற்றமாக மாற்றி விடுகிறது. மேலும் இந்த நிலைமையில் இறையன்பு எனும் நெருப்பு மனிதனுடைய உள்ளத்திற்கு ஓர் ஒளியை வழங்குவது மட்டுமல்லாமல், உடனே அந்த ஒளியுடன் அது முழுவதுமாக கொளுந்துவிட்டு எரிகிறது. மேலும் அதன் தீச்சுடர்களும், ஜுவாலைகளும் சுற்றுப்புறங்களை பகல் வெளிச்சத்தைப் போன்று ஒளிமிக்கதாக ஆக்கிவிடுகின்றன. பிறகு எந்த விதமான இருளும் எஞ்சியிருப்பதில்லை. பின்னர் முழுமையாகவும், எல்லா முழுமையான பண்புகளுடனும் அது முழுவதும் நெருப்பாகவே ஆகி விடுகின்றது.

எரிகின்ற ஒரு தீச்சுடர் என்ற வடிவில், இரண்டு அன்புகளும் இணைவதால் உருவாகும் இந்த நிலைமையை **தரூஹுல் அமீன்** [1]

(நம்பிக்கைக்குரிய ஆவி) என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் இது எல்லா இருளிலிருந்தும் பாதுகாப்பை வழங்குகிறது. மேலும் எல்லா விதமான மாசுகளிலிருந்தும் விலகியிருக்கின்றது. மேலும் இதன் பெயர் 'ஷதீதுல் குவா' [2] (பேராற்றலைக் கொண்டது) என்பதுமாகும். ஏனெனில் இது மிக உயர் தரமான ஆற்றலை கொண்ட வஹி ஆகும். இதை விட பெரிய பேராற்றலைக் கொண்ட வஹியை கற்பனை செய்து பார்க்க முடியாது. மேலும் இதன் பெயர் **'ஸுல் உஃபுகில் அஃலா'** என்பதுமாகும்.[3] ஏனெனில் இது வஹியின் (இறை அறிவிப்பின்) மிக உன்னத படித்தரத்தின் தோற்றமாகும். மேலும் இது **'ரஆ மா ரஆ'** என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.[4] ஏனெனில் இந்த நிலையை கணிப்பதென்பது, எல்லா படைப்பினங்களின் கற்பனை, சிந்தனை, யோசனை ஆகியவற்றை விட்டும் அப்பாற்பட்டதாகும்.

**மேலும் இந்த நிலை உலகத்தில் ஒரே ஒரு மனிதருக்குத்தான் கிடைத்திருக்கிறது. அவர் முழுமையான மனிதர் ஆவார். (அதாவது ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்).** அவருடன் மனிதத்துவத்தின் எல்லா தொடரும் முடிந்து விட்டது. மேலும் மனிதனுடைய தகுதிகளின் வட்டம் முழுமை தன்மையை எட்டி விட்டது. மேலும் உண்மையில் அது இறைவனுடைய படைப்பு எனும் ஒரு நீண்ட கோட்டின் உயர் பகுதியிலுள்ள கடைசி கட்டமாகும். அதுவே உயர்வின் எல்லா படித்தரங்களின் இறுதி எல்லையாகும். இறைவனுடைய ஞானம் எனும் கை அற்பத்திலும் அற்பமான படைப்பிலிருந்து, கீழினும் கீழான படைப்பிலிருந்து படைப்பின் தொடரை துவக்கி மிக உயர்ந்த படித்தரமான அந்த உச்ச நிலை வரை சென்றடைய வைத்து விட்டது.

---

1. திருக்குர்ஆன் 26:194 காண்க. இந்தச் சொல் வழக்கு முற்றிலுமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பொருந்துகிறது - மொழிபெயர்ப்பாளர்.

2. திருக்குர்ஆன் 53:6 காண்க - மொழிபெயர்ப்பாளர்.

3. அவர் மிகவும் உயரிய அடிவானத்தில் இருந்தார். திருக்குர்ஆன் 53:8 காண்க - மொழிபெயர்ப்பாளர்.

4. அவர் பார்க்க வேண்டியதையே பார்த்தார். திருக்குர்ஆன் 53:12ன் கருத்து- மொழிபெயர்ப்பாளர்.





வேறொரு சொற்களில் சொல்லப்போனால், அவர் பெயர்தான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்பதாகும். அதன் பொருள், மிகவும் புகழப்பட்டவர் என்பதாகும். அதாவது, நிறைவு பெற்ற மேன்மைகளின் தோற்றமாக விளங்குபவர். எனவே, இயல்பாகவே அந்த நபிக்கு உயரிய, மேலான அந்தஸ்து இருந்ததைப் போன்றே வெளிப்படையாகவும் உயரிய, மேலான வஹி அவருக்கு வழங்கப்பட்டது. மேலும் அன்பின் மிக உயர்வான உன்னதமான, அந்தஸ்து (அந்த மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவருக்கு கிடைத்தது. இது எத்தகைய உயரிய, மேலான அந்தஸ்து என்றால், நானும், (ஈஸா) மஸீஹ் இருவரும் அந்த அந்தஸ்தை அடைய முடியாது. அதன் பெயர் ஒன்று சேரும் அந்தஸ்து மற்றும் இறைவனுடன் முழுமையாக ஒன்றிவிடும் அந்தஸ்து என்பதாகும்.

இந்த அத்தாட்சி, அடையாளத்தின் அடிப்படையிலேயே, முந்தைய நபிமார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி முன்னறிவித்திருக்கின்றார்கள். மேலும் அவர்கள் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் இத்தகைய) அந்தஸ்தையே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

**(ஈசா) மஸீஹ் மற்றும் இந்த எளியவன் ஆகிய இருவரின் அந்தஸ்து எத்தகையது என்றால் அதனை உருவகமாக மகன் என்ற சொல்லால் வருணித்துக் கூற முடியும். அவ்வாறே (ஹஸ்ரத் நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்) அந்த அந்தஸ்தும் எத்தகைய மகத்தான, மிக உயரிய அந்தஸ்து என்றால், முந்தைய நபிமார்கள் இந்த அந்தஸ்தை கொண்டவரின் தோற்றத்தை உருவகமாக இறைவனின் தோற்றமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.** அவர் தோன்றுவதை இறைவன் தோன்றுவதாகவே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஹஸ்ரத் (ஈசா) மஸீஹ் ஓர் உதாரணத்தை எடுத்து வைத்து கூறியிருப்பதைப் போன்று அவருடைய வருகையை இறைவனுடைய வருகையாகவே வருணித்துக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

(ஈசா) மஸீஹ் கூறியிருப்பதாவது, திராட்சைப்பழத் தோட்டத்தின் பழங்களை வாங்கி வருவதற்காக முதலில் தோட்டத்தின் எஜமானன் (அதாவது இறைவன்) தனது ஊழியக்காரர்களை அனுப்பினான்.

அதாவது ஆரம்ப படித்தரத்தைக் கொண்ட (இறை) நெருக்கம் பெற்றவர்களை அனுப்பினான். இதன் கருத்து, ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹின் காலத்திலும், அந்த நூற்றாண்டிலேயே கொஞ்சம் அவர்களுக்கு முன்னர் வந்திருந்த நல்லவர்கள்.

(நல்லவர்களாகிய) அந்த ஊழியக்காரர்களை அனுப்பினான். தோட்டக்காரர்கள் தோட்டத்தின் பழங்களை கொடுக்க மறுத்தபோது தோட்டத்தின் எஜமானன் வலியுறுத்தியவாறு தனது மகனை அவர்களின் பக்கம் அனுப்பி வைத்தான். அவர்கள் அவரை மகன் எனக் கருதி தோட்டத்தின் பழத்தை அவரிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான்.

**இவ்விடத்தில் மகன் என்பதன் கருத்து, இறையன்பின் இரண்டாம் படித்தரத்தைக் கொண்ட நெருக்கத்தைப் பெற்றிருக்கும் (ஈசா) மஸீஹ் ஆவார்.**

ஆனால் தோட்டக்காரர்கள் அவருடைய மகனுக்கும் தோட்டத்தின் பழங்களை கொடுக்கவில்லை. மாறாக, தமது கருத்தின்படி அவரைக் கொன்றுவிட்டனர். இதற்குப் பிறகு (ஈசா) மஸீஹ் கூறுகிறார்: இப்போது தோட்டத்தின் எஜமானன் நேரடியாக வருவான். அதாவது தோட்டக்காரர்களைக் கொன்று தோட்டத்தை குறித்த காலத்தில் கனிகளைத் தருகின்ற மக்களிடம் கொடுப்பதற்காக **இறைவன் நேரடியாக வருகை தருவான்.**[1]

இந்த இடத்தில் **இறைவன் வருவான் என்பதன் கருத்து இறை நெருக்கம், இறையன்பு என்பதன் மூன்றாவது படித்தரத்தை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையாகும்.**[2] மேலும் இவையெல்லாம் ஆன்மீக படித்தரங்களாகும். அவை உருவகங்களாக பொருத்தமான சொற்களால்

1 - மத்தேயு அதிகாரம் 21 வசனங்கள் 33 முதல் 41 வரை காண்க - மொழிபெயர்ப்பாளர்.

2 - நமது தலைவரும், எஜமானருமாகிய காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பற்றி அவர்கள் உலகத்தில் வருவது, உண்மையில் இறைவன் வெளிப்படுவதாகும் என்று ஹஸ்ரத் (ஈசா) மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் கூறவில்லை; மாறாக, இந்த வகையான கூற்றை பிற நபிமார்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தத்தமது





கூறப்பட்டுள்ளன. அவ்வாறல்லாமல், இவ்விடத்தில் உண்மையான மகன் என்ற கருத்து அல்ல; அல்லது உண்மையான இறைதன்மை என்ற கருத்திலும் அல்ல.

இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தைக் கூறுவதும் பொருத்தமானதாகும். அதாவது ரூஹுல் குதுஸ், ரூஹுல் ஆமீன் பற்றி நாம் கொடுத்திருக்கின்ற விளக்கம், உண்மையில் மலக்குகள் (வானவர்கள்) பற்றி இஸ்லாத்தைச் சார்ந்தவர்கள் கொண்டிருக்கும் கோட்பாடுகளுக்கு மாறுபட்டதன்று. ஏனெனில் மலக்குகள் தமது பௌதீக உடலுடன் மனிதர்களைப்போன்று கால்களால் நடந்து

முன்னறிவிப்புகளில் குறிப்பிட்டிருகின்றனர். மேலும் **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகையை இறைவனின் வருகையாகக் குறிப்பிட்டுள்ளனர்.** வருகையைஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகையை இறைவனின் வருகையாகக் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் சொல்லப்போனால் இறைமையின் நிறைவான தோற்றமாக இருக்கின்ற காரணத்தினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை **இறைவன் என்றே கூறியிருக்கின்றனர்.** தாவூதின் சங்கீதத்தில் இவ்வாறு வருகின்றது:

"எல்லா மனுபுத்திரரிலும் நீர் மிக்க அழகானவர். உமது உதடுகளில் அருள் பொழிகிறது. ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர் வதிக்கிறார்." (அதாவது நீர் காத்தமுல் அன்பியாவாக மாறினீர்.)

"போர் வீரரே ! உமது மகிமையும், உமது மகத்துவமுமாகிய உம்முடைய வாளை நீர் உம்முடைய அரையில் கட்டிக் கொண்டு, சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறி வாரும். உமது வலது கரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப் பண்ணும்.

உம்முடைய அம்புகள் கூர்மையானவை. அவை ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும். மக்கள் உமக்கு கீழே விழுவார்கள்.

**தேவனே ! உமது ராஜ்ஜியத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.**

நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர். அதனால் உம்முடைய தேவனாகிய தேவனே உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (சங்கீதம் 45:2-7)

இங்கே 'தேவனே ! உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது' என்ற சங்கீதத்திலுள்ள இந்த சொற்றொடர் உருவகமாகக் கூறப்பட்டதாகும் என்பதை அறிய வேண்டும். இதன் மூலமாக ஆன்மீகமான முறையில் முஹம்மதிய்ய மகத்துவத்தை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

பிறகு, ஏசாயா நபியின் வேதத்திலும் அவ்வாறே எழுதப்பட்டுள்ளது. அதன் வாசகம் இதுவாகும்: "பாருங்கள். நான் பாதுகாக்கின்ற என் அடியார்.

பூமியில் இறங்கி வருகின்றனர் என்பதை இஸ்லாமிய ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்வதில்லை. இந்தச் சிந்தனை வெளிப்படையான முறையில் அபத்தமானதாகும். ஏனெனில் மலக்குகள் (வானவர்கள்) தத்தமது தொண்டுகளை நிறைவேற்றுவதற்காக தமது பௌதீக உடலுடன் பூமியில் இறங்குவது கண்டிப்பானதாக இருந்தால் பிறகு அவர்களிடமிருந்து எந்தவொரு பணியும் நடைபெறுவது முற்றிலும் சாத்தியமற்றதாக ஆகிவிடும்.

உதாரணமாக, பல்வேறு நாடுகளிலும் நகரங்களிலும் ஒருவருக்கொருவர் ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலும் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை ஒரு

---

என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். என் உள்ளம் அவர் மீது திருப்தி கொள்கின்றது. நான் என் ஆவியை அவர் மேல் அமரப் பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.

அவர் கூக்குரலிடவுமாட்டார். தமது சத்தத்தை உயர்த்தவும், அதை வீதியிலே கேட்கப் பண்ணவுமாட்டார்.

அவர் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கி எரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.

அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைநாட்டாத வரை இளக்கரிப்பதுமில்லை; களைப்படைவது மில்லை. அவருடைய வேதத்திற்கு தீவுகள் காத்திருக்கும்.” (ஏசாயா 42 : 1-4)

“**கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டு,** கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டு, போர் வீரனைப்போல் வைராக்கிய மூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.”(ஏசாயா 42:13)

இங்கு, கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்படுவார்......... (ஏசாயா 42 : 13) என்ற சொற்றொடரும் உருவகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கம்பீரமான வருகையை வெளிப்படுத்துகின்றது.

மேலும் இவ்வாறே இன்னும் பல நபிமார்களும் இதே உருவகத்தை தமது முன்னறிவிப்புகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்திற்காக பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அந்த எல்லா இடங்களையும் குறிப்பிடுவதால் நீண்டு விடும் என்பதால், தற்போது நான் குறிப்பிட்ட இத்துடன் போதுமெனக் கொள்கிறேன். மேலும் நான் இந்த இடத்தில் இறைநெருக்கம், இறையன்பு ஆகியவற்றின் மூன்று படித்தரங் களைக் குறிப்பிட்டு மிகச்சிறந்த படித்தரமாகிய மூன்றாவது படித்தரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக நிரூபித்துக் காட்டியிருக் கிறேன். **இது என் சார்பாக நான் சுயமாக புரிந்து கொண்ட கருத்து அல்ல; மாறாக, இறைவன் இறையறிவிப்பாக எனக்குப் புரிய வைத்ததாகும்.**





நொடிப்பொழுதில் கைப்பற்றுகின்ற மலக்குல் மவ்த் எனும் வானவர் ஒவ்வொருவருக்காகவும் முதலில் கால்களால் நடந்து சென்று மனிதனுடைய நாட்டிற்கும், நகரத்திற்கும், வீட்டிற்கும் செல்வது தேவையுடையதாக இருக்குமென் றால், இவ்வளவு கஷ்டதிற்குப் பிறகு உயிரைப் பறிப்பதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்தால் இவ்வளவு பெரிய வேலைக்கு ஒரு நொடிப்பொழுது என்ன - பல மாதங்களுக்கான கால அவகாசம் கூட போதுமானதாக இருக்க முடியாது. ஒருவர் மனிதர்களைப் போன்று கண் இமைக்கும் நேரத்தில் அல்லது அதற்கும் குறைவான நேரத்தில் முழு உலகத்தையும் சுற்றி வருவது சாத்தியமா என்ன? ஒருபோதும் சாத்தியம் இல்லை. இன்னும் சொல்லப் போனால், மலக்குகள், இறைவன் அவர்களுக்காக நிர்ணயித்துள்ள அசல் இடங்களிலிருந்து முன்னே பின்னே செல்லமாட்டார்கள். மலக்குகள் சார்பாக திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

‘‘எங்கள் எல்லாருக்கும் குறிப்பிட்ட ஓர் இடம் உண்டு. நிச்சயமாக நாங்கள் எல்லாரும் இறைவன் முன் அணிவகுத்து நிற்பவர் களாவோம்.’’ (திருக்குர் ஆன் 37:165-166)

உண்மை என்னவென்றால், சூரியன் தனது இடத்திலேயே இருந்து கொண்டு, தனது வெப்பத்தையும் ஒளியையும் பூமியில் பரப்பி தனது சிறப்புத்தன்மைக்கேற்ப பூமியிலுள்ள ஒவ்வொன்றிற்கும் பயன் தருவதைப்போன்று வானத்தின் இந்த ஆன்மீக படைப்புகளும்- அவற்றை நீங்கள் யுனானியர்களின் சிந்தனைக்கேற்ப வானத்தின் ஆன்மாக்கள் எனக் கூறினாலும் அல்லது (ஜெராஸ்டரின் புனித நூலாகிய) அவெஸ்தாவின் மரபுச் சொற்களின் படி அல்லது வேதங்களின் மரபுச் சொற்களின்படி நட்சத்திரங்களின் ஆன்மாக்கள் என்று பெயர் சூட்டினாலும் அல்லது மிகவும் நேரியவழியில் ஓரிறை கொள்கையின் நடைமுறைப்படி அல்லாஹ்வின் மலக்குகள் ✶ என்று கூறினாலும் உண்மையில் இந்த உன்னத படைப்புகள் தத்ததமது

---

✶ மலக்குகள் விண்ணிலுள்ள பொருள்களுக்கு ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும், பூமியிலுள்ள பொருள்களுக்கு ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த அர்த்தத்தில்தான் அவர்கள் மலக்குகள் என அழைக்கப்படுகின்றனர். அதாவது இவற்றை நிலைநாட்டுவதற்கும், எஞ்சியிருக்க வைப்பதற்கும் ரூஹைப்போன்று இருக்கின்றனர், மேலும் அவர்கள் இறைதூதர்களுக்கு பயன்படுகின்றார்கள் என்ற பொருளிலும் மலக்குகள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இடத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலும் இறைவனின் முழுமையான ஞானத்தின் படி பூமியிலுள்ள ஒவ்வொன்றையும் அதன் உயரிய குறிக்கோள் வரை சென்றடைய வைப்பதற்காக இந்த வானவர்கள் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். வெளிப் படையான தொண்டுகளும் மறைமுகமான தொண்டுகளும் செய்கின்றனர். நமது உடல்கள் மற்றும் நமது எல்லா வெளிப்படையான ஆற்றல்களின் மீது சூரியன், சந்திரன், இன்ன பிற கோள்கள் ஆகியவற்றின் தாக்கம் இருப்பதைப் போன்றே, நமது உள்ளம், சிந்தனை, மற்றும் நமது அனைத்து ஆன்மீக ஆற்றல்களின் மீது இந்த எல்லா மலக்குகளும் நமது பல்வேறு தகுதிகளுக்கேற்ப தத்தமது தாக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

எந்தப் பொருள் விலையுயர்ந்த கல்லாக மாறும் தகுதியை தன்னிடத்தில் கொண்டுள்ளதோ அது ஒரு மண்ணாகவோ, சிப்பிக்குள் நுழையும் நீர்த் துளியாகவோ இருந்தாலும் அது அல்லாஹ்வுடைய மலக்குகளின் ஆன்மீகப் பயிற்சியினால் மாணிக்கமாகவோ, நீலமணியாகவோ, வைரமாகவோ அல்லது மிகவும் உயர்தரமான, மின்னுகின்ற, கனமான முத்தாகவோ அல்லது மிக மேலான தரத்தை உடைய உள்ளத்தையும், மூளையையும் கொண்ட மனிதனாகவோ மாறிவிடுகின்றது.

இறைவன் புறமிருந்து வந்தது என நட்சத்திர வணங்கிகள் நம்புகின்ற அவெஸ்தா வேதமும் நட்சத்திரங்களுடனும், வானங்க ளுடனும் தொடர்புடைய இந்த ஆன்மாக்களை மலக்குகள் எனக் குறிப்பிடுவது மட்டுமல்லாமல், அவற்றை வணங்குவதற்கும் வலியுறுத்துகிறது.

இந்த அவெஸ்தா (வேதம்) தனது வெளிபாட்டின் காலத்தை எவ்வளவு நீண்ட வரலாறாகத் தெரிவிக்கிறதென்றால், இதில் கோடியில் ஒரு பகுதி கூட (இந்து) வேதம் இறக்கப்பட்ட காலத்தைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அதாவது, வேதத்தைப் பற்றி, மற்றவர்களின் அனுமானம், கற்பனையின்படி, அது 196 கோடி ஆண்டுகளுக்கு முன் வெளிப்பட்டதாகக் குறிப்பிடப்படப்பட்டுள்ளது. ஆனால் அவெஸ்தா (என்ற வேதம்) 300 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்பட்டதாக தன்னைப்பற்றித் தானே குறிப்பிடுகின்றது. இன்னும் சொல்லப்போனால் இதை நாம் அஞ்சி அஞ்சி எழுதியிருக்கின்றோம்.





அங்கேயோ 300 கோடி என்பதை விட அதிகமாக, இடையில் மூன்று பூஜ்ஜியமும் இருக்கின்றது.(அதாவது மூன்று இலட்சம் கோடி ஆண்டுகள் என்று உள்ளது.)

அவ்வாறே வேதமும் அந்த ஆன்மாக்களை ஊடகங்களாகவும், இடையில் உள்ள தொண்டர்களாகவும் மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை. மாறாக, பல்வேறு இடங்களில் அவற்றின் உயர்வையும், மகத்துவத்தையும் எடுத்துக் கூறுகின்றது. மேலும் அவற்றிடம் வேண்டுதல் செய்ய வேண்டும் என்றும் போதிக்கின்றது. இந்த வேதங்களில் மாற்றுதலாகவும், இடைச் செருகலாகவும் இந்த குஃப்ரான (இறை மறுப்பான) போதனைகள் பின்னர் சேர்க்கப்பட்டிருக்கலாம். வேதத்தில் அத்தகைய இன்னும் பல பொருத்தமற்ற போதனைகள் காணப்படுகின்றன.

உதாரணமாக, இந்த உலகத்தை படைத்தவன் யாருமில்லை. எல்லா பொருள்களும் தனது உண்மையான பருப்பொருளையும் உண்மையான ஆன்மாவையும் பொருத்தவரை தொன்மையான காலந்தொட்டே இருந்து வருகின்றன; மேலும் அவை தாம் இருப்பதற்கு அவையே கடவுளாக இருக்கின்றன என்ற கொள்கை.

அல்லது எந்தவோர் ஆன்மாவுக்கும் மறுபிறவி என்ற தீய சகுனமான சுழற்சியிலிருந்து ஒருபோதும், எந்த காலத்திலும் இரட்சிப்பு கிடைக்கவே முடியாது என்ற கொள்கை.

அல்லது கணவனைக் கொண்டிருக்கும் ஒரு பெண் ஆண் குழந்தை இல்லாத நிலையில் அந்நிய ஆண் மூலமாக சந்ததியைப் பெறுவதற்காக அவனுடன் உடலுறவு கொள்ளலாம் என்ற (நியோகக்) கொள்கை.

அல்லது மாபெரும் தூய மக்களும் - அவர்கள் வேதத்தின் ரிஷிகளாகவே இருந்தாலும், அவர்கள் மீது நான்கு வேதங்கள் இறங்கியிருந்தாலும் - அவர்கள் கூட நிரந்தர முக்தி பெற முடியாது என்ற கொள்கை. மேலும் அவர்கள் நிரந்தரமாக சான்றோராகவும், கண்ணியத்துடனும் நினைவு கூறத் தகுந்தவர்களாக கண்டிப்பாக இருக்க முடியாது.இன்னும் சொல்லப்போனால், அவர்கள் மறுபிறவி எனும் சுழற்சியில் சிக்குண்டு பிற விலங்குகளைப் போல என்னவாக இருந்து என்னவாகவோ ஆகிவிடும் சாத்தியம் இருக்கிறது - ஏன்-

ஒருவேளை அப்படி (வேறு படைப்பினங்களாக) மாறி விட்டிருக்கலாம்.

மேலும் அவர்களின் கற்பனையின் படி, ஒரு மனிதர் - அவர் அவதார புருஷர்களை விட உயர்ந்த தகுதியைக் கொண்டவராக இருந்தாலும் அல்லது வேத ரிஷிகளைவிட மேலானவராக இருந்தாலும் அவர் ஒரு காலத்தில் புழு, பூச்சியாகவோ அல்லது மிகவும் வெறுக்கத்தக்க விலங்காகவோ மாறி ஏதாவது கீழ்த்தரமான படைப்பினமாக மறு பிறவி எடுக்க முடியும் என்பது அவருக்கு சாத்தியமிருக்கிறது என்பது மட்டுமல்லாமல் இயற்கை சட்டத்தின்படி அது அவருக்கு கண்டிப்பானதாகும்.

இவையெல்லாம் மனிதர்களின் கீழ்த்தரமான கற்பனைகள் உருவாக்கிய அபத்தமான கொள்கைகளாகும். மேலும் எவர்கள் இந்த எல்லா வெட்கங்கெட்ட செயல்களையும், மனித குலத்திற்கு - ஏன் - தமது சான்றோர்களுக்கும் தலைவர்களுக்கும் கண்ணியக் குறைவான பிறவிகள் எடுப்பதையும் ஆகுமானதாக்கிக் கொண்டுள்ளார்களோ அவர்கள் நட்சத்திரங்களில் உள்ள ஆன்மாக்களிடம் (வானவர்களிடம்) வேண்டுதல் புரிவதையும், இறைவனை வணங்குவதைப் போன்று அவற்றை வணங்குவதையும் ஆகுமானதாக்கிக் கொண்டுள்ளனர்.

ஆனால் எல்லா வகையிலும் ஓரிறை கொள்கை, நாகரிகம் ஆகியவற்றின் வழியைத் திறந்து கொடுக்கின்ற திருக்குர்ஆன், இறைவனுடன் வேறு எந்த படைப்பினத்தை வணங்குவதையோ அல்லது அவனுடைய படைத்து காத்தோம்பும் வல்லமையை குறைபாடுள்ளதாகவும் செயலற்றதாகவும் ஒப்புக் கொள்ளவதையோ, இறைவனை எல்லாவற்றின் ஆதியாகவும் தலையூற்றாகவும் கொள்ளாமலிருப்பதையோ அல்லது வேறு எந்த வெட்கங்கெட்ட செயலை தனது சமூக வழிமுறையில் நுழைப்பதையோ ஒருபோதும் ஆகுமானதாகக் கொள்ளவில்லை.

இப்போது நான் மலக்குகள் (வானவர்கள்) பற்றிய குறிப்பின் பக்கம் திரும்பியவாறு கூறுவது என்னவெனில், **திருக்குர்ஆன் எந்த வகையில் வானவர்களைப் பற்றிய நிலையை விளக்கியிருக்கிறதோ அது மிகவும் நேரானதும், அனுமானத்திற்கு நெருக்கமானதுமான வழியாகும்.** அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர மனிதனுக்கு வேறு வழியில்லை. திருக்குர்ஆனைப் பற்றி மிக ஆழமான





கண்ணோட்டத்தில் சிந்திக்கும் போது தெரிய வருவது என்னவென்றால், மனிதன் - ஏன் - பூமியிலுள்ள அனைத்து படைப்புகளின் வெளிப்படையான, உட்புறமான வளர்ச்சிக்கு சில காரணிகள் இருப்பது அவசியமானதாகும். வானவர்கள் என்ற பெயரால் அழைக்கப்படும் சில தூய ஆன்மாக்களின் தொடர்புகள் வானத்தின் பல்வேறு பகுதிகளுடன் தனித்தனியானவையாக இருக்கின்றன. சில (வானவ)ர் தமது சிறப்பான தாக்கங்களினால் காற்றை வீசச் செய்பவர்களாவர். இன்னும் சிலர் வேறு சில தாக்கங்களை பூமியில் உருவாக்குபவர்களாவர் என்பது திருக்குர்ஆனின் சிற்சில சைகைகளின் மூலமாக மிகவும் தெளிவாகத் தெரிகின்றது.

அந்த தூய ஆன்மாக்கள் (வானவர்கள்) தமது ஒளியின் தொடர்பின் காரணமாக வானங்களில் காணப்படும் ஒளிமிக்க, பிரகாசமான நட்சத்திரங்களுடன் தொடர்புடையவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் நாம் அதை, பூமியிலுள்ள ஒவ்வோர் உயிரினமும் தன்னிடம் உயிரைக் கொண்டிருப்பது போன்றதொரு தொடர்பாக புரிந்து கொள்ளக் கூடாது. அவ்வாறன்று. அந்த தூய ஆன்மாக்களுக்கு ஆன்மீகமான முறையில் கிடைத்திருக்கும் தமது ஒளி மற்றும் பிரகாசம் ஆகியவற்றின் தொடர்பின் காரணமாக, ஒளிமிக்க நட்சத்திரங்களுடன் ஒரு மேலோட்டமான தொடர்பு உள்ளது. அது எத்தகைய தொடர்பு என்றால், அந்த தூய ஆன்மாக்கள் அந்த நட்சத்திரங்களை விட்டுப் பிரிவதைக் கற்பனை செய்து பார்த்தால், பிறகு அவர்களின் ஆற்றல்களில் வித்தியாயம் ஏற்பட்டுவிடும். இந்த ஆன்மாக்களுடைய மறைமுகமான கையின் வலிமையினாலேயே எல்லா நட்சத்திரங்களும் தத்தமது பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன. இறைவன் அனைத்து உலகத்திற்கும் உயிராக இருப்பதைப் போன்றே அந்த ஒளிமிக்க ஆன்மாக்கள் நட்சத்திரங்கள் வான்கோள்கள் ஆகியவற்றிற்கு உயிராகவே இருக்கின்றன.

(ஆயினும் இங்கே முழுமை யான ஒப்புமை என்ற பொருளில் அல்ல - நூலாசிரியர்).

மேலும் அ(ந்த வான)வர்கள் (நட்சத்திரங்கள் கோளங்கள் ஆகியவற்றை விட்டும்) தனியாக பிரிந்திருப்பதினால் அவற்றின் இருப்பின் நிலையில் முற்றிலும் குழப்பமான வழி காணப்படுவது கண்டிப்பானதும் அவசியமானதும் ஆகிவிடும். மேலும் எந்த அளவுக்கு

வானங்களில் கோள்களும், நட்சத்திரங்களும் காணப்படுகின்றனவோ அவை, பூமியின் அனைத்து படைப்புகள் முழுமை அடைவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் எப்பொழுதும் பணியில் ஈடுபட்டுள்ளன என்பதில் எவரும் இன்றுவரை கருத்து வேறுபாடு கொண்டதில்லை.

சுருக்கமாக, எல்லா தாவரங்கள், கனிமங்கள், உயிரினங்கள் ஆகியவற்றின் மீது வான் கோள்களின் தாக்கம் இரவு பகலாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது கண்டறியப்பட்ட, சான்று எனும் குன்றின் மேல் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். சந்திரனின் ஒளி பழங்களை பருமனாக்குவதற்கும் சூரிய ஒளி அவற்றை பழுக்க வைப்பதற்கும், இனிப்பாக்குவதற்கும், வேறு சில காற்றுகள் பழங்களை பெருமளவில் கொண்டு வருவதற்கும் சந்தேகமின்றி தாக்கத்தை உருவாக்குபவையாக இருக்கின்றன என்பதை அறிவீனரிலும் அறிவீனரான பாமரனும் நம்பத்தான் செய்வார். ஆக, வெளிப்படையான உலகம் இவற்றின் பல்வேறு தாக்கங்களினால் வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது அந்தரங்கமான விவரங்களிலும் அந்த ஒளிமிக்க ஆன்மாக்கள் இறை கட்டளை யினால் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? **உயிருக்கு உடலுடன் தொடர்பு இருப்பதைப் போன்று அந்த ஒளிமிக்க ஆன்மாக்களுக்கு (வானவர்களுக்கு) ஒளிமிக்க உடல்களுடன் உறுதியான தொடர்பு இருக்கின்றனவே !**

இனி, இதற்குப்பிறகு இன்னொன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். இறைவனுக்கும் அவனுடைய தூய நபிமார்களுக்கும் இடையில் வஹி எனும் ஒளியை வழங்குவதற்காக இன்னோர் **ஊடகத்தைக் கற்பிப்பது** வெளிப்படையில் பார்க்கும்போது, மிகவும் மரியாதைக்கு அப்பாற்பட்ட விஷயமாகத் தெரியலாம். ஆனால் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், இதில் **எவ்வித மரியாதைக் குறைவான விஷயமும் இல்லை;** இன்னும் சொல்லப்போனால், உலகத்திலுள்ள எல்லா பொருள்களைப் பற்றிய விஷயத்திலும் மிகத் தெளிவான முறையில் கண்டறியப்படுகின்ற, உணரப்படுகின்ற இறைவனின் பொதுவான இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டது தான் என்பதை நன்றாகப் புரியலாம். ஏனெனில், **நபிமார்கள் (அலைஹிமுஸ் ஸலாம்) அவர்களும்** தமது வெளிப்படையான உடல் மற்றும் வெளிப்படையான





ஆற்றல் ஆகியவற்றைப் பொருத்தவரை (வானவர்களாகிய) **இதே ஊடகங்களுக்கு தேவையுடையோராக இருக்கின்றனர்** என்பதை நாம் பார்க்கின்றோம்.

**நபியின் கண்** எவ்வளவுதான் ஒளிமிக்கதாகவும், அருளுக் குரியதாகவும் இருந்தாலும் சாதாரண மக்களின் கண்களைப்போன்று **சூரியன் அல்லது அதைப் போன்ற வேறொன்று இல்லாமல் அது எதையும் பார்க்க முடியாது.** சூரியன் அல்லது அதைப் போன்ற வேறொன்று இல்லாமல் அது எதையும் பார்க்க முடியாது. அவ்வாறே காற்று எனும் ஊடகம் இல்லாமல் எதையும் கேட்கவும் முடியாது. எனவே, நபியின் ஆன்மீகத்தின் மீதும் இந்த வான் கோள்களின் ஒளிமிக்க ஆன்மாக்களின் தாக்கம் நிச்சயம் ஏற்படும்; இன்னும் சொல்லப் போனால் மற்றவர்களை விட அதிகமாக தாக்கம் ஏற்படும் என்பதையும் கண்டிப்பாக நம்ப வேண்டியது ஏற்படுகிறது. ஏனெனில் எந்த அளவுக்கு ஆற்றல் தெளிவாகவும், முழுமையாகவும் இருக்கிறதோ அதே அளவுக்கு தாக்கமும் தெளிவாகவும், முழுமையாகவும் ஏற்படுகிறது. இந்த நட்சத்திரங்கள், விண் கோள்கள், தத்தமது உடலுக்கென்று ஓர் ஆன்மாவைக் கொண்டுள்ளன என்றும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. அவற்றிற்கு விண் கோள்களின் ஆன்மாக்கள் எனவும் பெயர் சூட்டலாம். மேலும் நட்சத்திரங்களிலும், விண் கோள்களிலும் அவற்றின் உடலுக்கேற்ப பலவிதமான சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன; அவை பூமியிலுள்ள ஒவ்வொன்றின் மீதும் தமது தகுதிக்கேற்ப தாக்கத்தை ஏற்படுத்து கின்றன என்பதைப் போன்று அவற்றின் ஒளிமிக்க ஆன்மாக்களிலும் பலவிதமான சிறப்பம்சங்கள் இருக்கின்றன. அவை ஞானம் மிக்க இறைவனின் கட்டளைக் கிணங்க, பூமியின் அகத்திலும் தமது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் இதே ஒளிமிக்க ஆன்மாக்கள் முழுமையான அடியார்களுக்கு பௌதீக வடிவத்தில் தோன்றி வெளிப்படுகின்றன. மேலும் மனித உருவத்தில் தோன்றி தென்படுகின்றன.

**இந்த சொற்பொழிவு வெறும் பேச்சித் திறமையினால் அல்ல; மாறாக இது, சத்தியத்தையும், தத்துவத்தையும் தேடுபவர்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய உண்மையாகும்.** ஏனெனில், பூமியிலுள்ள அண்ட சராசரங்களுக்கான வளர்ச்சி

வானத்தின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும் போது, பூமியின் பொருள்களின் மீது தொன்று தொட்டு நாம் பார்வையிடும்போதும் இந்த வளர்ச்சியின் விளைவுகளை ஒவ்வொரு உடலின் மீதும் - அவை தாவரங்களாக இருந்தாலும் கனிமங்களாக இருந்தாலும் விலங்குகளாக இருந்தாலும் பகிரங்கமான முறையில் நமக்கு தென்படுகின்றன. எனவே, இந்த தெளிவான அனுபவத்தின் மூலமாக, ஆன்மீக முழுமைத் தன்மைகள், உள்ளம், சிந்தனை ஆகியவற்றின் ஒளியின் தொடர் முன்னேற்றமடைவதிலும் சந்தேகமின்றி இந்த ஒளிமிக்க ஆன்மாக்க (ளாகிய வானவர்க) ளுக்கு தொடர்பு இருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

இந்த தொடர்பை அடிப்படையாகக் கொண்டே ஒளிமிக்க ஷரீஅத், அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் இடையில் உருவகமாக வானவர்களை ஊடகமாகக் கொண்டிருப்பதை ஒரு கட்டாய விஷயமாக வெளிப்படுத்தியிருக்கின்றது. அதன் மீது நம்பிக்கை கொள்வது மார்க்கத்தின் தேவைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுள்ளது. எவர்கள் தமது வெறுக்கத்தக்க அறியாமையினால் இந்த இறை தத்துவத்தைப் புரியவில்லையோ- உதாரணமாக **ஆரியர்கள், பிரம்ம சமாஜிகள்** ஆரியர்கள், பிரம்ம சமாஜிகள் ஆகியோர் தமது உள்ளங்களில் நிரம்பியிருக்கும் தேவையற்ற கருமித்தனம், வெறுப்பின் காரணமாக, **திருக்குர்ஆன் மீது, அது அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர்களுக்கு மத்தியில் வானவர்கள் எனும் ஊடகத்தை அவசியமாகக் கொள்கின்றது என்ற ஆட்சேபணையை சுமத்தியுள்ளனர்.** ஆனால், பூமியில் காணப்படும் இறைவனின் வளர்ச்சி பற்றிய பொதுவான சட்டமும் இதே விதிமுறைப்படிதான் இருக்கின்றது என்பதை அவர்கள் புரியவுமில்லை; எண்ணிப்பார்க்கவுமில்லை.

இந்துக்களின் கூற்றுப்படி, எந்த ரிஷிமார்களின் மீது இந்துக்களின் நான்கு வேதங்கள் இறங்கினவோ அவர்கள் தமது பௌதீக ஆற்றல்களை சரியாக நிலைபெற வைப்பதற்கு வானத்தின் ஊடகங்களின் தாக்கங்களுக்கு தேவையுடயவர்களாக இருக்கவில்லையா என்ன? அவர்கள் சூரியனின் ஒளி இல்லாமல் கண்ணின் ஒளியினால் பார்க்கும் பயனை பெற முடிந்ததா? அல்லது





காற்று எனும் ஊடகம் இல்லாமல் எந்தவோர் ஓசையையாவது அவர்களால் கேட்க முடிந்ததா? ஒருபோதும் இல்லை என்பதே இதற்குரிய பகிரங்கமான விடையாக இருக்கும். மாறாக, அவர்களும் வானத்திலிருந்து கிடைக்கும் பரிணாம வளர்ச்சி பெறுதல் மற்றும் முழுமையடையச் செய்தல் ஆகியவற்றிக்கு மிகவும் தேவையுடையோராக இருந்தனர். இந்துக்களின் வேதங்கள் இந்த வானவர்களைப் பற்றி எங்கு மறுத்துள்ளது? இன்னும் கூறப்போனால், அவை இந்த ஊடகங்களை ஏற்றுக் கொள்வதிலும், மதிக்கத்தக்கவையாக புரிந்து கொள்வதிலும் அவற்றின் தகுதியை இறைவனின் தகுதியுடன் இணையாக்கிவிடும் அளவுக்கு மிகவும் மிகைப்டுத்தி விட்டது.

ரிக் வேதம் ஒன்றையே பாருங்கள்! அதில் எந்த அளவுக்கு வானத்தின் ஊடகங்களும், பூதங்களும் வணங்குவது காணப்படுகிறது. மேலும் எவ்வாறு அவற்றிற்கு கண்ணியமளிப்பதிலும், மரியாதை செலுத்துவதிலும் அவற்றிற்கு புகழ்மாலை சூட்டுவதிலும் அவ்வேதங்கள் பல பக்கங்களை கருமையாக்கி விட்டன! எவ்வளவு தன்னடக்கத்துடனும், மன்றாடியவாறும் அவற்றிடம் பிரார்த்தனைகள் வேண்டப்பட்டுள்ளன. அவை ஒப்புக் கொள்ளப்படவுமில்லை.

ஆனால் பிரித்தறிவிக்கத் தகுந்த குர்ஆனோ அப்படிச் செய்யவில்லை ! மாறாக, உயிருக்கு உடலுடன் இருக்கும் தொடர்பைப் போன்று, வானத்தின் உடல்களுடன் அல்லது ஐம் பெரும் ஊடகங்களுடன் அல்லது வளிமண்டலத்துடன் தொடர்புடைய அந்த ஒளிமிக்க ஆன்மாக்களை, மலக்குகள் (வானவர்கள்) ஜின்னாத் (மறைந்திருக்கும் ஊடகங்கள்) என்ற பெயரிலேயே அழைக்கிறது. மேலும் ஒளிமிக்க நட்சத்திரங்கள், கோள்களை விட தனக்கென ஒரு தகுதியைக் கொண்டிருக்கின்ற **அந்த ஒளிமிக்க வானவர்களை சுய சக்தியுள்ளவர்களாகவோ, தற்சார்புள்ளவர்களாகவோ ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அந்த வானவர்களை தமது தூய தன்மையில் இறைதூதர்களுக்கு இடையில் ஓர் ஊடகமாகக் கற்பிக்கவில்லை.** மாறாக, அவர்களுக்கு இருக்கும் தொடர்பு உயிரற்ற ஒன்று ஓர் உயிருள்ளவரின் கையில் இருப்பதைப் போன்றதொரு தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கிறது, அந்த உயிரற்றதைக் கொண்டு எவ்வகையில் அந்த உயிருள்ளவர் வேலை வாங்க விரும்புகிறாரோ

வேலை வாங்குகின்றார். இதன் அடிப்டை யிலேயே திருக்குர்ஆனில் சில இடங்களில் உலகத்தின் ஒவ்வொரு மூலப்பொருள்களுக்கும் மலக்குகள் (வானவர்கள்) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏனெனில் அவ்வனைத்து மூலப் பொருள்களும் தமது கண்ணிய மிக்க இறைவனின் குரலுக்கு செவிசாய்க்கின்றன. மேலும் அவற்றிற்கு கட்டளையிடப்பட்டதையே அவை செய்கின்றன. உதாரணமாக, மனித உடலில் நோயின் பக்கமோ அல்லது உடல் நலத்தின் பக்கமோ என்ன மாற்றங்கள் ஏற்படுகின் றனவோ அதன் ஒட்டுமொத்தமான தொகுப்பின் ஒவ்வோர் அணுவும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப முன்பின் காலெடுத்து வைக்கின்றது.

திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த மாதிரியான ஊடகங்களை ஒப்புக் கொள்வது எப்படி ஷிர்க் ஆக முடியும்? இறைவனுடைய வல்லமையின் மகத்துவத்தில் என்ன மாறுதல் ஏற்பட முடியும்? என்பதை இப்போது சற்று கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இவை இயற்கைச் சட்டத்தின் ஒவ்வொரு பக்கமும் எழுதப்பட்டுக் காணப்படுகின்ற இறைஞானத்தின் இரகசியங்கள் மற்றும் ஞானத்தின் நுட்பமான விஷயங்களாகும். இந்த ஏற்பாட்டை ஒப்புக் கொள்ளாமல் இறைவனின் முழுமையான வல்லமை நிரூபணமாகவே முடியாது; இறைவனின் இறைதன்மையும் நடைபெற முடியாது.

ஒவ்வோர் அணுவும் இறைவனின் வானவராக மாறி அவனுக்குக் கட்டுப்படுவதில் ஈடுபடாதவரை இந்த எல்லா ஏற்பாடுகளும் அவனுடைய விருப்பதிற்கேற்ப எப்படி நடைபெற முடியும்? வானவர்களுக்கு ஆன்மீக அமைப்புடன் தொடர்பு இருப்ப(தாக ஒப்புக் கொள்வ)தனால் இறைவனின் வல்லமைமிக்க மகத்துவத்தின் மீது கறை ஏற்பட முடியுமென்றால், ஆன்மீக அமைப்பைப் போன்றே இருக்கின்ற பௌதீக அமைப்பில் இந்த வானவர்களை ஒப்புக் கொள்வதனால் இறைவனின் முழுமையான வல்லமையின் மீது எந்தவொரு கறையும் ஏற்பட முடியாதா என்ன? என்பதை எவராவது நமக்குப் புரியவைக்கட்டும். மாறாக, உண்மை என்னவென்றால், ஆரியர்கள் போன்ற நமது எதிரிகள் மாபெரும் குருட்டுத்தனத்தால் இப்படிப்பட்ட தேவையில்லாத ஆட்சேபணைகளை செய்திருக்கின்றனர். அவற்றின் அசல் அடிப்படை, ஷிர்க்கான





அடிக்குறிப்புகளுடன் அவர்களின் வீடுகளிலும் காணப்படுகிறது. அப்படியிருக்கும் போது அவர்கள் தமது அகப்பார்வையின்மையின் காரணத்தால், அநியாயமாக, ஓர் அருமையான உண்மையை அபத்தமானதாகக் கருதிக் கொண்டனர்! (பாரசீகக் கவிதை. அதன் பொருள்:)

ஒவ்வொரு நன்மையையும் தீயதாகக் காண்பிக்கின்ற தீய கண்ணே! இறைவன் உன்னை நாசமாக்குவானாக!!

**இஸ்லாமிய ஷரீஅத்தின்படி, சிறப்பான வானவர்களின் அந்தஸ்து, சிறப்பான மனிதரை விட அதிகமானதொன்றுமில்லை;** இன்னும் சொல்லப்போனால், சிறப்பான மக்கள், சிறப்பான வானவர்களைவிட சிறந்தவர்கள் ஆவர். மேலும் பௌதீக அமைப்பிலும், ஆன்மீக அமைப்பிலும் அந்த வானவர்கள் ஊடகங்களாக இருப்பது அவர்கள் சிறந்தவர்கள் என்பதைக் குறிப்பிடவில்லை. மாறாக, திருக்குர்ஆனின் வழிகாட்டலின்படி அவர்கள் தொண்டர்களைப் போன்று இந்தப் பணியில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்:

“சூரியனையும், சந்திரனையும் உங்கள் தொண்டிற்காகவே அவன் நியமித்துள்ளான்.” *(திருக்குர்ஆன் 14:34)*

உதாரணமாக, ஒரு தூதர் காலத்தின் அரசரிடமிருந்து அவரது ஏதாவதொரு மாநிலத்திற்கோ, அல்லது ஆளுநருக்கோ தூதை எட்ட வைக்கின்றார் என்பதால் அரசருக்கும் ஆளுநருக்கும் இடையில் ஊடகமாக இருக்கும் அந்தத் தூதர் ஆளுநரைவிட மேலானவர் என நிரூபணமாக முடியுமா? எனவே, பௌதீக அமைப்பிலும், ஆன்மீக அமைப்பிலும் ஆற்றல் மிக்க இறைவனின் எண்ணங்களை பூமி வரை எட்ட வைக்கின்ற, அவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கின்ற (வானவர்களாகிய) அந்த ஊடகங்களின் உதாரணமும் இதைப் போன்றது தான் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். வானங்களிலும், பூமியிலும் படைக்கப்பட்டவை அனைத்தும் மனிதனுக்காகவே ஆகும் என அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றான். அதாவது அவை மனிதனுடைய பயனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. மேலும் மனிதன் தனது அந்தஸ்தில் அனைத்தையும் விட மேலானவனும்

உயர்வானவனும் அனைத்தின் மூலமாக தொண்டு செய்யப்பட்டவனு மாவான். மேலும் அவனுக்கு தொண்டு செய்வதற்காகவே அனைத்தும் படைக்கபட்டுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்:

“எப்பொழுதும் சுற்றிக் கொண்டிருக்கின்ற சூரியனையும், சந்திரனையும் அவன் உங்கள் தொண்டிற்காக நியமித்துள்ளான். ’’ (14:34)

அதாவது, அவை தமது நிலைமைகளைப் பொருத்த வரையிலும் ஒரே நிலையில் இருப்பதில்லை. உதாரணமாக, வசந்தகாலத்து மாதங்களில் சூரியனுக்கு இருக்கும் சிறப்புத் தன்மை இலையுதிர்காலத்து மாதங்களில் ஒரு போதும் இருப்பதில்லை. எனவே இந்த வகையில் சூரியனும், சந்திரனும் எப்பொழுதும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் சுழற்சியால் சில நேரத்தில் வசந்த காலமும், வேறு சில நேரத்தில் இலையுதிர் காலமும் வருகின்றன. மேலும் சில நேரங்களில் சில குறிப்பிட்ட தன்மைகள் அவற்றின் மூலம் வெளிப்படுகின்றன. வேறு சில நேரங்களில் அவற்றிற்கு நேர்மாற்றமான தன்மைகள் வெளிப்படுகின்றன.

அடுத்து கூறுகின்றான்: ‘‘உங்களுக்காக இரவையும், பகலையும் தொண்டு செய்வதற்காக நியமித்தான். மேலும் ஒவ்வொரு பொருளிலிருந்தும் உங்கள் இயல்புகள் வேண்டிய எல்லாவற்றையும் அவன் உங்களுக்கு வழங்கினான்.” (14:34)

அதாவது, உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உங்களுக்கு வழங்கினான்.

“நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ண விருப்பினால் ஒருபோதும் உங்களால் கணக்கிட முடியாது. பூமியிலுள்ள அனைத்தையும் உங்கள் பயனுக்காகப் படைத்தவன் அந்த இறைவனே ஆவான்.’’ (14:34)

பிறகு இன்னொரு வசனத்தில் அல்லாஹ் இவ்வறு கூறுகின்றான்:

“நிச்சயமாக நாம் மனிதனை சிறந்த முறையில் படைத்துள்ளோம்.” (95:5)

அதாவது மனிதனை நாம் மிகவும் சமச்சீரான நிலையில்





படைத்துள்ளோம். மேலும் மனிதன் அந்த சமச்சீரான பண்புகளில் எல்லா படைப்பினங்களையும்விட அழகானவனும், மேலானவனுமாவான்.

பிறகு இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

இறையன்பு, இறைநேசம் மற்றும் சோதனை ஆகியவற்றிற்கு உட்பட்டு பிறகு முழுமையாக கட்டுப்படுதல் என்னும் நமது அமானிதத்தை வானம் மற்றும் எல்லா வானவர்கள் பூமியிலுள்ள எல்லா படைப்பினங்கள், மலை ஆகியவற்றின் முன் எடுத்து வைத்தோம். அவை வெளிப்படையில் மிகவும் உறுதிவாய்ந்தவையாக இருந்தன. எல்லா பொருள்களும் அந்த அமானிதத்தை தாங்கிக் கொள்ள மறுத்து விட்டன. அதன் மகத்துவத்தைக் கண்டு அஞ்சி விட்டன. ஆனால் மனிதன் அதனைத் தாங்கிக் கொண்டான். ஏனெனில் மனிதனிடம் இரண்டு பண்புகள் இருந்தன. ஒன்று, அவன் இறைவனின் வழியில் தனது ஆன்மாவின் மீது அநீதியிழைத்துக் கொள்ள முடியும் இரண்டாவது, அல்லாஹ் அல்லாதவற்றை முற்றிலும் மறந்து விடும் அளவுக்கு அல்லாஹ்வின் அன்பில் தன்னை மாய்த்துக் கொள்ளும் உயர்ந்த படித்தரத்தை அவனால் அடைய முடிந்திருந்தது.

*(திருக்குர்ஆன் 33:73 காண்க)*

பிறகு, இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறியிருக்கின்றான்:

அதாவது உமது இறைவன் (அவனுடைய முழுமையான தோற்றம் நீர் ஆவீர்) வானவர்களிடம், நான் மண்ணிலிருந்து ஒரு மனிதனைப் படைக்கவிருக்கிறேன் என்று கூறிய நேரத்தை நினைத்துப் பாருங்கள். எனவே நான் அவரை முழுமையான சமச்சீர் முறையில் படைக்கும் போது, என் ஆவியிலிருந்து அவரிடம் ஊதும் போது நீங்கள் அவருக்காக சஜதாவில் வீழ்ந்து விடுங்கள். அதாவது, முழுமையான பணிவுடன் அவருக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபட்டு விடுங்கள். நீங்கள் அவருக்கு சஜ்தா செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற அளவுக்கு தொண்டு செய்வதில் குனித்து விடுங்கள் எனக் கூறினான். எனவே எல்லா வானவர்களும் முழுமைபெற்ற மனிதனுக்கு முன் சஜ்தாவில் வீழ்ந்தனர். ஆனால் ஷய்த்தான் இந்த நற்பேற்றிலிருந்து இழப்பிற்குரியவனாகி விட்டான். *(திருக்குர்ஆன் 38:72-73 காண்க)*

சஜ்தாவிற்கான இந்த கட்டளை ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட நேரத்தைப் பற்றியது அல்ல; மாறாக, இந்த கட்டளை மலக்குகளுக்கு தனியாகக் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஒரு மனிதன் தனது மனிதத்துவத்தின் உண்மையான அந்தஸ்து வரை சென்றடைந்து விட்டால், மனிதனின் சீரான நிலை அவனுக்குக் கிடைத்து விட்டால், இறைவனின் ரூஹ் அவனிடம் குடிகொள்ளத் துவங்கி விட்டால், நீங்கள் அந்த முழுமையான மனிதருக்கு முன்னால் சஜ்தாவில் வீழ்ந்து விடுங்கள். அதாவது வானத்தின் ஒளிகளுடன் அவர் மீது இறங்குங்கள்; அவருக்காக அருள் பொழிய வேண்டுங்கள் என தனிப்பட்ட முறையில் வானவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

எனவே இது இறைவன், தான் தேர்ந்தெடுத்த அடியார்களுடன் எப்பொழுதும் நிலைநாட்டி வருகின்ற தொன்மையான சட்டத்தைச் சுட்டிக் காட்டுகிறது. ஒருவர் ஏதாவதொரு காலகட்டத்தில் ஆன்மீக சமச்சீரான தன்மையைப் பெற்றுவிடும்போது இறைவனின் ரூஹ் அவரிடம் குடிகொண்டு விடுகிறது. அதாவது அவர் தன் நஃப்ஸை முற்றிலும் மாய்த்துக் கொண்டவாறு அல்லாஹ்விடம் எஞ்சி நிலை பெற்றிருக்கும் தகுதியைப் பெற்றுவிடும் போது, ஒரு குறிப்பிட்ட வகையில், அவர் மீது வானவர்கள் இறங்க ஆரம்பித்து விடுகின்றனர்.

இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொள்வதன் ஆரம்ப நிலைகளிலும் வானவர்கள் அப்படிப்பட்டவருக்கு உதவி, தொண்டு செய்வதில் ஈடு பட்டிருக்கின்றனர் என்றபோதிலும், (வானவர்களின்) இந்த இறங்குதல், சஜ்தாவைப்போன்று முழுமையானதாகவும், நிறைவானதாகவும் இருக்கின்றது. மேலும் சஜ்தா என்ற சொல்லின் மூலமாக, இறைவன் வெளிப்படுத்தியிருப்பது என்னவென்றால், வானவர்கள் முழுமையான மனிதனை விட மேலானவர்கள் அல்ல; மாறாக, அரசனின் சேவகர்களைப் போன்று முழுமைபெற்ற மனிதனுக்கு முன்னால் கண்ணியமான சஜ்தாக்களை அவர்கள் நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாறே இறைவன் சூரத்துஷ் ஷம்ஸில் மிகவும் நுட்பமான சைகைகளிலும், உவமைகளிலும் முழுமையான மனிதனின்





அந்தஸ்தை வானம், பூமியிலுள்ள எல்லா படைப்பினங்களையும்விட உயர்வான தாகவும், மேன்மையானதாகவும் குறிப்பிட்டிருக் கின்றான். இறைவன் கூறுகிறான்:

‘‘சூரியனின் மீது ஆணையாக! அதன் ஒளியின் மீது ஆணையாக! சந்திரனின் மீது ஆணையாக! - அது சூரியனைப் பின்பற்றும் போது. பகலின் மீது ஆணையாக! - அது தன் ஒளியை வெளிப்படுத்தும் போது. முற்றிலும் இருளடைந்து விடுகின்ற இரவின் மீது ஆணையாக! பூமியின் மீது ஆணையாக! அதனை விரித்துள்ளவன் மீது ஆணையாக! மேலும் மனித ஆன்மாவின் மீது ஆணையாக! மேலும் அதற்கு சீரான, முழுமையான, நிலைபெறக் கூடிய அனைத்து ஒட்டு மொத்தமான மேன்மைகளை வழங்கிய (இறை) வனின் மீது ஆணையாக!’’

அவன் எந்தவொரு மேன்மையிலிருந்தும் (மனிதனை) விலக்கி வைக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் முந்தைய ஆணைகளில் (சத்தியங்களில்) எடுத்துக் கூறப்பட்ட எல்லா ஒட்டு மொத்தமான மேன்மைகளும் (மனித ஆன்மாவாகிய) இதில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன!

**இந்த வகையில் முழுமையான மனிதனின் ஆன்மா சூரியன் மற்றும் அதன் ஒளியின் மேன்மையை தன்னிடம் கொண்டுள்ளது.மேலும் சந்திரனின் சிறப்புத்தன்மைகளும் அதில் காணப்படுகின்றன.** இந்தவகையில் (மனித ஆன்மாவாகிய) அது பிறவற்றிலிருந்து பயனை சம்பாதிக்க முடியும். மேலும் ஓர் ஒளியிலிருந்து பயன் பெற்றவாறு தன்னிடத் திலும் ஒளியை எடுத்துக் கொள்ள முடியும்.

**மேலும் இதில் பகல்பொழுதின் சிறப்புத்தன்மைகளும் காணப்படுகின்றன.** உழைப்ப வர்கள், கூலிவேலை பார்ப்பவர்கள் பகல் வெளிச்சத்தில் தமது வியாபாரத்தை உரிய முறையில் நிறைவேற்ற முடிவதைப் போன்றே உண்மையைத் தேடுபவர்களும், இறைநெருக்கத்திற்கான வழிகளை மேற்கொள்பவர்களும் முழுமையான மனிதனின் முன்மாதிரியைப் பின்பற்றி மிக எளிதாகவும், தெளிவாகவும் தமது மார்க்கத் திறனாய்வுப் பணிகளை நிறைவேற்றுகின்றனர். எனவே அவர் பகலைப் போன்று முழுமையான

தெளிவுடன் தம்மை வெளிப்படுத்த முடியும். மேலும் அவர் பகலைப்போன்று எல்லா சிறப்புத்தன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளார்.*

**முழுமையான மனிதனுக்கு இருண்ட இரவுடனும் ஓர் ஒப்புமை உள்ளது.** அல்லாஹ்விடமிருந்து அவருக்கு, பௌதீகத்திலிருந்து விலகியிருத்தலும் இறைவனிடம் தன்னை முழுமையாக பணிவுடன் ஒப்படைத்திருத்தலும் மிக உன்னதமான படித்தரத்தில் கிடைத்திருந்த போதிலும் இறைவனின் ஞானம் மற்றும் பொருத்தத்திற்கேற்ப தனது மனதின் இருண்ட ஆடைகளின் பக்கமும் அவ்வப்போது திரும்பி விடுகின்றான். அதாவது ஆன்மாவிற்கான என்னென்ன உரிமைகள் மனிதனின் மீது வைக்கப்பட்டுள்ளனவோ அவை வெளிப்படையில் ஒளிக்கு எதிரானவையாகவும், ஒளியுடன் மோதக் கூடியவையாகவும்

*அடிக்குறிப்பு : சூரியன், இறைவனின் முழுமையான ஞானத்தின் படி, 730 நியமனங்களில் தன்னை வடிவமைத்து உலகில் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. மேலும் ஒவ்வொரு வடிவமைப்பின் காரணமாக ஒரு குறிப்பிட்ட பெயர் அதற்கு உண்டு. திங்கள், செவ்வாய், புதன் ஆகியவை தத்தமது நியமனங்கள், அம்சங்கள், தாக்கங்கள் ஆகியவற்றைப் பொருத்தவரையிலான சூரியனின் பெயர்களேயாகும். பேசும் போது இந்த சிறப்பு அம்சங்கள் மனதில் கொள்ளப்படாவிட்டால், வெறும் சாதாரண நிலையில் பெயர் கூறப்பட்டால் அப்போது அதனை சூரியன் என்று கூறுவோம். ஆனால் இதே சூரியனை குறிப்பிட்ட அம்சங்களையும், தாக்கங்களையும் மனதில் வைத்துப் பேசும் போது (சூரியனாகிய) அதை சில நேரத்தில் பகல் என்றும், சில நேரத்தில் இரவு என்றும், இன்னும் சில நேரத்தில் ஞாயிறு, திங்கள் என்றும், வேறு சில நேரத்தில் ஜூலை என்றும், ஆகஸ்டு என்றும், செப்டம்பர் என்றும் குறிப்பிடுவோம்.

சுருக்கமாக, இவையெல்லாம் சூரியனுக்கான பெயர்களேயாகும். மனித ஆன்மாவும் பல்வேறு நியமனங்கள், பல்வேறு நேரங்கள், இடங்கள், நிலைமைகளின் அடிப்படையில் பல்வேறு பெயர்களால் கூறப்படுகின்றது. சில நேரத்தில் (மனித ஆன்மாவாகிய) அது பரிசுத்த ஆன்மா என்றும் (18:75), சில நேரத்தில் அம்மாரா (தீமையை தூண்டும்) ஆன்மா என்றும் (12:54), சிலநேரத்தில் லவ்வாமா (கடிந்து கொள்ளும்) ஆன்மா என்றும் (75:3), சில நேரத்தில் முத்மயின்னா (சாந்தியடைந்த) ஆன்மா என்றும் (89:28) அழைக்கப்படுகின்றது. சுருக்கமாக மனித ஆன்மாவுக்கும் சூரியனுக்கு இருக்கின்ற அத்தனை பெயர்களும் உண்டு. ஆயினும் நீண்டு விடுமோ என்ற அச்சத்தினால் இவ்வளவு எடுத்துக் கூறுவதே போதுமானதாகக் கருதப்படுகிறது.

- நூலாசிரியர்.





தெரிகின்றன. உதாரணமாக, உண்ணல், குடித்தல், உறங்குதல், மனைவியின் உரிமைகளை நிறைவேற்றுதல், அல்லது பிள்ளைகளின் பக்கம் கவனம் செலுத்துதல் ஆகிய இந்த எல்லா உரிமைகளையும் அவர் நிறைவேற்றுகிறார். மேலும் அவர் கொஞ்ச நேரத்திற்காக அந்த இருளை தனக்காக விரும்பிக் கொள்கிறாரே தவிர உண்மையிலேயே அவருக்கு இருளின் பக்கம் கவனம் இருக்கிறது என்ற காரணத்தினால் அன்று. இன்னும் சொல்லப் போனால் எல்லாம் அறிந்த, ஞானம்மிக்க இறைவன் அவருக்கு அதன் பக்கம் கவனமூட்டுகின்றான் என்ற காரணத்தினால் ஆகும். அவர் ஆன்மீகக் களைப்பிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் ஓரளவுக்கு ஓய்வு பெற்று மீண்டும் அந்த கடினமான முயற்சிகளைத் தாங்கிக் கொள்ள ஆயத்தமாவதற்காகவே அவ்வாறு செய்கின்றார். அது ஒரு கவிஞரின் பின் வரும் கவிதைப் போன்றதாகும்:

“வேட்டையில் திறமைசாலியான இளவரசரின் கண் மூடியிருந்தாலும் அது கணிசமான அளவுக்கு பார்வைத் திறன் கொண்டதாகவே இருக்கும்.”

எனவே அதே போன்று இந்த முழுமையான மக்கள் மிகவும் அதிகமான மனக் கஷ்டமும், துக்கமும், துயரமும், கவலையும் மேலோங்கி நிற்கும் போது ஓரளவுக்கு மன இன்பங்களிலிருந்து பயன் அடைந்து விடும்போது சக்தியற்ற உடல் மீண்டும் அவர்களின் ஆன்மாவின் நட்புறவிற்காக புத்தம் புதிதாக ஆற்றலும் வலிமையும் கொண்டதாக மாறிவிடுகின்றது. மேலும் கொஞ்சமான இந்த மாறுபாட்டின் காரணமாக ஒளியின் மாபெரும் படித்தரங்களை அவர் கடந்து சென்றுவிடுகின்றார்.**அது மட்டுமல்லாமல் மனித ஆன்மாவில் இன்னும் பிற நுட்பமான சிறப்பம்சங்களும் காணப்படுகின்றன.** அவற்றை வானியல், நட்சத்திரவியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இயற்கை விஞ்ஞானிகளின் நுட்பமான பார்வை கண்டுபிடித்துள்ளது.

**அவ்வாறே முழுமையான மனிதனின் ஆன்மாவுக்கு வானத்துடனும் ஓர் ஒப்புமை உள்ளது.** உதாரணமாக, பரந்த வான்வெளி எந்தவொரு பொருளினாலும் நிறைவடைய முடியாத அளவுக்கு மிகப் பரந்த தாகவும், விரிந்ததாகவும் இருப்பதைப் போன்றே இந்த சான்றோர்களின் ஆன்மாவும் மிகப் பரந்த நிலைகளை தம்மிடம் கொண்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான இறை ஞானங்களையும்

உண்மைகளையும் அது பெற்றுக் கொண்ட போதிலும் மீண்டும் மாஅரஃப்னாக (நாங்கள் உன்னைப் பற்றிய ஞானத்தைப் புரிந்து கொள்ளவில்லை) என்று முழக்கமிட்டுக் கொண்டேயிருக்கின்றது. மேலும் வானத்தின் பரந்த வெளி ஒளிமிக்க விண்மீன்களினால் நிரம்பியிருப்பதைப் போன்றே(மனித ஆன்மாவாகிய) அதிலும் ஒளிமிக்க ஆற்றல்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை வானத்தின் நட்சத்திரங்களைப் போன்று ஒளிமயமாகத் தென்படுகின்றன.

**அவ்வாறே முழுமையான மனிதனுக்கு பூமியுடனும் முழுமையான ஒப்புமை உள்ளது.** அதாவது அருமையான, முதல்தரமான நிலம் கொண்டிருக்கும் சிறப்புத்தன்மை என்னவென்றால், அதில் விதை தூவப்பட்டுப் பின்னர் நன்றாக உழுது நீர்ப்பாய்ச்சினால், விவசாயத்திற்கான எல்லா வகையான உழைப்பும் அதில் நிறைவேற்றப்பட்டால் அந்த நிலம் மற்ற நிலங்களைவிட ஆயிரக்கணக்கான மடங்கு அதிக கனிகளைத் தருகின்றது. மேலும் அதன் கனிகள் மற்ற கனிகளை விட மிகவும் அருமையாகவும், இனிப்பாகவும், சுவையாகவும், தனது எண்ணிக்கையிலும், தரத்திலும் மிகவும் அதிகமானதாகவும் இருக்கின்றது. முழுமையான மனிதனின் ஆன்மாவின் நிலையும் இதைப் போன்றதேயாகும்.அது இறைகட்டளைகள் எனும் விதை தூவப்படுவதால் அற்புதமான பச்சைப் பசுமையை வெளிப்படுத்தி அவருடைய நற்செயல்கள் எனும் செடிகள் வெளிவருகின்றன. மேலும் அதன் கனிகள் எவ்வளவு அருமையானவையாகவும், உயர்தரமானவையாகவும், சுவை மிக்கவையாகவும் இருக்கின்றன வென்றால், அவற்றைப் பார்க்கின்ற ஒவ்வொருவருக்கும் இறைவனின் தூய வல்லமை நினைவில் தோன்றி சுப்ஹானல்லாஹ், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன் - ஆஹா என்ன அருமை!) என்று கூற வேண்டியது ஏற்படுகிறது.

எனவே வநஃப்ஸின்வ் வமா சவ்வாஹா (மனித ஆன்மாவையும், அது குறைவின்றி முழுமையாகப்பட்டிருப்பதையும் நான் சான்றாகக் காட்டுகின்றேன் 91:8) என்ற இந்த வசனம், மிகத் தெளிவாகத் தெரிவிப்பது என்னவென்றால், **முழுமையான மனிதன் தனது தாத்பரியத்தின் அடிப்படையிலும், தரத்தின் அடிப்படையிலும் ஓர் உலகம் ஆவான்.** மேலும் அல்லாஹ் சூரியனின் பண்புகளிலிருந்து துவங்கி நாம் வாழும் இடமான பூமி வரையுள்ள எல்லா பொருள்களின்





தன்மைகளையும் சைகையாகக் குறிப்பிட்டிருப்பதை போன்று, அதாவது அவற்றின் மீது சத்தியமிட்டுக் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, மனிதன், உலகத்தின் எல்லா பண்புகளையும், தன்மைகளையும் ஒட்டு மொத்தமாக தன்னிடத்தில் கொண்டிருக்கின்றான். அதற்குப் பிறகு முழுமையான மனிதனின் ஆன்மாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். எந்த பொருள்களின் மீது சத்தியமிட்டு முன்னர் கூறப்பட்டுள்ளனவோ அவற்றில் தனித்தனியாக காணப்படுகின்ற பல்வேறு வகையான அனைத்து சிறப்புகளின் ஒட்டுமொத்தமான தொகுப்புதான் முழுமையான மனிதனின் ஆன்மா என்பது தெரிய வேண்டும் என்பதற்காக அவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

**இறைவன், தான் படைத்துள்ள பொருள்களை – அவை இறைவனுக்கு முன்னால் அடிப்படையற்றவையாகவும், ஒன்றுமற்றவையாகவும் இருக்கும்போது அவற்றின் மீது ஏன் சத்தியம் செய்தான் எனக் கேட்கப்பட்டால், அதற்குரிய பதில்,** சில நுணுக்கமான விஷயங்களை நிரூபிப்பதற்காகவும், உண்மைப்படுத்து வதற்காகவும், தன் சிறப்புத்தன்மையில் பொதுவாக பகிரங்கமாகவும், தெளிவாகவும், சாட்சியங்களைக் கொண்டதாகவும் உள்ள விஷயங்களை சான்றாக எடுத்து வைப்பது திருக்குர்ஆன் முழுவதிலும் காணப்படும் ஒரு பொதுவான இறைபழக்கமும் இறைநடைமுறையுமாகும். உதாரணமாக, சூரியன் இருக்கின்றது; அதற்கு வெப்பமும் இருக்கின்றது என்பதிலும், சந்திரன் இருக்கின்றது; அது சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுக் கொள்கிறது என்பதிலும் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. மேலும் பகல் வெளிச்சமும் அனைவருக்கும் தென்படுகிறது. இரவும் அனைவருக்கும் தெரிகின்றது. வானத்தின் வளிமண்டலமும் எல்லாரின் பார்வைக்கு முன்னால்தான் இருக்கிறது. பூமியோ மனிதர்களின் தங்குமிடமாக இருக்கின்றது. இப்போது இந்த எல்லா பொருள்களும் தத்தமது மிகத் தெளிவான இருப்பையும், மிகத் தெளிவான சிறப்புத்தன்மைகளையும் கொண்டுள்ளன. இவற்றில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

மேலும் மனிதனுடைய ஆன்மா எத்தகைய மறைவானதும், (தான் இருப்பதிலும் எத்தகைய) நுணுக்கமானதும் என்றால், அதன் இருப்பிலேயே நூற்றுக்கணக்கான வாக்குவாதங்கள்

செய்யப்படுகின்றன. நஃப்ஸ் அதாவது மனித ஆன்மாவும் நிரந்தரமான, நிலைபெற்றிருக்கும் ஒன்று; அது உடலை விட்டுப் பிரிந்த பிறகு நிரந்தரமாக நிலைபெற்றிருக்க முடியும் என்பதையே ஏற்றுக் கொள்ளாத பல பிரிவினர்கள் இருக்கின்றனர்.

மேலும் ஆன்மாவின் உள்ளமை (இருப்பு) மற்றும் அதன் நிலைபெற்றிருத்தல், உறுதித்தன்மையை ஒப்புக் கொண்ட சிலரும் கூட அதன் உட்புறமான ஆற்றல்களுக்கு மதிப்பளித்திருக்க வேண்டிய அளவுக்கு மதிப்பளிப்பதில்லை. மாறாக, சிலர், நாம் விலங்குகளைப் போன்று உண்ணல், குடித்தல் மற்றும் மனதின் இன்பங்களில் வாழ்க்கையை கழிப்பதற்காக மட்டுமே உலகத்தில் வந்துள்ளோம் என்ற அளவுக்கு மட்டுமே புரிந்து வைத்திருக்கின்றனர். மனிதனுடைய ஆன்மா எந்த அளவுக்கு உயர்தரமான ஆற்றல்களையும், வல்லமைகளையும் தன்னிடத்தில் கொண்டுள்ளது என்பதையும், அ(ந்த ஆன்மாவான)து மேன்மைகளை ஈட்டிக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்தினால், அது எந்த அளவுக்கு கொஞ்ச காலத்திலேயே முழு உலகத்தின் பலவிதமான மேன்மைகளையும், சிறப்புகளையும் ஒரு வளையம் போன்று சூழ்ந்து கொள்ள முடியும் என்பதையும் அவர்கள் அறிவதில்லை.

எனவே அல்லாஹ் அருளுக்குரிய இந்த (91-வது) சூராவில் மனித ஆன்மாவிற்கும், பின்னர் அதன் அளவற்ற சிறப்புத்தன்மை களுக்கும் சான்று தர விரும்பினான். எனவே அவன் முதலில் சிந்தைனைகளை திருப்புவதற்காக சூரியன், சந்திரன் ஆகியவற்றின் பல்வேறு விதமான சிறப்புத்தன்மைகளை எடுத்துரைத்துப் பின்னர் மனிதனுடைய ஆன்மாவின் பக்கம் சுட்டிக்காட்டி, அது இந்த அனைத்து வகையான மேன்மைகளையும் ஒருங்கே கொண்டதாகும் எனக் குறிப்பிட்டிருக்கின்றான். மேலும் விண்வெளியிலும், புவி உலகிலும் பல்வேறு வகையில் காணப்படும் உயர்தரமான மேன்மைகளும் சிறப்புத்தன்மைகளும் மனித ஆன்மாவிலும் காணப்படும் நிலையில், அத்தகைய மகத்தான, பல்வேறு வகையான சிறப்புத்தன்மைகளை ஒருங்கே கொண்டிருக்கின்ற அந்த ஆன்மாவைப் பற்றி மரணத்திற்குப் பிறகு எஞ்சியிருக்கக் கூடிய அளவிற்கு அது ஒன்றுமே அல்ல என நினைப்பது மிகப் பெரிய அறிவீனமாகும் எனக் கூறியிருக்கிறான். அதாவது இந்த கண்டறியப்பட்டுள்ள,





உணரப்பட்டுள்ள பொருள்களில் உள்ள இந்த எல்லா சிறப்புத்தன்மைகளையும், நிரந்தமானவையாக ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லாத போது - எதுவரையென்றால், ஒரு குருடர் கூட வெயிலை உணர்ந்து சூரியனின் உள்ளமையை உறுதி கொள்கின்றார் - அப்படியிருக்கும் போது மனித ஆன்மாவில் அனைத்தும் ஒட்டு மொத்தமாக காணப்படும்போது ஆன்மா நிரந்தரமானதும் அதன் தன்மையில் நிலைபெறக் கூடியதும் ஆகும் என்பதில் உங்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? எந்த பொருள் தன் தன்மையில் ஒன்றுமற்றதாக இருக்கின்றதோ அது, தன் தன்மையில் உள்ள எல்லா பொருள்களின் சிறப்புகளையும் ஒருங்கே கொண்டிருப்பது சாத்தியமா என்ன?

மேலும் இந்த இடத்தில் ஆணையிட்டுக் கூறும் வழிமுறையை அல்லாஹ் விரும்பியிருப்பதற்குக் காரணம் **ஆணையிட்டுக் கூறுவது சாட்சிக்குப் பகரமாக விளங்குகிறது.** இதன் காரணமாகவே, உலக ஆட்சியாளர்கள் கூட பிற சாட்சியங்கள் இல்லாத போது, ஆணையிட்டுக் கூறுவதை நம்பி விடுகின்றனர். மேலும் குறைந்தது இரண்டு சாட்சிகளினால் பெறும் பயனை ஒரு முறை ஒருவர் ஆணையிட்டுக் கூறுவதிலிருந்து பெற்று விடுகின்றனர். எனவே ஆணையிட்டுக் கூறுதல் என்பது அறிவுப் பூர்வமாகவும், பழக்கத்தின் அடிப்படையிலும். சட்டப் பூர்வமாகவும், மார்க்கச் சட்டப் பூர்வமாகவும் சாட்சிக்குப் பகரமாகக் கருதப்படுகின்றது. எனவே இந்த அடிப்படையிலேயே இறைவன் இந்த இடத்தில் ஆணையிட்டுக் கூறுவதை சாட்சி என்ற முறையில் குறிப்பிட்டுள்ளான்.

எனவே, சூரியன் மீதும், அதன் ஒளியின் மீதும் ஆணையாக (91:2) என இறைவன் கூறுவதன் கருப்பொருள் என்னவென்றால், சூரியன் அதன் ஒளி ஆகிய இவ்விரண்டும் மனிதனின் ஆன்மா தன் தன்மையில் சுயமாக இருக்கின்றது என்பதற்கும், தன் தன்மையில் சுயமாக நிலைபெற்றிருக்கிறது என்பதற்கும் சாட்சியாக விளங்குகின்றன. ஏனெனில் **வெப்பம், ஒளி ஆகிய என்னென்ன சிறப்புத் தன்மைகள் சூரியனிடம் இருக்கின்றனவோ அதே சிறப்புத் தன்மைகள் சில அதிகப்படியாக மனிதனின் ஆன்மாவிலும் காணப்படுகின்றன.** முழுமையான ஆன்மாக்களிடம் காணப்படுகின்ற ஆன்மீகக் காட்சிகள் எனும் ஒளி மற்றும் கவனம் எனும் வெப்பம் ஆகிய

வற்றின் அற்புதங்கள் சூரிய வெப்பம் மற்றும் அதன் ஒளியைவிட எவ்வளவோ மடங்கு அதிகமானவையாகும். எனவே சூரியன் அதன் தன்மையில் சுயமாக இருக்கின்றபோது, சிறப்புத் தன்மைகளில் அதற்கு நிகராகவும், அதிகமாகவும் இருக்கின்ற ஒன்று அதாவது மனிதனின் ஆன்மா தன் தன்மையில் ஏன் சுயமாக இருக்க முடியாது?

அவ்வாறே சந்திரன் மீது ஆணையாக! -அது சூரியனைப் பின்பற்றும் போது (91:2) என்பதன் கருப் பொருள் என்னவென்றால், சூரியனிடமிருந்து பயன் அடைந்தவாறு ஒளியைப் பெறும் சிறப்புத்தன்மை கொண்ட சந்திரன் மனிதனின் ஆன்மா தன் தன்மையில் சுயமாக இருக்கின்றது என்பதற்கும், தன்மையில் சுயமாக நிலைபெற்றிருக்கின்றது என்பதற்கும் சாட்சியாக விளங்குகின்றது. ஏனெனில் சந்திரன், சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுக் கொள்வதைப் போன்று உழைக்கின்ற, உண்மையைத் தேடுகின்ற மனித ஆன்மாவும் மற்ற முழுமையான மனிதனை ஒருவரையொருவர் பின்பற்றி அவருடைய ஒளியிலிருந்து ஒளியைப் பெறுகின்றது. மேலும் அவருடைய உட்புறமான அருளிலிருந்து அருளைப் பெறுகின்றது. இன்னும் சொல்லப்போனால் சந்திரனைவிட அதிகமாக அவர் ஒளியிலிருந்து பயன் அடைகின்றார். ஏனெனில் சந்திரனாவது ஒளியைப் பெற்று பின்னர் விட்டும் விடுகிறது. ஆனால் இவர் ஒருபோதும் விடுவதில்லை.

எனவே, ஒளியிலிருந்து பயன் பெறுவதில் (மனித ஆன்மாவாகிய) இது சந்திரனுடன் அதிக ஒப்புமையுடையதாக இருக்கும் போதும் சந்திரனின் மற்றெல்லா பண்புகளும், சிறப்புத்தன்மைகளும் தன்னிடம் கொண்டிருக்கும் போதும் சந்திரனை தன் தன்மையில் சுயமாக இருக்கின்றது எனவும், தன் தன்மையில் சுயமாக நிலைபெற்றுள்ளது எனவும் ஒப்புக் கொண்டு விட்டு மனித ஆன்மா நிரந்தரமாக இருக்கின்றது என்பதை முற்றிலும் மறுப்பதற்கு என்ன காரணம்?

சுருக்கமாக, இறைவன், முன்னர் ஆணையிட்டுக் கூறப்பட்டுள்ள அனைத்தையும் (அதாவது சூரியனையும், அதன் வெப்பத்தையும், சந்திரனையும் அதன் ஒளியையும், பகலையும், அதன் வெளிச்சத்தையும், இரவையும், அதன் இருட்டையும் [91:2-5]) தனது





தனிப் பண்புகளின் அடிப்படையில் மனித ஆன்மாவுக்கு சாட்சியாகவும், பேசும் சாட்சியமாகவும் குறிப்பிட்டு, மனிதனின் ஆன்மா என்பது உண்மையிலேயே காணப்படுகின்றது என்பதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றான். இவ்வாறே, திருக்குர்ஆனில் இறைவன் சில பொருள்களின் மீது ஆணையிட்டுக் கூறியிருக்கின்றானே அந்த எல்லா இடங்களிலும் அந்த ஆணைகளின் குறிக்கோள், நோக்கமெல்லாம் பகிரங்கமான விஷயத்தை அவற்றிற்கு ஒத்தவையாக விளங்கும் மறைமுகமான இரகசியங்களுக்கு சாட்சியங்களாக எடுத்துரைக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் இங்கு மனிதனின் ஆன்மா தன் தன்மையில் சுயமாக இருக்கின்றது என்பதற்கு ஆணையிட்டுக் கூறும் வகையில் சாட்சியங்கள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. **அந்த சாட்சியங்களின் சிறப்புத் தன்மைகள் பகிரங்காமான முறையில் மனிதன் ஆன்மாவில் எங்கு காணப்படுகின்றன? அடுத்து, காணப்படுகின்றன என்பதற்கு என்ன சான்று? என்ற கேள்வி எழலாம்.** இந்த சந்தேகத்தை நீக்குவதற்காக அல்லாஹ் இதற்குப் பிறகு இவ்வாறு கூறுகின்றான்:

"(அல்லாஹ்வாகிய) அவன் (ஆன்மாவாகிய) அதற்கு எது தவறானது என்பதையும், எது சரியானது என்பதையும் தெளிவாக தெரிவித்து விட்டான். எனவே (ஆன்மாவாகிய) அதனைத் தூய்மைப்படுத்துபவன் நிச்சயமாக வெற்றி பெறுகின்றான். அதனை (பாவத்தில்) அமுக்கிவிடுபவன் முற்றிலும் அழிந்து விடுகின்றான்." (91:9-11)

அதாவது இறைவன் மனிதனின் ஆன்மாவைப் படைத்து இருள், ஒளி மற்றும் வறட்சி, செழிப்பு ஆகிய இரண்டு பாதைகளையும் அதற்காகத் திறந்து விட்டான். எவர் இருள் மற்றும் பாவத்தின் - அதாவது தீமையின் வழிகளை மேற்கொள்வாரோ அவர் அந்த வழிகளில் முன்னேற்றத்தின் முழுமையான நிலை வரை எட்ட வைக்கப்படுகின்றார். எதுவரை என்றால், அவருக்கு இருண்ட இரவுடன் நெருக்கமான ஒப்புமை ஏற்பட்டு விடுகின்றது. பாவம், தீமை மற்றும் கெட்ட சிந்தனைகளைத் தவிர வேறெதிலும் அவருக்கு இன்பம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட தீய நட்பே அவருக்கு இனிமையாகத் தெரிகின்றது. மேலும் அப்படிப்பட்ட ஈடுபாடுகளே அவருடைய

உள்ளத்தை மகிழ்ச்சியடையச் செய்கின்றன. மேலும் அவருடைய தீய இயல்புக்கு ஏற்றவகையிலான தீயவற்றிற்கான உணர்வுகள் அவருக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதாவது எந்த நேரமும் துர்நடத்தையான, ஒழுக்கக்கேடான சிந்தனைகளே அவருக்கு தோன்றுகின்றன. நல்ல சிந்தனைகள் அவருடைய உள்ளத்தில் ஒருபோதும் தோன்றுவதேயில்லை.

இதற்கு நேர்மாறாக, ஒருவர் பரிசுத்தத்தின் ஒளிமயமான வழியை மேற்கொள்வார் என்றால், அந்த ஒளிக்கு உதவி செய்யக் கூடிய இறையறிவிப்புகள் அவருக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதாவது, விதையைப் போன்று அவருடைய உள்ளத்தில் இருக்கின்ற ஒளியை இறைவன் தனது சிறப்பான இல்ஹாம்களின் (இறையறிவிப்புகளின்) மூலமாக முழுமை வரை சென்றடைய வைத்து விடுகின்றான். மேலும் மனிதனுடைய ஒளிமிக்க ஆன்மீகக் காட்சிகள் எனும் நெருப்பை கொளுந்து விட்டு எரியச் செய்கின்றான். அப்போது மனிதன் தனது பிரகாசமான ஒளியைக் கண்டு, பயனைப் பெறுகின்ற, பயனை வழங்குகின்ற தனது சிறப்புத் தன்மையை சோதித்துப் பார்த்து, சூரிய சந்திரனின் ஒளி தன்னிடமும் காணப்படுகின்றது என்பதை முழு உறுதியாகப் புரிந்து கொள்கின்றான்.

மேலும் வானம் பரந்ததாகவும், உயர்ந்ததாகவும், விண்மீன்கள் நிறைந்தவையாகவும் இருப்பதைப் போன்று எனது நெஞ்சிலும் மன மகிழ்ச்சியும், உயர்ந்த தைரியமும் இருக்கின்றது எனவும், ஒளிமயமான ஆற்றல்களின் ஒட்டு மொத்தமான கூட்டு, மனதிலும் மூளையிலும் காணப்படுகிறது எனவும், அவை விண்மீன்களைப் போன்று ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன எனவும் மனிதன் உறுதியாக புரிந்து கொள்கின்றான். அப்போது இவ்விஷயத்தைப் புரிந்து கொள்வதற்கு எந்த வெளிப்படையான சான்றும் அவருக்குத் தேவையில்லை. மாறாக, அவருக்குள்ளிருந்தே ஒரு முழுமையான சான்றுக்கான நீரூற்று எந்நேரமும் பீரிட்டெழுந்து, அவருடைய தாகமுள்ள உள்ளத்தை செழிப்பாக்கிக் கொண்டிருக்கின்றது.

உண்மையைத் தேடும் வகையில், **மனிதனின் இந்தச் சிறப்புத் தன்மைகளை எப்படிக் கொண்டு கொள்ள முடியும்** என்ற கேள்வி எழுமானால், அதற்கு விடையாக அல்லாஹ், கத் அஃப்லஹ மன்





ஸக்காஹா. வகத் ஃகாப மன் தஸ்ஸாஹா (எனவே அ(ந்)த (ஆன்மாவி) னைத் தூய்மைப்படுத்தியவன் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டான்; அதனை (பாவத்தில்) அமுக்கி விடுபவன் முற்றிலும் அழிந்து விட்டான் 91:10-11) என்று கூறுகிறான்.

அதாவது, எவர் தன் ஆன்மாவை தூய்மைப்படுத்தினாரோ கீழ்த்தரமான, தீய ஒழுக்கங்களிலிருந்து முற்றிலும் விலகியவாறு இறை கட்டளைகளின் கீழ் தன்னை மாய்த்துக் கொண்டாரோ அவர் அந்த நோக்கத்தைப் பெறுவார். மேலும் அவருடைய ஆன்மா சிறிய உலகத்தைப் போன்று பல்வேறு வகைப்பட்ட மேன்மைகளின் தொகுப்பாக அவருக்குத் தென்படும். ஆனால் எவர் தன் ஆன்மாவை தூய்மைப் படுத்தவில்லையோ, இன்னும் கூறப்போனால், தேவையற்ற மன இச்சைகளுக்குள் அதை புதைத்து விட்டாரோ அவர் இந்தக் குறிக்கோளைப் பெறுவதிலிருந்தும் தோல்வி காண்பார்.

இந்த சொற்பொழிவின் சுருக்கம் என்னவெனில், மனித ஆன்மாவில், முழு உலகத்திலும் காணப்படுகின்ற எல்லா விதமான மேன்மைகளும் சந்தேகமின்றி காணப்படுகின்றன. மேலும் இறை சட்டத்தின் நாட்டத்திற்கேற்ப, மனிதன் ஆன்மாவை தூய்மையாக்குவதன் பக்கம் கவனம் செலுத்துவதுதான் அந்த மேன்மைகளின் மீது உறுதி நம்பிக்கை கொள்வதற்கான நேரான ஒரே வழியாகும். ஏனெனில் ஆன்மாவை தூய்மையாக்கும் நிலையில் மறைமுகமான அந்த மேன்மைகளைப் பற்றிய உண்மை, இல்முல் யகீன் (உறுதியான ஞானம்) என்ற அளவில் மட்டுமல்லாமல், ஹக்குல்யகீன் (அநுபவ ஞானம்) என்ற அளவில் வெளிப்பட்டுவிடும்.

பின்னர், இதற்குப் பிறகு அல்லாஹ் சமூது சமுதாயத்தை ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டு, அவர்கள் தமது இயல்பிலேயே காணப்பட்ட வரம்பு மீறும் பண்பின் காரணத்தால் தமது காலத்தின் நபியைப் பொய்ப்படுத்தினர் எனக் கூறுகின்றான். மேலும் அவரைப் பொய்ப்படுத்துவதற்காக அவர்களிலிருந்தே பெரும் பாக்கியங்கெட்ட ஒருவன் முன் வந்தான். அந்தக் காலத்தின் ரஸூல் (இறைதூதர்) அவர்களுக்கு அறிவுரையாக, இது அல்லாஹ்வின் ஒட்டகமாகும். நீர் அருந்தும் இடத்திலிருந்து இதை நீங்கள் தடுக்காதீர்கள் எனக் கூறினார். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் ஒட்டகத்தின் கால்களை வெட்டினர். எனவே, இந்தக் குற்றத்தின் தண்டனையாக

அல்லாஹ் அவர்களின் மீது அழிவை ஏற்படுத்தினான். மேலும் அவர்களை மண்ணோடு மண்ணாக்கினான். அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அவர்களின் விதவைப் பெண்கள், அநாதை சந்ததிகள் மற்றும் ஆதரவற்ற குடும்பங்களின் நிலை என்னவாகும் என்பதைப் பற்றி இறைவன் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

இந்த இடத்தில் இறைவன், **மனிதனின் ஆன்மாவை அல்லாஹ் ஒட்டகத்துடன் ஒப்புமைப்படுத்துவதற்காகக் குறிப்பிட்டிருப்பது மிகவும் நுட்பமான ஓர் உதாரணமாகும்.** இதன் கருத்து என்ன வென்றால், மனிதனின் ஆன்மாவும் அல்லாஹ்வின் ஒட்டகமாக பயன்பட வேண்டும். உண்மையில் அது இந்த நோக்கத்திற்காகத்தான் படைக்கப்பட்டுள்ளது. அந்த ஆன்மா அல்லாஹ்விடம் தன்னை மாய்த்துக் கொள்ளும் நிலையில் ஒருவர் ஒட்டகத்தின் மீது சவாரி செய்வது போன்று இறைவன் தன் தூய தோற்றத்துடன் அதன் மீது சவாரி செய்ய வேண்டும்.

எனவே உண்மையை விட்டும் முகந்திருப்புகின்ற ஆன்மாவை வணங்கும் மக்களுக்கு அச்சுறுத்தியவாறும், எச்சரித்தவாறும் அல்லாஹ் கூறுவதாவது, நீங்களும் சமூது சமுதாயத்தைப் போன்று அல்லாஹ்வின் பெண் ஒட்டகம் நீர் அருந்தும் இடத்தை - இறைவனைப் பற்றிய நினைவு மற்றும் இறைவனைப் பற்றிய ஞானங்கள் எனும் நீரூற்றை - **எதில் இறைவனின் ஒட்டகம் எனும் ஆன்மாவின் வாழ்வு நிலைத்திருக்கிறதோ – அதை நீங்கள் தடுக்கின்றீர்கள்.** தடுப்பது மட்டுமல்லாமல், இறைவனின் வழிகளில் அது செல்ல முடியாமற் போய்விடும் வகையில் அதன் கால்களை முறிக்கும் சிந்தனையில் இருக்கின்றீர்கள். எனவே நீங்கள் உங்களுக்கு நன்மையை வேண்டுகின்றீர்கள் என்றால், வாழ்விற்கான நீரை விட்டும் அ(ந்)த (ஆன்மாவி)னை தடை செய்யாதீர்கள். மேலும் உங்களின் பொருத்தமற்ற இச்சைகள் தாக்குதலினால் அதன் கால்களை முறிக்காதீர்கள். நீங்கள் அப்படிச் செய்தால் - இறைவன் வரை சென்றடைவதற்காக வாகனமாக உங்களுக்கு வழங்கப்பட்ட அந்த ஒட்டகம் காயமடைந்து மரணித்து விட்டால் நீங்கள் முற்றிலும் ஒன்றுமற்றவர்களாக, காய்ந்த விறகைப் போன்று கருதப்பட்டு வெட்டப்பட்டு விடுவீர்கள்; பிறகு நெருப்பில் போடப்படுவீர்கள். மேலும் உங்களின் மரணத்திற்குப் பிறகு இறைவன் உங்களின்





உறவினர்கள் மீது ஒருபோதும் கருணை காட்ட மாட்டான். இன்னும் சொல்லப் போனால், உங்களின் பாவம் மற்றும் தீமையின் தீய விளைவு அவர்களுக்கு முன்னாலும் வந்து நிற்கும். உங்களின் செயல்களின் தீய விளைவினால் நீங்கள் மரணிப்பது மட்டுமின்றி, உங்களின் மனைவி மக்களையும் அதே அழிவிற்கு நீங்கள் உள்ளாக்கி விடுவீர்கள்.

இறைவன் மனிதனை எல்லா படைப்பினங்களையும் விட சிறந்தவனாகவும், மேன்மையானவனாகவும் உருவாக்கி இருக்கின்றான் என்பது இந்தத் தெளிவான வசனங்களின் மூலமாக மிகத் தெளிவாக நிரூபணமாகி விட்டது. மேலும் இறைவனுக்கும், மனிதனுக்கும் மத்தியில் ஊடகமாக இருந்து பணிபுரிகின்ற வானவர்கள், கோள்கள், பூதங்கள் ஆகியவை அவர்களுக்கு இடையில் ஊடகங்களாக இருப்பது அவற்றின் மேன்மையை எடுத்துக் கூறவில்லை. மேலும் அவர் இடைப்பட்ட ஊடகமாக இருப்பதனால் மனிதனுக்கு எந்த கண்ணியத்தையும் வழங்குவதில்லை; மாறாக அத்தகைய கண்ணியமிக்க படைப்பு (ஆகிய மனிதனு) க்கு தொண்டு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவற்றிற்கு கண்ணியம் கிடைக்கின்றது. எனவே உண்மையில் அவை அனைத்தும் தொண்டு செய்யப்படுபவையாக அல்ல;தொண்டு செய்பவையாக இருக்கின்றன. மேலும் இது தொடர்பாக ஹஸ்ரத் சஅதீ ஷீராஸீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் (பாரசீக கவிதையில்) எவ்வளவு அருமையாகக் கூறியிருக்கிறார்கள்!

அதன் பொருள்: மேகம், காற்று, சந்திரன், சூரியன், வானம் ஆகிய இவையனைத்தும், நீ உணவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக பணியில் நியமிக்கப்பட்டுள்ளன. எனவே அதை நீ கவனமற்றவாறு சாப்பிடாதே. இவையெல்லாம் உன்னை கட்டுப்படுபவனாகவும், நன்றியுடையவனாகவும் ஆக்குவதற் காகத்தான்.எனவே நீ கட்டுப்படாதவனாகி விடுவது நீதிக்குப் புறம்பானதாகும்.

பிறகு நாம் மீண்டும் நமது எஞ்சிய உரையின் பக்கம் திரும்பியவாறு கூறுகின்றோம், நாம் முன்னரும் குறிப்பிட்டது போன்று, அல்லாஹ்வின் மலக்குகள் (வானவர்கள்) ஒரே மாதிரியான படித்தரத்தைக் கொண்ட மகிமையையும் மகத்துவத்தையும்

கொண்டிருக்கவில்லை; அவர்களிடம் ஒரே மாதிரியான பணியும் ஒப்படைக்கப்பட வில்லை. மாறாக ஒவ்வொரு வானவரும் தனித்தனி பணிகளை செயல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்றார். நீங்கள் உலகத்தில் எந்த அளவுக்கு மாற்றங்களையும், புரட்சிகளையும் காண்கிறீர்களோ, அல்லது சாத்தியமுள்ள ஆற்றலினால் எந்த அளவுக்கு செயல் வடிவம் பெறுகிறதோ அல்லது எந்த அளவுக்கு ஆன்மாக்களும், உடல்களும் தமது முழுமையான மேன்மைகளை சென்றடை கின்றனவோ அவை அனைத்தின் மீதும் வானத்தின் தாக்கங்கள் வேலை செய்கின்றன. அல்லது ஒரே வானவர் பல்வேறு விதமான ஆற்றல்களின் மீது பல்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறார்.

உதாரணமாக, வானத்திலுள்ள மிகவும் ஒளிமிக்க ஒரு நட்சத்திரத்துடன் தொடர்புடைய, மகத்தான ஒரு வானவராகிய ஜிப்ராயீலிடம் பலவிதமான தொண்டுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த நட்சத்திரத்துடன் அவருக்கு இருக்கும் தொடர்புக்கு ஏற்ப தொண்டுகள் அவரிடமிருந்து வாங்கப்படுகின்றன. எனவே இறைவனின் வஹி (இறையறிவிப்பு) மூலமாக கண்ணியமாக்கப் பட்ட ஒவ்வொரு நபரின் மீது அந்த (ஜிப்ரீல்) வானவர் இறங்குகிறார்.

(இறங்குதல் என்பதன் உண்மை நிலை தாக்கத்தை உருவாக்குதல் என்ற அளவில்தானே தவிர உண்மையிலேயே இறங்குதல் என்பதல்ல என்பதை நினைவிற் கொள்ள வேண்டும் - நூலாசிரியர்)

எனினும் அவருடைய இறங்குதலினால் தாக்கங்களை உருவாக்கும் வட்டம் பல்வேறு விதமான தகுதிகள், பல்வேறு விதமான கொள்ளளவுகளுக் கேற்ப சின்னச் சின்ன அல்லது பெரிய பெரிய வடிவங்களில் விநியோகிக்கப்படுகின்றன. **இதன் ஆன்மீக தாக்கங்களிலேயே மிகப் பெரிய வட்டம், ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் வஹியுடன் தொடர்புடையதாகும்.** இதன் காரணமாகத்தான், இறை ஞானங்களும், உண்மைகளும், தத்துவங்களின் மேன்மைகளும், கருத்துச் செறிவுகளும் திருக்குர்ஆனில் முழுமையாகவும், நிறைவாக வும் காணப்படுகின்றன. இந்த மகத்தான அந்தஸ்து வேறு எந்த வேதத்திற்கும் கிடைக்கவில்லை.





மேலும் நாம் இதற்கு முன்னரும் சுட்டிக் காட்டியிருப்பதைப் போன்று **ஒவ்வொரு வானவரின் தாக்கம் மனிதனின் ஆன்மாவின் மீது இரண்டு வகையில் ஏற்படுகின்றன** என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். **ஒன்று,** கருப்பையில் இருக்கும் நிலைமையில் இறைவனின் கட்டளையினால், பல்வேறு விதமான விதையின் மீது பல்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்துவது. பிறகு, **இன்னொன்று** மனிதன் உருவாகிவிட்ட பின்னர் அவனிடம் மறைந்துள்ள திறமை களை அதன் சாத்தியமுள்ள மேன்மைகள் வரை சென்றடையச் செய்வதற்காக பயன்படும் தாக்கத்தை ஏற்படுத்துவது. இந்த இரண்டாவது வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மை நபிக்காகவும், முழுமை பெற்ற இறைநேசருக்காகவும் இருக்கும்போது அதுவே வஹி (இறையறிவிப்பு) என்ற பெயரால் அழைக்கப் பெறுகிறது. மேலும் ஓர் ஆர்வமுள்ள ஆன்மா தனது இறை நம்பிக்கை எனும் ஒளி மற்றும் இறை நேசம் எனும் ஒளியின் முழுமைத் தன்மையினால் அருள்களின் தலையூற்றாக விளங்குப(வனாகிய இறை)வனுடன் ஓர் நட்புறவான தொடர்பை உருவாக்கிக் கொள்கின்றது. மேலும் இறைவனின் வாழ்வை வழங்கும் அன்பு அ(ந்)த (ஆன்மாவி)ன் நேசத்தின் மீது பிரதிபலிப்பை உருவாக்குகின்றது. மேலும் இந்த எல்லை மற்றும் நேரம் வரை மனிதருக்கு முன்னர் காலெடுத்து வைப்பதற்கு என்ன ஆற்றல் கிடைக்கின்றதோ உண்மையில் அது மனிதன் கருப்பைக்குள் இருக்கும் நிலைமையில் இறைவனின் வானவர்கள் ஏற்படுத்திய மறைமுகமான தாக்கத்தின் விளைவே ஆகும்.

பின்னர் மனிதன், இந்த முதல் தாக்கத்தின் ஈர்ப்பினால் இந்தத் தகுதியைப் பெற்று விடும் போது பிறகு அதே வானவர் புதிதாக ஒளியால் நிரம்பிய தனது தாக்கத்தை அவர் மீது ஏற்படுத்துகிறார். ஆயினும் தன் சார்பாக அல்ல; மாறாக, இடையில் உள்ள ஒரு தொண்டராக இருக்கின்ற காரணத்தால், ஒருபக்கம் தண்ணீரை இழுத்து மறுபக்கம் அந்தத் தண்ணீரை எட்ட வைக்கின்ற ஒரு குழாயைப் போன்று இறைவனின் அருள் எனும் ஒளியை தன்னிடம் ஈர்த்துக் கொள்கிறார். பிறகு, இரு விதமான அன்புகளும் நெருங்கியிருப்பதன் காரணத்தால் மனிதன் ரூஹுல் குத்ஸின் (பரிசுத்த ஆன்மாவின்) குழாய்க்கு அருகில் தன்னை வைத்து விடும் போது உடனே அந்தக் குழாயிலிருந்து வஹியின் அருள் அவருள் விழுந்து விடுகிறது.

அல்லது அந்த நேரத்தில் ஜிப்ரயீல் தனது ஒளிமிக்க நிழலை அந்த ஆர்வம் மிக்க உள்ளத்தில் இட்டு தனது பிம்பமாக ஓர் உருவத்தை அவரிடம் வைத்து விடுகின்றார் எனக் கூறலாம்.

அப்போது வானத்தில் நிலை கொண்டிருக்கும் அந்த வானவரின் பெயர் ஜிப்ராயீல் என்றிருப்பதைப் போன்று பிரதி பிம்பமான அந்த உருவத்தின் பெயரும் ஜிப்ராயீல் என்றே ஆகிறது. அல்லது உதாரணமாக, அந்த வானவரின் பெயர் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மா) என்பதைப் போன்று பிம்பமான அந்த உருவத்திற்கும் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மா) என்றே பெயர் வைக்கப்படுகிறது.

அதற்காக வானவர் மனிதனுக்குள் நுழைந்து விடுகின்றார் என்பதன்று; மாறாக, அவருடைய பிம்பம் மனிதனுடைய உள்ளம் எனும் கண்ணாடியில் தென்படத் தொடங்கி விடுகிறது. உதாரணமாக, நீங்கள் ஒரு தெளிவான கண்ணாடியை உங்கள் முகத்திற்கு முன்னால் வைத்து விடும் போது அந்தக் கண்ணாடியின் அளவின் வட்டத்திற்கேற்ப உங்களுடைய உருவத்தின் பிம்பம் தடையின்றி அதில் விழும். உங்களுடைய முகமும் உங்களுடைய தலையும் கழுத்தை விட்டு துண்டாகி, தனியாகி கண்ணாடியில் வைக்கப்படும் என்பதன்று. மாறாக, எங்கு அது இருக்க வேண்டுமோ அங்குதான் இருக்கும். அதன் பிம்பம் மட்டுமே விழும். மேலும் பிம்பமும் எல்லா இடத்திலும் ஒரே அளவில் விழாது. மாறாக, உள்ளம் எனும் கண்ணாடி எந்த அளவுக்கு பரந்ததாக இருக்குமோ அதே அளவுக்கு ஏற்ப பிம்பம் விழும்.

உதாரணமாக, ஒரு வகையான மோதிரத்தில் பதிக்கப்பட்டுள்ள ஒரு சின்ன, முகம் பார்க்கும் கண்ணாடியில் நீங்கள் உங்கள் முகத்தைப் பார்க்க விரும்பினால், அதிலும் முழு முகமும் தென்படத்தான் செய்யும்; என்றாலும் ஒவ்வோர் உறுப்பும் அதன் உண்மையான அளவைவிட மிகவும் சிறியதாகத் தென்படும். ஆனால் உங்கள் முகத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதற்குப் போதுமான ஒரு பெரிய கண்ணாடியில் நீங்கள் உங்கள் முகத்தைப் பார்க்க விரும்பினால், உங்களுடைய முழு உருவமும், முகத்தின் உறுப்புகளும் தமது உண்மையான அளவில் தென்படும்.

ஜிப்ரயீலின் தாக்கத்தை ஏற்படுத்தும் பண்பிற்கும் இதே





உதாரணம்தான். மிகக் குறைந்த படித்தரத்தைக் கொண்ட வலியுல்லாஹ் (இறை நேசர்) மீதும் ஜிப்ராயீல்தான் வஹியின் (இறையறிவிப்பின்) தாக்கத்தை ஏற்படுத்துகிறார். ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் மீதும் அதே ஜிப்ரயீல்தான் வஹியின் (இறையறிவிப்பின்) தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். ஆயினும் இந்த இரண்டு இறையறிவிப்புகளிலும், மேலே குறிப்பிட்ட சிறிய முகம் பார்க்கும் கண்ணாடிக்கும் பெரிய நிலைக் கண்ணாடிக்கும் உள்ள அதே வித்தியாசம் தான் உள்ளது. அதாவது வெளிப்படையில் அதே ஜிப்ரயீல் வடிவம்தான்; அதன் தாக்கங்களும் அதேதான் என்ற போதிலும் எல்லா இடத்திலும் பிரதிபலிக்கும் தன்மை ஒரே மாதிரியான பரந்த தன்மையும் தூய்மையையும் கொண்டிருப்பதில்லை!

இங்கு, இந்த இடத்தில் நான், தூய்மை என்ற சொல்லையும் குறிப்பிட்டிருக்கின்றேன் என்றால் அது, ஜிப்ரயீலிய தாக்கங்களின் வித்தியாசங்கள் என்பது எண்ணிக்கையைப் பொருத்த அளவில் மட்டுமன்று; மாறாக, தரத்தைப் பொருத்த அளவிலும்தான் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். அதாவது பிரதிபலிப்புக்கு நிபந்தனையாக விளங்கும் உள்ளத்தின் தூய்மை, இறையறிவிப்பு கிடைக்கப் பெறும் அனைத்து நபர்களிடமும் ஒரே தரத்தில் ஒருபோதும் இருப்பதில்லை. எல்லா கண்ணாடிகளும் ஒரே தரமான தூய்மையைக் கொண்டிருப்பதில்லை என்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். சில கண்ணாடிகள் மிக உயர்ந்த அளவுக்கு மெருகூட்டப்பட்டதாகவும், மிகத் தூயதாகவும் இருக்கின்றன. தேவையான அளவுக்கு உருவம் அவற்றில் முழுமையாகத் தென்படுகின்றன. மேலும் சில கண்ணாடிகள் எந்த அளவுக்கு கறை படிந்தவையாகவும், மங்கலானவையாகவும், தூசி படிந்தவையாகவும், புகை படிந்தவையாகவும் இருக்கின்றன வென்றால், அவற்றில் உருவம் தெளிவாக தென்படுவதில்லை. இன்னும் சில கண்ணாடிகள் எந்த அளவுக்கு குறைபாடுள்ளவையாக இருக்கின்றனவென்றால், உதாரணமாக, அவற்றில் இரு உதடுகளும் தென்பட்டால் மூக்கு தென்படுவதில்லை; மூக்கு தென்பட்டால், கண்கள் தென்படுவதில்லை.

எனவே இதே நிலைதான் உள்ளங்கள் எனும் கண்ணாடிக்கும் இருக்கின்றது. எந்த உள்ளம் மிக உயர்தரமான தூய்மை கொண்டதாக

இருக்கின்றதோ அதில் தூய்மையான முறையில் பிம்பம் தெரிகின்றது. மேலும் எது சற்று கறை படிந்ததாக இருக்கின்றதோ அதில் அதே அளவுக்கு கறை படிந்ததாகவே தெரிகின்றது. **மேலும் இந்தத் தூய்மை முழுமையாகவும், நிறைவாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்திற்குக் கிடைத்திருந்தது.** அத்தகைய தூய்மை வேறு எந்த உள்ளத்திற்கும் கிடைக்கவில்லை!

இவ்விடத்தில் இன்னொரு நுட்பமான விஷயத்தை எடுத்துரைப்பதும் அவசியமானதாகும். எல்லா காரணங்களுக்கும் காரண கர்த்தாவாகிய இறைவன் - அவனின் இருப்பையே எல்லா இருப்புகளும் சார்ந்துள்ளன - அப்படிப்பட்ட இறைவன் ஒன்றை உருவாக்குவதற்காக எப்பொழுதாவது பரிபாலனம் செய்தல் என்ற அளவிலோ, அல்லது ஆதிக்கம் செய்தல் என்ற அளவிலோ ஏதாவதொரு தூண்டுதல் செய்யும் போது, எண்ணத்திற் கேற்ப இயக்கும் போது, அந்த இயக்குதல் முழுமையாகவும் நிறைவாகவும் ஏற்பட்டால் அனைத்து இருப்புகளும் இயங்குவதற்கு அது காரணமாகி விடுகின்றது. மேலும் சில பகுதிக்காக அந்தத் தூண்டுதல் இருந்தால் அதற்கேற்பவே உலகத்தின் சில பகுதியில் இயக்கம் உருவாகிவிடுகிறது.

உண்மை நிலை என்னவென்றால் இறைவனுடன், அவனுடைய எல்லா பகைடப்புகளுக்கும், அனைத்து உலகங்களுக்கும் உள்ள தொடர்பு, உடலுக்கு உயிருடன் இருக்கும் அதே தொடர்புடன் ஒப்புமையுடையதாகும். உடலின் அனைத்து உறுப்புகளும் ஆன்மாவின் எண்ணங்களுக்குக் கட்டுப்பட்ட வையாக இருக்கின்றன; ஆன்மா குனிவதன் பக்கமே அ(வ்வுறுப்புகளான)வை குனிகின் றன. இதே மாதிரியான ஒரு தொடர்புதான் இறைவனுக்கும் அவனுடைய படைப்பினங்களுக்கும் இடையில் காணப்படுகின்றன.

நான், ஃபுஸூஸ் நூலை இயற்றிய (முஹ்யுத்தீன் இப்னு அரபி ரஹ்மதுல்லாஹி அலைஹி என்ப) வரைப் போன்று இறைவனைப் பற்றி **கலகல் அஷ்யாஅ வஹுவ அய்னுஹா** (இறைவனே பொருள்களைப் படைத்தான்; மேலும் அவனே அப்பொருள்களாகும்) என்று கூறுவதில்லை. ஆயினும் நான், **கலகல் அஷ்யாஅ வஹுவ கஅய்னிஹா** (இறைவனே பொருள்களைப் படைத்தான்; மேலும் அவன் அப்பொருள்களைப் போன்றவன் ஆவான்) எனக் கண்டிப்பாகக்





கூறுவேன். இந்த உலகம், வழுவழுப்பான கண்ணாடித் துண்டுகளால் தளம் போடப்பட்ட அரண்மனையைப் போன்றதாகும். அதன் கீழ் மகத்தான வலிமை கொண்ட தண்ணீர் ஓடுகின்றது. அவன், தான் விரும்புவதை செய்கின்றான். குறைபாடுள்ள கண்கள் அவற்றை இறைவன் எனக் கருதுகின்றன. அவர்கள், சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் சுயமாக இயங்கக் கூடியவையாகக் கருதுகின்றனர். ஆனால் இறைவன்தான் அவற்றை இயக்குகின்றான்.

ஞானமிக்க இறைவன் எனக்கு இன்னொரு இரகசியத்தையும் விளக்கித் தந்திருக்கின்றான். அதாவது, இந்த எல்லா உலகமும் தனது அனைத்து பகுதிகளுடனும் காரண கர்த்தாவாக விளங்கும் இறைவனின் பணிகள், எண்ணங்கள் ஆகியவற்றை நிறைவேற்று வதற்காக உண்மையிலேயே அவனுடைய உறுப்புகளைப் போன்று இருக்கின்றன. அவை சுயமாக நிலைபெறவில்லை. மாறாக, உடலின் எல்லா ஆற்றல்களும் உயிரின் மூலமாகவே ஏற்படுவதுபோன்று ஒவ்வொரு நேரமும் அந்த மகத்தான ஆன்மாவிலிருந்து ஆற்றலைப் பெறுகிறது. மேலும் அந்த மகத்தான இருப்பு (எனும் இறைவனு)க்கு உறுப்புகளைப் போன்று விளங்கும் இந்த உலகம் - இதில் சில பொருள்கள் இறைவனின் முகத்தின் ஒளி போன்று விளங்குகின்றன. அவை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இறைவனுடைய எண்ணங்களுக்கு ஏற்ப ஒளியாக பயன்படுகின்றன. இன்னும் சில பொருள்கள் அவனுடைய கைகளைப் போன்று இருக்கின்றன. வேறு சில பொருள்கள் அவனுடைய கால்களைப் போன்று இருக்கின்றன. இன்னும் பிற பொருள்கள் அவனுடைய மூச்சு போன்று இருக்கின்றன. சுருக்கமாக. ஒட்டு மொத்தமான இந்த உலகம் இறைவனுக்கு ஓர் உடலைப் போன்று அமைந்துள்ளது. இந்த உடலின் அனைத்து ஒளியும், பொலிவும், அனைத்து வாழ்வும் அதனை உயிருடன் நிலை நாட்டக் கூடிய (இறை) வனாகிய மகத்தான ஆன்மாவுடன் தொடர்புடையதாகும். மேலும் கய்யூம் (நிலைநாட்டக் கூடியவன்) ஆகிய இறைவனுடன் என்ன ஒரு தூண்டுதல் உருவானாலும் கய்யூம் (நிலை நாட்டுபவன்) ஆகிய இறைவன் விரும்புவதைப் போன்ற அதே தூண்டுதல் அந்த உடலின் அனைத்து உறுப்புகளிலோ அல்லது சிலவற்றிலோ உருவாகி விடுகின்றது.

மேற்கூறப்பட்ட விஷயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு வருணனையாக நாம் இவ்வாறு கருதிக் கொள்ளலாம். அதாவது, இவ்வுலகங்களின் கய்யூம் (நிலை நாட்டக் கூடிய இறைவன்) என்பவன் எத்தகைய மகத்தான ஒருவன் என்றால், அவனுக்கு எண்ணற்ற கைகளும், எண்ணற்ற கால்களும் இருக்கின்றன. மேலும் ஒவ்வோர் உறுப்பும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டதும், எல்லையற்ற நீளமும் அகலமும் கொண்டதாகும். மேலும் அந்த மகத்தான இருப்புக்கு உறுப்புகளும் உள்ளன. அவை அண்ட சராசரங்களின் அனைத்து எல்லைகள் வரையிலும் பரவியிருக்கின்றன. மேலும் அவை ஈர்ப்புப் பணியை செய்கின்றன. இந்த உறுப்புகளை வேறு சொற்களில் கூறுவதென்றால், அதற்குப் பெயர்தான் உலகம் என்பதாகும். உலகத்தை நிலை நாட்டக் கூடியவனின் எந்தவொரு இயக்கமும் பகுதியாகவோ, முழுமையாகவோ இயங்கினால் அவனுடைய இயக்கத்துடன் அவனுடைய உறுப்புகளிலும் இயக்கம் தோன்றுதல் ஒரு கட்டாயமானதாகும். மேலும் அவன் தனது எல்லா எண்ணங்களையும் இந்த உறுப்புகளின் மூலமாகவே வெளிப்படுத்துவான். வேறு எந்த வகையாலும் வெளிப்படுத்த மாட்டான்.

எனவே படைப்பினங்களின் ஒவ்வொரு பகுதியும் இறைவனுடைய எண்ணங்களுக்கு கட்டுப்பட்டவாறு, அவனுடைய மறைவான நோக்கங்களை தனது பணிவான முகத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மேலும் முழுமையான தரம் கொண்ட கட்டுப்படுதலினால் இறைவனுடைய எண்ணங்களின் வழியில் மூழ்கிவிடுகின்றது. இதுவே இந்த ஆன்மீக விஷயத்திற்குக் கூறப்படும் பொதுவாக புரியும் தன்மை கொண்ட உதாரணமாகும். மேலும் இந்தக் கட்டுப்படுதல் வெறும் ஆட்சி, பலவந்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது போன்ற ஒன்று ஒருபோதுமன்று. மாறாக, ஒவ்வொரு பொருளிடமும் இறைவனை நோக்கிய ஒரு காந்த ஈர்ப்பு விசை காணப்படுகிறது. ஒருவரின் பல்வேறு உறுப்புகள் அவர் பக்கம் குனிந்திருப்பதைப் போன்றே, ஒவ்வோர் அணுவும் இயல்பாகவே இறைவன் பக்கமே குனிந்திருப்பதாகத் தெரிகின்றது. எனவே இந்த எல்லா உலகமும் மகத்தான அ(ந்த இறை) வனுக்கு உறுப்புகளைப் போன்று அமைந்திருக் கின்றன என்பதுதான் உண்மையாகும்; ஆம் இது முற்றிலும் உண்மையாகும். மேலும் இதன் காரணமாகத்தான் அவன்





அகில உலகங்களின் கய்யூம் (நிலைநாட்டக் கூடியவன்) என அழைக்கப்படுகின்றான். ஏனெனில், உயிர் அதன் உடலை நிலைநாட்டக் கூடியதாக இருப்பதைப் போன்றே இறைவனும் அனைத்து படைப்பினங்களையும் நிலைநாட்டக் கூடியவனாக இருக்கின்றான். அப்படி இல்லாவிட்டால், உலக அமைப்பு முற்றிலும் சீர்குலைந்து விடும்.

அந்த கய்யூம் (ஆகிய நிலை நாட்டக் கூடியவன்) -ன் ஒவ்வோர் எண்ணமும் - அது வெளிப்படையானதாகவோ அல்லது மறை முகமானதாகவோ, மார்க்கத்தைச் சேர்ந்ததாகவோ அல்லது உலகத்தைச் சேர்ந்ததாகவோ இருந்தாலும் - அது இந்தப் படைப்பினங் களின் மூலமாகவே வெளிப்படுகின்றது. இந்த ஊடகங்கள் இன்றி பூமியில் வெளிப்படுகின்ற எந்தவோர் எண்ணமும் இல்லை. இதுதான் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்டு வந்து கொண்டிருக்கின்ற தொன்மையான இயற்கைச் சட்டமாகும். ஆனால் எவர்கள் **மேகங்களின் மூலமாக பூமியில் பொழியும் மழைக்கு நீராவியின் ஊடகம் அவசியம் என்றும்,** மேகம் இல்லாமல் சுயமாகவே தன் வலிமையினால் மழை பொழிவது சாத்தியமில்லை என்றும் **கருதுகிறார்களோ அவர்கள்,** தூய உள்ளங்களின் மீது இறங்கும் **இல்ஹாம் (இறையறிவிப்பு) எனும் மழைக்கு மார்க்கச் சட்டப்படி வானவர்கள் எனும் மேகங்கள் ஊடகமாக இருப்பது அவசியம் என்பதை அறியாமையினால் பரிகசிக்கின்றனர்.** அத்தகைய மக்களின் புரியும் திறன் (?) பற்றி நமக்கு மிகவும் வியப்பு ஏற்படுகிறது! இறைவன் வானவர்கள் எனும் ஊடகமில்லாமல் சுயமாகவே இல்ஹாமை (இறையறிவிப்பை) இறக்க முடியாதா என்ன ? என அவர்கள் கேட்கின்றனர்.

காற்று எனும் ஊடகம் இல்லாமல் ஓசையைக் கேட்பது இயற்கைச் சட்டத்திற்கு மாறுபட்டது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் எந்தக் காற்று இறைவனின் ஓசையை ஆன்மீகமான முறையில் இறையறிவிப்பைப் பெறுபவர்களின் உள்ளங்கள் வரை சென்றடைய வைக்கின்றதோ அந்த இயற்கைச் சட்டத்தை அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். வெளிப்படையான கண்களின் பார்வைப் புலனுக்கு சூரிய ஒளி தேவை என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் ஆன்மீகக்

கண்களுக்கு வானத்தின் ஓர் ஒளியின் தேவையைப் பற்றி அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை.

இப்போது, இந்த உலகம் தனது வெளிப்புறமான, உட்புறமான அனைத்து ஆற்றல்களுடன் ஏக இறைவனுக்கு உறுப்புகளைப் போன்று அமைந்திருக்கின்றன என்பதும், இறைவனின் ஒவ்வொரு பொருளும் தத்தமது சந்தர்ப்ப, சூழ் நிலைக்கேற்ப உறுப்புகளின் பணியையே செய்கின்றது என்பதும், இறைவனின் ஒவ்வோர் எண்ணமும் இந்த உறுப்புகளின் மூலமாகவே வெளிப்படுகின்றது; அந்த ஊடகங்கள் இன்றி எந்த ஓர் எண்ணமும் வெளிப்படுவதில்லை என்பதும் இறைவனின் சட்டம் எனத் தெரியும்போது, தூய உள்ளங்களில் இறங்கும் இறைவனின் வஹி (இறையறிவிப்பு) யுடன் ஜிப்ராயீல் (வானவரு) க்கு இருக்கும் தொடர்பு இஸ்லாமிய மார்க்கச் சட்டத்தில் எவ்வாறு கட்டாயமான ஒரு விஷயமாகக் கருதப்பட்டிருக் கின்றதோ, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அந்தத் தொடர்பும், நாம் இப்போது குறிப்பிட்டு வந்திருக்கின்ற அதே உண்மையான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதன் விபரம் என்னவெனில், மேற் கூறப்பட்ட இயற்கைச் சட்டத்திற் கேற்ப, இறையறிவிப்பு இறங்குவதற்கும் அல்லது இறையறிவிப்பின் திறமையை வழங்குவதற்கும் இறைவனின் ஒரு படைப்பினம் அவனுடைய இல்ஹாமையும் (அறிவிப்பையும்) ஆன்மீக எண்ணத்தையும் தெளிவாக வெளிக் கொணர்வதற்காக ஓர் உறுப்பைப் போன்று மாறி பௌதீக எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு தொண்டற்றுவது போன்று தொண்டாற்றுவது அவசியமானதாகும்.

இந்த உறுப்பைத்தான் வேறு சொற்களில் ஜிப்ராயீல் என்ற பெயரால் கூறப்படுகிறது. அது மகத்தான அந்த இறைவனின் அசைவிற்குக் கட்டுப்பட்டவாறு உண்மையிலேயே ஓர் உறுப்பைப் போன்று தடையின்றி இயங்கத் தொடங்கி விடுகின்றது.

அதாவது, நேசம் காட்டுகின்ற உள்ளத்தின் பக்கம், இறைவன் நேசத்துடன் திரும்பும் போது தற்போது நாம் மேலே குறிப்பிட்ட விதி முறைக் கேற்ப, மூச்சுக்கு காற்றுடனும், கண்ணுக்கு ஒளியுடனும்





இருக்கும் தொடர்பைப் போன்ற ஒரு தொடர்பை இறைவனுடன் கொண்டுள்ள ஜிப்ராயீலுக்கும் அதன் பக்கம் உடனேயே இயங்க வேண்டி வருகிறது. அல்லது அசல் அசைவதனால், நிழல் அசைவதும் இயல்பாகவே அவசியமானதாக இருப்பதைப் போன்றே, இறைவனின் தூண்டுதலுடன் ஜிப்ராயீலும் தன்னையுமறியாமல், சுயமாகவே அதே போன்று தூண்டுதலுக்குட்பட்டு விடுகின்றார் என்று கூறலாம். எனவே ஜிப்ராயீலிய ஒளி இறைவனின் ஈர்ப்பு மற்றும் தூண்டுதல், ஒளிமிக்க ஊதுதல் ஆகியவற்றால் இயங்கத் துவங்கிவிடும் போது அத்துடனேயே அதன் ஒரு பிரதிபலிப்புச் சித்திரம் - அதனை ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மா) என்ற பெயரிலேயே அழைக்க வேண்டும் - அது உண்மை அன்பரின் உள்ளத்தில் பிரதிபலித்து விடுகிறது. மேலும் அது உண்மையான அன்பின் பிரிக்க முடியாத ஒரு பண்பாகிவிடுகின்றது. அப்போது இந்த ஆற்றல் இறைவனின் குரலைக் கேட்பதற்கு காதாக பயன்படுகின்றது; மேலும் அவனுடைய அற்புதங்களைக் காண்பதற்கு கண்களாக மாறிவிடுகின்றது; மேலும் அவனுடைய இல்ஹாம்கள் (இறையறிவிப்புகள்) நாவில் வெளிப்படுவதற்கு எத்தகைய சூடான தூண்டுதலாக பயன்படுகிற தென்றால், அதுதான் நாவு எனும் சக்கரத்தை இல்ஹாமிய (இறையறிவிப்பின்) வார்த்தைகளில் விரைவாக ஓட வைக்கின்றது.

இந்த ஆற்றல் உருவாகாதவரை மனிதனின் உள்ளம் குருடரைப் போன்றும், நாவு ஓடுகின்ற எஞ்சினை விட்டும் தனியாகக் கிடக்கும் தொடர்வண்டியைப் போன்றும் இருக்கிறது. ஆனால், ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மா) என்ற பெயரால் அழைக்கப்படும் இந்த ஆற்றல், ஒவ்வோர் உள்ளத்திலும் சராசரியாகவோ, சரிசமமாகவோ உருவாவதில்லை; மாறாக, மனிதனின் நேசம் முழுமையானதாகவோ அல்லது குறைபாடுள்ளதாகவோ இருப்பதைப் போன்றே அதே அளவிற்கேற்ப இந்த ஜிப்ராயீலிய ஒளியும் அதன் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்.

இரண்டு அன்புகள் இணைவதால், ஜிப்ராயீலிய ஒளியின் பிரதிபலிப்பால் மனிதனின் உள்ளத்தில் உருவாகிவிடும் ரூஹுல் குத்ஸ் என்னும் பரிசுத்த ஆன்மாவின் ஆற்றல் இருக்கிறது என்பதற்காக, மனிதன் எந்நேரமும் இறைவனின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதோ, அல்லது ஆன்மீகக்

காட்சியாக எதையாவது பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதோ கட்டாயமில்லை. மாறாக, இது வானத்தின் ஒளியைப் பெறுவதற்காக அருகில் கொண்டு வரும் காரணிகளைப் போன்றதாகும். அல்லது ஆன்மீகக் கண்கள் ஆன்மீகக் காட்சியைக் காண்பதற்காகவோ, அல்லது ஓர் ஆன்மீகக் காற்று ஆன்மீகக் காதுகள் வரை ஓசையை சென்றடைய வைப்பதற்காகவோ அல்லாஹ்வின் புறமிருந்துள்ள ஒன்றாகும் இது எனக் கூறலாம்.

ஒரு பொருள் முன்னால் இல்லாதவரை ஒளி மட்டும் எதையும் காட்டி விட முடியாது என்பதும், பேசுபவரின் வாயிலிருந்து வார்த்தை வெளிவராதவரை வெறும் காற்று மட்டும் காதுகள் வரை எதையும் எட்ட வைத்து விட முடியாது என்பதும் வெளிப்படை! எனவே இந்த ஒளி அல்லது காற்று ஆன்மீகப் புலன்களுக்காக புறக் கண்களுக்கு சூரியனின் ஒளியைப் போன்று வானத்தின் ஓர் ஒத்துழைப்பாக மட்டுமே வழங்கப்படுகிறது. மேலும் இறைவன் தனது வார்த்தையை, இறையறிவிப்பு வழங்கப்படுபவரின் உள்ளம் வரை சென்றடைய வைக்க கவனம் கொள்ளும்போது இறைவனின் அந்த பேசும் அசைவினால் உடனேயே ஜிப்ராயீலிய ஒளியில் இறையறிவிப்பு வழங்கப்படுபவரிடம் இறை வார்த்தையை இடுவதற்காக ஓர் ஒளியின் அலை அல்லது காற்றின் அலை அல்லது இறையறிவிப்பு வழங்கப்படுபவரின் நாவை அசைய வைப்பதற்காக ஒரு வெப்பத்தின் அலை உருவாகி விடுகிறது. மேலும் இந்த அலை பாயுதலினால் அல்லது இந்த வெப்பத்தினால் தடையின்றி அந்த இறை வார்த்தை இறையறிவிப்பைப் பெறுபவரின் கண்களுக்கு முன்னால் எழுதப்பட்டவாறு தென்படுகிறது; அல்லது காதுகள் வரை அ (ந்த இறை)வனின் வார்த்தை சென்றடைகின்றது; அல்லது நாவில் அந்த இல்ஹாமிய (இறையறிவிப்பின்) வார்த்தைகள் வெளிப்படுகின்றன. மேலும் இல்ஹாமுக்கு முன்பே ஆன்மீக உணர்வு மற்றும் ஆன்மீக ஒளி ஓர் ஆற்றலைப் போன்று கிடைக்கின்றது. இல்ஹாம் இறங்குவதற்கு முன், இல்ஹாமை ஏற்றுக் கொள்வதற்கான வலிமை உருவாவதற்காகவே (ஆன்மீக உணர்வு, ஆன்மீக ஒளி ஆகிய) இவ்விரு ஆற்றல்களும் வழங்கப்படுகின்றன. ஏனெனில் இறையறிவிப்பைப் பெறுபவரின் உள்ளம் ஆன்மீக உணர்வை இழந்தவராகவோ, அல்லது பரிசுத்த ஆன்மாவின் ஒளி உள்ளத்தின்





கண்ணை எட்டாமலோ இருக்கும் நிலையில் இல்ஹாம் (இறையறிவிப்பு) இறக்கப்பட்டால் அவர் இறையறிவிப்பை எந்தக் கண்களின் தூய ஒளியினால் காண முடியும்? எனவே இந்தத் தேவையின் காரணமாக இவை இரண்டும் முன்னரே இறையறிவிப்பைப் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் இந்த ஆய்வின் மூலமாக **வஹி (இறையறிவிப்பு) தொடர்பாக ஜிப்ராயீலுக்கு மூன்று பணிகள் உள்ளன** என்பதையும் படிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம்.

**ஒன்று,** எவருடைய இயல்பை அல்லாஹ் தனது (சுயமாக அருள்பாலித்தல் எனும்) ரஹ்மானிய்யத் பண்பின் அடிப்படையில் - அதில் மனித செயலுக்கு எந்தத் தொடர்பும் இல்லை- இறையறிவிப்பைப் பெறத் தகுந்த இயல்பாக ஆக்க விரும்புகிறானோ அப்படிப்பட்டவர் தோன்றுவதற்காக கருப்பையில் விந்து விழும் போது, விந்தாக இருக்கும் அந்த நிலையிலேயே அவர் மீது ஜிப்ராயீலிய ஒளியின் நிழலை இறைவன் இட்டு விடுகின்றான். அப்போது அப்படிப்பட்டவரின் இயல்பு அல்லாஹ்வின் புறமிருந்து இறையறிவிப்பைப் பெறும் சிறப்புத் தன்மையை உருவாக்கிக் கொள்கிறது. மேலும் இல்ஹாமிய (இறையறிவிப்பின்) உணர்வு அதற்குக் கிடைத்து விடுகிறது.

ஜிப்ராயீலின் **இரண்டாவதுபணி,** இறை அடியாரின் அன்பு, இறைவனுடைய அன்பின் நிழலின் கீழ் வரும் போது இறைவனுடைய படைத்து காத்தோம்பும் பண்பின் தூண்டுதலின் காரணமாக ஜிப்ராயீலிய ஒளியிலும் ஒரு தூண்டுதல் உருவாகி உண்மையான (இறை) நேசரின் உள்ளத்தில் அந்த ஒளி விழுகிறது. அதாவது, அந்த ஒளியின் நிழல் உண்மையான (இறை) நேசரின் உள்ளத்தில் வீழ்ந்து, ஜிப்ராயீலின் ஒரு பிரதி பிம்பம் அவரிடம் உருவாகி விடுகின்றது. அது ஓர் ஒளி அல்லது காற்று அல்லது வெப்பத்தின் வேலையைச் செய்கிறது. மேலும் இறையறிவிப்பைப் பெறும் திறமை கொண்டதாக இறையறிவிப்பைப் பெறுபவருக்குள் அது இருக்கின்றது. அதில் ஒன்று ஜிப்ராயீலின் ஒளியில் மூழ்கி விடுகின்றது; மற்றொன்று இறையறிவிப்பைப் பெறுபவருக்குள் நுழைந்து விடுகிறது. அதனைப் பிற சொற்களில் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மா) என்றோ அல்லது அதன் பிரதி பிம்பம் என்றோ கூறலாம்.

ஜிப்ராயீலின் **மூன்றாவதுபணி,** இறைவனிடமிருந்து ஏதாவது வார்த்தை வெளிப்படும் போது, காற்றைப் போன்று அலையாக மாறி அந்த வார்த்தையை உள்ளத்தின் காதுகள் வரை சென்றடைய வைப்பதாகும். அல்லது ஒளியின் வடிவத்தில் ஒளிர்ந்து அதனைப் பார்வைக்கு முன்னால் கொண்டு வந்து விடுவதாகும். அல்லது தூண்டுகின்ற ஓர் அசைவின் வடிவத்தில் துரிதத்தன்மையை உருவாக்கி நாவை, இல்ஹாமிய (இறையறிவிப்பின்) சொற்களின் பக்கம் அசைய வைப்பதாகும்.

இவ்விடத்தில் நான், மற்ற மக்களை விட வலிமார்கள், (இறை நேசர்கள்) நபிமார்கள் (இறை தூதர்கள்) ஆகியோரின் இறையறிவிப்புகளுக்கும், ஆன்மீகக் காட்சிகளுக்கும் என்ன சிறப்புத்தன்மை இருக்கிறது என்ற சந்தேகங்களிலும், ஐயப்பாடுகளிலும் மூழ்கியிருக்கின்ற மக்களின் சந்தேகங்களையும் நீக்க விரும்புகிறேன். ஏனெனில் நபிமார்கள், வலிமார்களுக்கு மறைவான செய்திகள் கிடைக்கின்றன என்றால், மற்றவர்களுக்கும்தான் சில நேரங்களில் கிடைக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், சில தீய நடத்தையுடையவர்களுக்கும், மிக மோசமான நடத்தையுடையவர் களுக்கும் உண்மையான கனவுகள் வருகின்றன. இன்னும் கூறப்போனால், சில கீழ்த்தரமானவர்களும், தீயோர்களும் தமது சில கனவுகளைக் கூறுகின்றனர். கடைசியில் அவை நிறைவேறுகின்றன.

எனவே, தம்மை நபி (இறை தூதர்) என்றோ, அல்லது சில குறிப்பிட்ட தரத்தை கொண்ட நபர் என்றோ கருதுகின்ற இத்தகையவர்களுடன், தீய நடத்தைகளிலும், புகழ் பெற்று (?) விளங்குகின்ற துர் நடத்தையுடைய மக்களும் அடங்குவர் என்றால், இறை தூதர்களுக்கும், இறை நேசர்களுக்கும் என்ன சிறப்பு எஞ்சியிருக்கிறது? என சிலர் கேட்கின்றனர்.

அதற்கு விடையாக நான் கூறுவது என்னவென்றால், உண்மையில் இந்தக் கேள்வி, எந்த அளவுக்கு தன் உண்மை நிலைமையைக் கொண்டிருக்கிறதோ அவை அனைத்தும் உண்மையானதும், சரியானதும் ஆகும். மேலும் ஜிப்ராயீலிய ஒளியின் 46-ஆவது பகுதி முழு உலகிலும் பரவி இருக்கிறது. அதை விட்டும் எந்தவொரு தீயவரும், துர் நடத்தையுடையவரும், மிகக் கீழ்த்தரமான நடத்தை கொண்டவரும் வெளியில் இல்லை! இன்னும்





சொல்லப்போனால், வேசிகளின் குழுவைச் சேர்ந்த மிகவும் துர் நடத்தையுடைய- தன் இளமையை முழுவதும் தீய நடத்தையிலேயே கழித்த ஒரு பெண், சில நேரத்தில் உண்மையான கனவைப் பார்த்து விடுகிறாள் என்பது அனுபவத்தில் அறிந்த உண்மை என்பது வரை நான் ஏற்றுக் கொள்கிறேன். இத்தகைய பெண் இரவில் குடித்து விட்டு ,அந்நிய ஆணுடன் படுக்கையில் கிடக்கும் போது கூட ஏதாவதொரு கனவைப் பார்க்கிறாள். அது உண்மையாகி நிறைவேறியும் விடுகின்றது என்பது இன்னும் ஆச்சரியமான விஷயமாகும்!

ஆனால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இதன் தலைமையகமாக விளங்கும் ஜிப்ராயீலிய ஒளி சூரியனைப் போன்று, பரவியுள்ள முழு உலகத்திலும் அவரவர்களின் தகுதிக்கேற்ப தனது தாக்கத்தை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது. மேலும் முற்றிலும் இருளாக இருக்கும் எந்தவொரு மனித ஆன்மாவும் உலகத்தில் இல்லை. குறைந்த பட்சம் உண்மையான ஒரு நாட்டுப் பற்றும், உண்மையான ஒரு நேசத்திற்குரியவரும் குறைவிலும் குறைவான இயல்பைக் கொண்டவரிடமும் காண முடிகிறது. இந்த நிலையில் முழு மனித குலத்திடமும் - எது வரையென்றால் இவர்களில் பைத்தியக்காரர்களிடமும் ஓரளவுக்கு ஜிப்ராயீலிய தாக்கம் ஏற்படுவது அவசியமானதாக இருந்தது; அது இருக்கவும் செய்கிறது.

ஏனெனில் பைத்தியக்காரர்கள் என்று பாமர மக்களால் அழைக்கப்படும் இறை சிந்தனையில் மெய்மறந்தவர்கள் கூட தமது நிலைமைகளில் தமது ஒரு வகையான உலக துண்டிப்பின் காரணமாக ஜிப்ராயீலிய ஒளியின் கீழ் சென்று விடுகின்றனர். அப்போது அதன் ஒளி ஓரளவிற்கு அவர்களின் அகக் கண்களில் விழும் போது, அதன் மூலம் அவர்கள் இறைவனின் மறைமுகமான ஆதிக்கங்களை ஓரளவுக்குக் காணத் துவங்கி விடுகின்றனர்.

ஆயினும் அப்படிப்பட்ட கனவுகள் அல்லது காட்சிகளினால் நுபுவ்வத் (இறை தூதுத்துவத்) திற்கோ, விலாயத் (இறை நேச)திற்கோ எவ்வித பங்கமும் ஏற்படுவதில்லை. (இறை தூதர்கள், இறை நேசர்களாகிய) அவர்களின் உயர் தன்மையில் எவ்வித வித்தியாசமும் ஏற்பட்டு விடுவதில்லை. வியப்பூட்டும் அத்தகைய எந்தவொரு

குழப்பமும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஏனெனில் இடையில் எத்தகைய தெளிவான வித்தியாசம் இருக்கிறதென்றால், அதனை வெளிப்படையான முறையில் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மனிதனும் புரிந்து கொள்ள முடியும்.

அது என்னவெனில், சிறப்பிற்குரியவர்களின் கனவுகளும், ஆன்மீகக் காட்சிகளும், பொதுவான மக்களின் கனவுகளும், ஆன்மீகக் காட்சிகளும் தமது தகுதிகளின் அளவிலும், எண்ணிக்கையின் அளவிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒருபோதும் சரிசமமானவை அல்ல. இறைவனின் சிறப்பிற்குரிய அடியாராக இருப்பவர்கள் வழக்கத்திற்கு மாற்றமான முறையில் (இறைவனிடமிருந்து) மறைமுகமான செய்திகளைப் பெறுதல் என்ற இந்த இறையருளிலிருந்து பங்கைப் பெறுகின்றனர். (இறைவனிடமிருந்து கிடைக்கும் இறையறிவிப்புகள், ஆன்மீகக் கனவுகள் ஆகிய) இந்த இறையருள்களில் உலகம் பங்கு பெற்றிருப்பதற்கான உதாரணம், காலத்தின் மன்னருடைய கருவூலத்திற்கும் ஒரு பிச்ரீ3 சக்காரர் ஒரு வீட்டின் கதவருகில் பெறும் ஒரு பைசாவிற்கும் உள்ள வித்தியாசமாகும்.

ஆனால் அற்பமான இந்த ஒப்புமையினால் மன்னரின் மகத்துவத்திற்கு எவ்வித இழப்பும் ஏற்படவும் செய்யாது; அந்தப் பிச்சைக்காரரின் தரம் உயர்ந்து விடவும் முடியாது என்பது வெளிப்படை! மேலும் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், இந்த அற்ப ஒப்புமை, இரவில் ஒளிரும் ஒரு பூச்சியாகிய மின்மினிப் பூச்சி சூரியனுடன் கொண்டிருக்கும் மிக அற்ப ஒப்புமை போன்றதாகும். இந்த (அற்ப) ஒப்புமையின் காரணமாக அ(ந்த மின்மினிப் பூச்சியான)து சூரியனின் கண்ணியத் திலிருந்து எந்தப் பங்கையாவது பெற்று விட முடியுமா?

எனவே, எல்லா சிறப்புகளும் அதன் தகுதிகளின் அளவு மற்றும் எண்ணிக்கையின் அளவிற்கேற்ப கிடைக்கும் மேன்மையின் உயர்ந்த படித்தரத்திற்கு ஏற்ப உருவாகின்றன. அவ்வாறல்லாமல், ஒருவர் ஓர் எழுத்தைக் கற்றுக் கொண்டதனால் கல்வியில் பட்டம் பெற்ற ஒருவருக்கு சமமாகி விட மாட்டார். அல்லது ஒரு கவிதை வரியை வடித்ததனால், பெரும் கவிஞர்களுக்கு சமமானவர் என அழைக்கப்படவும் மாட்டார். **அற்ப ஒப்புமையையாவது கொண்டிராத**





**எந்த வகையான ஓர் அறிவோ, ஆட்சியோ இல்லை!** ஒரு மன்னர் முழு உலகத்தையும் ஆட்சி செய்கிறார் என்றால், அவ்வாறே ஒரு கூலித் தொழிலாளியும் தனது குடிசையில் தன் மனைவி மக்களுக்கு அதிகாரியாக விளங்குகிறார் !

இறைவன் நல்லடியார்களுக்கும், தீயோர்களுக்கும் இடையில் ஏன் ஒப்புமையை வைத்தான்? கவனமற்றவர்களுக்கு மறைவான செய்திகளை தெரிவித்தல் என்ற இந்த இறையருளிலிருந்து ஒரு பங்கை விதையாக ஏன் வழங்கினான் என்ற ஐயப்பாடு மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது.

இதற்குரிய விடை என்ன வென்றால், (சாதாரண மக்களையும்) குற்றப்படுத்து வதற்காகவும், சான்றை முழுமைப் படுத்துவதற்காகவும் அவ்வாறு செய்துள்ளான். (இறையறிவிப்பு, ஆன்மீகக் கனவு ஆகிய) இதை மறுக்கின்ற ஒவ்வொருவரும் இந்த அடிப்படையான ஒப்புமையின் காரணமாக முழுமை பெற்றவர்களின் நிலைமைக்கு சாட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்துள்ளான். ஏனெனில் (சாதாரண மக்களைச் சேர்ந்த) அவர், இத்தகைய முழுமை பெற்ற இறையாடியார்களின் நாவிலிருந்து கேட்கின்ற இவ்விஷயங்களின் முன்மாதிரியை, அவர் தனது குறுகிய தகுதியின் வட்டத்திற்குள் ஓரளவுக்குக் காண்கின்றார். எனவே, இந்த சிறிய அற்புத நிகழ்வின் காரணமாக, அவர் தனது உண்மையான உள்ளத்தால், அந்த இல்ஹாமிய விஷயங்களை முற்றிலும் அசாத்தியமானவையாகக் கருதுவது அவருக்கு சாத்தியமில்லை.

எனவே, இந்த ஆன்மீக சிறப்புத் தன்மையின் சிறிதளவிலான ஒரு முன்மாதிரியை அவர் தன்னகத்தே கொண்டிருப்பதன் காரணமாக அவர் இறைவனின் குற்றப்பிடியின் கீழ் இருக்கின்றார். அதன் காரணமாக அவர் (இறையறிவிப்பு, இறைவன் புறமிருந்துள்ள ஆன்மீகக் காட்சிகள் ஆகியவற்றை) மறுக்கும் பட்சத்தில், அவர் பிடிக்கப்படுவார்.

இன்றைய ஆரியர்கள், இறைவன் நான்கு வேதங்களையும் இறக்கிவிட்டுப் பின்னர் ஒரேயடியாக இறையறிவிப்பை நிரந்தரமாக சுருட்டி வைத்து விட்டான் எனக் கருதுகின்றனர். ஆனால் இறைவனின் இயற்கைச் சட்டம் அவர்களை (இவ்விஷயத்தில்) குற்றப் படுத்துகின்றது. மறைவான செய்திகள் வெளிப்படும் இந்த தொடர்

தற்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் தங்கள் கண்களாலேயே கண்டு விடுகின்றனர். அவர்களில் தீயவர்கள் கூட எப்போதாவது உண்மையான கனவுகளைக் காண்கின்றனர். எனவே எந்த இறைவன் தனது ஆன்மீக அருளை இறக்குவதிலிருந்து இந்த காலத்தின் தீயவர்கள், உலகவாதிகளையும் விலக்கி வைக்கவில்லையோ, முழுமையான ஒப்புமை காணப்படாத போதிலும் அவர்கள் மீதும் எப்போதாவது அருளின் துளிகளை இறக்குகின்ற போது இறைவனின் திருப்திப் படி நடக்கின்ற, அவனுடன் முழுமையாகவும் நிறைவாகவும் ஒப்புமை கொண்டிருக்கின்ற தனது நல்லடியார்களின் மீது எதையும் இறக்க மாட்டானா என்ன?

இந்த அடிப்படையான ஒப்புமையில் உள்ள ஓர் இரகசியம் என்னவெனில், ஒவ்வொருவரும் அவர் எவ்வளவு தீய வராகவும், தீய நடத்தையுடையவராகவும், இறை மறுப்பாளராகவும், கொலையாளியாகவும் இருந்தாலும் இந்த ஒப்புமையைப் பற்றி சிந்திப்பதன் மூலம், இறைவன் தன்னை நாசமாக்குவதற்காகப் படைக்கவில்லை; மாறாக, இறைவன் தன்னிடம் முன்னேற்றத்திற்கான வழியை வைத்திருக் கின்றான்; மேலும் அதற்கு அடிப்படையாக தனக்கும் ஓர் அடையாளத்தைக் கொடுத்திருக்கின்றான். அதில் அவர் முன்னேறிச் செல்ல முடியும் என்பதை அவர் புரிந்து கொள்ளட்டும் என்பதற்காகவே வழங்கியுள்ளான்.

மேலும் அவர் இயல்பாகவே இறைவனின் அருள் எனும் உணவிலிருந்து விலக்கப்பட்டவர் அல்லர். ஆயினும், அவர் தாமாகவே தவறான வழியை மேற்கொண்டு தம்மிடம் வைக்கப்பட்டுள்ள அந்த ஒளியை பயன்படுத்தாமல் விட்டு விடுவதன் மூலமாக தாமாகவே இழப்பிற்குரியவராகி விடலாம். மேலும் ஈடேற்றம் பெறுவதற்கான வழிகளாகிய அந்த இயல்பான வழிகளை வேண்டுமென்றே அவர் விட்டு விட்டால் அது அவர் தமக்காக தாமே உருவாக்கிக் கொண்டதாகும். அதன் தீய விளைவை அவர் அனுபவிக்க வேண்டியது வரும்.

குறிக்கோள் பற்றிய விளக்கம்

குறிக்கோள் பற்றிய விளக்கம்